அகர வரிசையில்

வேதாகம பெண்கள்

(ஓர் அறிமுகம்)



ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரையுள்ள சுமார்
170 பெயர் சொல்லப்பட்ட பெண்களின் வாழ்க்கைக்
குறிப்புகள் அடங்கிய முழுமையான படைப்பு

சகோதரி **டயனா சாலொமோன்**

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

அகர வரிசையில் வேதாகம பெண்கள்

(ஒரு அறிமுகம்)

சகோதரி. டயனா சாலொமோன்

Published by

THE SCRIBE OF JESUS

AGARA VARISAYIL VEDHAGAMA PENGAL
PUBLISHED IN THE YEAR 2016

Rs. 60/- Per Copy

Printed at : Jesus Printers
Chennai

Published by : The Scribe of Jesus
9/129/ 'B' Type Sidco Nagar,
Villivakkam, Chennai - 600 049.
Phone : 044-43504812
Cell : 9551746677

முகவுரை

வேதாகமம் ஒரு அரிய பெரும் பொக்கிஷமாகும். அந்த பொக்கிஷத்தில் விலையேறப் பெற்ற முத்துக்களாக பெண்கள் ஜொலிக்கிறார்கள். வேதாகமத்தின் ஒவ்வொரு பெண்ணும் நமக்கு ஒவ்வொரு பாடத்தை கற்றுக் கொடுக்கிறார்கள்.

இன்றைய நாட்களில் பெண்கள் எல்லா துறையிலும் சாதித்து தங்கள் திறமையை நிரூபித்து வருகிறார்கள். ஆனால் வேதாகம காலக்கட்டத்திலோ பெண்களுக்கு அத்தனை முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆகவே தான் அவர்களை பற்றி அதிக தகவல்களும் விளக்கங்களும் வேதத்தில் இடம் பெறவில்லை. அதனால்தான் வஸ்தி, சாராள், யூதாவின் மருமகளாகிய தாமார் போன்றோர் இந்நாட்களில் தவறாக சித்தரிக்கப்படுகிறார்கள். வேதாகம காலகட்டத்தின் பின்னனியை அறியாததே இதற்கு காரணம். எனவே, இப்புத்தகத்தில் ஒவ்வொரு பெண்ணைப்பற்றிய பின்னனி தகவல்களை வேத ஆதாரத்துடன் எழுதியிருக்கிறேன்.

வேதத்தில் பெண்கள் நன்மைக்கு மாத்திரமல்ல, தீமைக்கும் உதாரணமாயிருக்கிறார்கள். ஏரோதியாள், பெர்னீகேயாள், யேசபேல், அத்தாலியாள், கஸ்பி போன்றோர் தீமைக்கு சில உதாரணங்கள் ஆவர். எஸ்தர், ரூத், அன்னாள், மரியாள் போன்றோரின் நற்குணங்கள் நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் வஸ்தி, தாமார், ரிஸ்பாள், உல்தாள், ரெபேக்காளின் தாதியாகிய தெபோராள் போன்றோரின் நற்குணங்கள் என்னை அதிகமாய் கவர்ந்தது!

இப்புத்தகத்தை எழுதின பிறகு அக்காலத்து வேதாகம பெண்கள் இன்றைய சமுதாயத்திற்கு வழிகாட்டிகளாய், உதாரணங்களாய் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது எனக்கு தெளிவாக விளங்குகிறது. பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படாத அந்த சூழலிலேயே அவர்களால் இவ்வளவு அதிகமாய் சாதிக்கவும், தங்கள் சூழ்நிலைகளை மேற்கொள்ளவும், தைரியசாலிகளாய் வாழவும் முடியும் என்பதை நிரூபித்திருக்கிறார்கள். இஸ்ரவேல் வேவுக்காரரை மறைத்து வைத்த ராகாப், சிசெராவின் நெற்றியில் ஆணி அடித்த யாகேல், தன் பிள்ளைகளின் உடலைக் காப்பாற்ற அரும்பாடுபட்ட ரிஸ்பாள், இயேசுவின் கல்லறைக்கு இருட்டோடே கந்தவர்க்கமிட வந்த பெண்கள், தன் குலத்தை தழைக்க செய்யவும், தன் கற்பை காப்பாற்றவும் ஞானமாய் திட்டமிட்ட தாமார், தன் கௌரவத்தையும் தன்மானத்தையும் காப்பாற்றிக்கொள்ள தன் ராஜவாழ்க்கையையே இழக்க துணிந்த வஸ்தி என இந்த தைரியசாலிகளின் பட்டியல் நீண்டுக்கொண்டே போகும்.

இதுவரை மோசேயைப் பற்றியும், தாவீதைப் பற்றியும், சாலொமோனைப்பற்றியும் அதிகமாய் பேசின நாம் இனி இவர்களைப் பற்றியும் பேசத்துவங்குவோம். இஸ்ரவேலின் சரித்திரத்தில் புதைக்கப்பட்ட இப்பெண்களின் சாதனைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வர வேண்டியது இக்காலகட்டத்தில் மிகவும் அவசியமாயிருக்கிறது.

சகோதரி. **டயனா சாலொமோன்**
ஆசரியர்

ஆசிரியரைப்பற்றி......

சகோதரி டயனா சாலொமோன் அவர்கள் சிறு வயதிலிருந்தே தேவனை நேசித்து துதித்து பாடும் பழக்கமுடையவர். அவருடைய தாயார் அவர் கருவில் இருக்கும் போதே அவரை கர்த்தருடைய ஊழியத்திற்கென்று ஒப்புக் கொடுத்தார். சிறுவயதிலிருந்தே பாரம்பரிய கிறிஸ்தவ பழக்கவழக்கங்களுடன் பக்தி வைராக்கியமாய் வளர்க்கப்பட்டார். தனது தாய் சபையாகிய தமிழ் சுவிசேஷ லுத்தரன் சபையிலே சிறுவர் ஊழியம், வாலிபர் ஊழியம், பாடகர் குழு என அனைத்திலும் ஈடுபட்டு கர்த்தருக்கென்று ஊழியம் செய்து வந்தார். தனது 16வது வயதில் இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் எடுத்து பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் வரத்தையும் பெற்றுக்கொண்டார்.

இராணிமேரி கல்லூரியல் ஆங்கில இலக்கியத்தில் இளங்கலை பட்டப்படிப்பையும், ஹிந்தூஸ்தான் வேதாகம கல்லூரியில் (HBI) இறையியல் பட்டப்படிப்பையும் படித்தார். பின்னர் இயேசு உன்னை தேற்றுகிறார் ஊழியத்தின் இலக்கியத்துறையில் பணியாற்றி **Bishop Dr. A.** நித்தியராஜ், **Rev. Dr. A.** அதிசயராஜ் அவர்களுக்கு புத்தகங்கள், மாதப்பத்திரிகைகள் எழுதுவதில் பேருதவியாய் இருந்தார். தன் திருமணத்திற்கு பிறகு விசுவாச ஜெப கைப்பிரதி கழகத்தில் சேர்ந்து இலக்கிய துறையில் பணியாற்றினார். அங்கு **Rt. Rev. Dr.** மனோ தானியேல் அவர்களின் படைப்புகளை மொழிப்பெயர்ப்பதும், அங்கு வரும் கடிதங்களுக்கு ஜெபித்து பதில் எழுதுவதும் இவரது பணி.

பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு தேவ தரிசனம் பெற்று **"THE SCRIBE OF JESUS"** என்னும் ஊழியத்தை ஸ்தாபித்தார். இதன்மூலம் மொழிப்பெயர்ப்புகள், பிழைதிருத்தங்கள் போன்றவை செய்து வந்தார். இப்போதும் தேவனுடைய வழிநடத்துதலின் படி இந்த முதல் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார். தற்போது தனது அடுத்த புத்தகத்தை வெளியிடும் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.

இருள் நிறைந்த இந்த உலகில் வேத வசனம் என்னும் வெளிச்சத்தை கொண்டு சேர்ப்பதே இவரின் நோக்கமாகும். வேதாகமத்தை புரியாமல் படிக்கும் அநேகருக்கு, அதை எளிமையாக புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாய் போதிப்பதும் அதை தன் எழுத்தின் மூலம் வெளிப்படுத்துவதுமே இவரது பணி. பாமரரும் வேதத்தை புரிந்து படிக்க வேண்டும் என்பதே இவரின் தரிசனம் ஆகும்.

பொருளடக்கம்

வ.எண்	பெயர்	பக்க எண்
1	அகினோவாம் - (1)	11
2	அகினோவாம் - (2)	11
3	அகோலிபாமாள்	12
4	அக்சாள்	12
5	அக்லாய் - (1)	13
6	அக்லாள் - (2)	13
7	அசூபாள் - (1)	13
8	அசூபாள் - (2)	14
9	அஸ்துரோத்	14
10	அத்சாள்	15
11	அத்செலெல்போனி	15
12	அத்தாராள்	16
13	அத்தாலியாள்	16
14	அபிகாயில் - (1)	17
15	அபிகாயில் - (2)	18
16	அபித்தால்	18
17	அபியா	18
18	அபியாயேல் - (1)	19
19	அபியாயேல் - (2)	19
20	அபியாயேல் - (3)	19
21	அபிஷாக்	19
22	அப்பியாள்	20
23	அமூத்தாள்	20
24	அம்மொளெகேத்	20
25	அன்னாள் - (1)	21
26	அன்னாள் - (2)	21
27	ஆகார்	22
28	ஆகீத்	23
29	ஆஸ்நாத்	23
30	ஆதாள் - (1)	24
31	ஆதாள் - (2)	24

பொருளடக்கம்

வ.எண்	பெயர்	பக்க எண்
32	ஆபி	25
33	ஆனாகு	25
34	இஸ்கான்	26
35	உல்தாள்	26
36	ஊசிம்	27
37	எகுதியாள்	27
38	எக்லாள்	27
39	எக்கோலியாள்	27
40	எஸ்தர்	28
41	எதிதாள்	28
42	எப்சிபாள்	29
43	எப்பாள்	29
44	எப்ராத்தா	30
45	எமீமாள்	30
46	எரீயோத்	30
47	எருசாள்	30
48	எயோதியாள்	31
49	எலிசபாள்	31
50	எலிசபெத்து	32
51	ஏரோதியாள்	32
52	ஏலாள்	34
53	ஏவாள்	34
54	ஐனிக்கேயாள்	35
55	ஒக்லாள்	36
56	ஓதேசாலே	36
57	ஓர்பாள்	37
58	கஸ்பி	38
59	கந்தாகே	38
60	கலவுதியாள்	39
61	குலோவேயாள்	40

பொருளடக்கம்

வ.எண்	பெயர்	பக்க எண்
62	கெத்சீயாள்	40
63	கேத்தூராள்	41
64	கேரேனாப்பு	41
65	கோமேர்	42
66	சப்பிராள்	42
67	சலோமி - ①	43
68	சலோமி - ②	44
69	சாராள்	45
70	சிந்திகேயாள்	46
71	சிபியாள்	47
72	சிப்பிராள்	47
73	சிப்போராள்	48
74	சிம்ரீத்	49
75	சிரேஷ்	49
76	சில்பாள்	50
77	சில்லாள்	50
78	சீமாத்	50
79	சூகாள்	50
80	சூசன்னாள்	51
81	செபுதாள்	51
82	செராக்கு	52
83	செருயாள்	52
84	செலூகாள்	52
85	செலோமீத் - ①	53
86	செலோமீத் - ②	53
87	சேராள்	53
88	தபீத்தாள்	54
89	தாபாத்	55
90	தாப்பெனேஸ்	55
91	தாமார் - ①	56
92	தாமார் - ②	57

பொருளடக்கம்

வ.எண்	பெயர்	பக்க எண்
93	தாமார் - (3)	57
94	தாமரி	58
95	திம்னாள்	58
96	தியானாள்	58
97	திரிபேனாள்	60
98	திரிபோசாள்	60
99	திர்சாள்	60
100	தீனாள்	61
101	துருசில்லாள்62	
102	தெபோராள் - (1)	63
103	தெபோராள - (2)	64
104	தெலீலாள்	64
105	தொற்காள்	64
106	நகோமி	65
107	நாமாள் - (1)	66
108	நாமாள் - (2)	66
109	நாராள்	67
110	நெகுஸ்தாள்	67
111	நொவதியாள்	67
112	நோவாள்	68
113	பஸ்மாத் - (1)	68
114	பஸ்மாத் - (2)	68
115	பஸ்மாத் - (3)	68
116	பத்சேபாள்	68
117	பாராள்	69
118	பித்தியாள்	69
119	பிரிஸ்கில்லாள்	70
120	பில்காள்	71
121	பூவாள்	72
122	பெபேயாள்	72

பொருளடக்கம்

வ.எண்	பெயர்	பக்க எண்
123	பெர்சியாள்	72
124	பெர்னீக்கேயாள்	73
125	பென்னினாள்	73
126	மகலாத் - ①	74
127	மகலாத்- ②	74
128	மக்லாள்	74
129	மத்ரேத்	74
130	மரியாள் - ①	75
131	மரியாள் - ②	76
132	மரியாள் - ③	77
133	மரியாள் - ④	77
134	மரியாள் - ⑤	78
135	மரியாள் - ⑥	78
136	மாகலா	78
137	மாகாள்	79
138	மாக்காள் - ①	79
139	மாக்காள் - ②	79
140	மாக்காள் - ③	79
141	மாக்காள் - ④	80
142	மார்த்தாள்	80
143	மிரியாம் ①	81
144	மிரியாம் ②	82
145	மில்க்காள் - ①	82
146	மில்க்காள் - ②	83
147	மீகாள்	83
148	மெகேதபேல்	84
149	மெசுல்லேமேத்	84
150	மேரப்	84
151	யாகேல்	85
152	யூதித்	86
153	யூலியாள்	86

பொருளடக்கம்

வ.எண்	பெயர்	பக்க எண்
154	யூனியா	87
155	யேசபேல் - (1)	87
156	யேசபேல் - (2)	88
157	யொவதானாள்	89
158	யோகெபேத்	89
159	யோசேபாள்	90
160	யோவன்னாள்	90
161	ராகாப்	91
162	ராகேல்	91
163	ரிஸ்பாள்	93
164	ரூத்	95
165	ரெபேக்காள்	96
166	ரேயுமாள்	97
167	ரோதை	97
168	லீதியாள்	98
169	லேயாள்	98
170	லோருகாமா	99
171	லோவிசாள்	99
172	வஸ்தி	100

அகர வரிசையில் வேதாகம பெண்கள்

(ஒரு அறிமுகம்)

அ

1. **அகினோவாம்** : (1) (AHINOAM)

பெயரின் அர்த்தம் : பாசத்திற்குரிய சகோதரன்

வேத ஆதாரம் : I சாமு : 14:50

இவள் இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுலின் மனைவி. இவள் தந்தையின் பெயர் அகிமாஸ். யோனத்தான், இஸ்வி, மல்கிசூவா மேரப் மற்றும் மீகாள் ஆகியோரின் தாய். இவள் மகனாகிய யோனத்தாள் தன் தாயின் அருமையான குணாதிசயத்தை பிரதிபலிக்கும் வகையில் நற்குணம் நிறைந்தவனாயிருந்தான். இவளுடைய மகளாகிய மேரப்பையே தாவீதுக்கு திருமணம் செய்ய பேசப்பட்டது. ஆனால் இவளுடைய அடுத்த மகளாகிய மீகாளைத்தான் தாவீது திருமணம் செய்துக் கொண்டான்.

நியாயாதிபதிகள் புத்தகத்தில் சொல்லப்பட்ட பாராக்கை அறிவீர்கள் அல்லவா? ஆம்! தெபோராளோடு சேர்ந்த சிசேராவை அழிக்க யுத்தம செய்தவன். இந்த பாராக்கின் தகப்பன் பெயரும் அகினோவாம் தான்.

2. **அகினோவாம்** : (2) (AHINOAM)

பெயரின் அர்த்தம் : பாசத்திற்குரிய சகோதரன்

வேத ஆதாரம் : I சாமு : 25 : 43, 27:3, II சாமு : 2:2, 3:2, I நாளா 3:1

இவள் யெஸ்ரயேல் என்னும் ஊரை சேர்ந்தவள். தாவீதின் மனைவி. தாவீதின் மூத்த மகனாகிய அம்னோனின் தாய். இவள் மிகவும் அழகானவள், ஆனால் பொல்லாத குணம் உடையவள். இவளுடைய பொல்லாத குணமும், வளர்ப்பு முறையும்தான் அம்னோனை தவறான பாதையில் நடத்தியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

3. **அகோலிபாமாள்** : (AHOLIBAMAH)

பெயரின் அர்த்தம் : உயர்த்தப்பட்ட கூடாரம்

வேத ஆதாரம் : ஆதி : 36 : 2-25

இவள் ஏசாவின் மனைவிகளில் ஒருத்தி. எயூஷ் பிரபு, யாலாம் பிரபு, கோராகு பிரபு என்பவர்களின் தாய். அவளைப்பற்றிய தகவல்களில் சில குழப்பங்களை காண முடியும். உதாரணமாக இந்த வசனத்தில் சிபியோன் என்றும் ஆனாகு என்றும் இரண்டு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் ஆனாகு என்பது அவளுடைய தாயின் பெயர் என்று வேத அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆதி : 26:34ல் இவள் யூதித் என்று அழைக்கப்படுகிறாள். ஆதியாகமம் 26ல் பொதுவான வரலாறும் ஆதியாகமம் 36ல் குறிப்பான தலைமுறை விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளதால் இந்த குழப்பம் நிலவுகிறது. ஏசாவின் வம்சம் ஏதோம் வம்சம் என்று அழைக்கப்படுகிறது. இந்த அகோலிபாமாளின் பிள்ளைகளாகிய இந்த ஏதோம் வம்சத்தார் இஸ்ரவேலருக்கு எதிராகவே எப்போதும் இருந்தார்கள். இதை நீங்கள் எண் 20 : 14-21 வரை வாசிக்க முடியும். ஆனாலும் பலம் வாய்ந்த மன்னனாகிய மகா ஏரோதுவின் மூதாதையர்கள் இந்த ஏதோம் வம்சத்தாரே ஆவர்.

4. **அக்சாள்** : (ACHSAH)

பெயரின் அர்த்தம் : 'கால் கொலுசு'

வேத ஆதாரம் : யோ : 15:16,17, நியா : 1:12,13

இவள் காலேபின் குமாரத்தி. தன் குடும்பத்தில் ஒரே பெண்ணாய் பிறந்த இவளுக்கு மூன்று சகோதரர்கள் (I நாளா : 4:15). இவள் காலேபின் தம்பிமாகிய கேனாசின் குமாரனாகிய ஒத்னியேலின் மனைவி. இந்த ஒத்னியேல் நியாயாதிபதிகளில் ஒருவன் (நியா : 3:8-11) இவளுக்கு ஈரு, ஏலா, நாகாம் என்று மூன்று சகோதரர்கள் உண்டு (I நாளா : 4 : 15) . இவள் தன் தகப்பனுக்கு ஒரே பெண் பிள்ளையாவாள். மேற்கண்ட வேதப்பகுதியில் அக்சாளின் கதை மிகவும் அழகான வரைபடம் போல் கூறப்பட்டுள்ளது. தெபீர் என சொல்லப்படும் கீரியாத்

செப்பேர் என்னும் ஊரை சங்காரம் பண்ணி பிடிப்பவனுக்கே என் மகளை கொடுப்பேன் என்று காலேப் கூறியிருந்தான். அப்போது அவன் தம்பி மகனாகிய ஒத்னியேல் அதை பிடித்தான். அக்சாள் அவனுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டாள். வேதாகம அறிஞர்கள் இவளை 'திருப்தியடையாதவள்' என்று குறிப்பிடுகிறார்கள். மேலும் வேறு சிலர் இவள் தன் விசுவாசத்தினாலே செழிப்பான நிலங்களை பரிசாக பெற்றாள் என்றும் குறிப்பிடுகிறார்கள்.

5. **அக்லாய்** : **(AHLAI) (1)**

பெயரின் அர்த்தம் : **'ஓ அதுவா?'**

வேத ஆதாரம் : I நாளா : 2:31,34

இவள் சேசானின் குமாரத்தி. சேசானுக்கு அநேக குமாரத்திகள் இருந்தார்கள். ஆனால் அவனுக்கு குமாரர்கள் இல்லை. தன் எகிப்திய வேலைக்காரனாகிய யர்காவுக்கு தன் மகள் அக்லாயை விவாகம் பண்ணிக் கொடுத்தான். அவள் அவனுக்கு அத்தாயியைப் பெற்றாள். இந்த அக்லாய், யூதாவுக்கும் அவன் மருமகளாகிய தாமாருக்கும் பிறந்த பாரேஸின் சந்ததியை சேர்ந்தவள்.

6. **அக்லாய்** : **(2) (AHLAI)**

வேத ஆதாரம் : I நாளா : 11:41

இவள் தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவனாகிய சாபாத்தின் தாய்

அசுபாள் : **(1) (AZUBAH)**

பெயரின் அர்த்தம் : தனித்துவிடப்பட்ட பாழ்நிலம் (அ) பாழான தேசம்

வேத ஆதாரம் : I நாளா : 2 : 18,19

இது ஒரு உருவகப் பெயர். அதாவது ஏசா : 62:4ல் 'இனி நீ கைவிடப்பட்டவள் எனப்படாமலும் உன் தேசம் இனி பாழான தேசம் எனப்படாமலும்' என்பதில் 'பாழான தேசம்' என்பதின் குறிப்பு பெயர் தான் அசுபாள். இந்த பெயரை கொண்ட முதல் பெண் காலேபின் மனைவியாவாள். இந்த காலேப் யோசுவாவின் நண்பனாகிய காலேப் அல்ல. ஆனால் அவர்கள் சந்ததியாரில் ஒருவன். இந்த அசுபாள் காலேபின் மூன்று குமாரராகிய ஏசேர், சோபாப், அர்தோன் ஆகியோரின் தாய். இவளது இன்னொரு பெயர் எரீயோத்.

8. **அசுபாள்** : (2) (AZUBAH)

வேத ஆதாரம் : I இராஜா 22:42, II நாளா 20:31

இந்த இரண்டாவது அசுபாள், யூதாவின் மூன்றாம் ராஜாவாகிய ஆசாவின் மனைவி, நான்காம் ராஜாவாகிய யோசபாத்தின் தாய். இவளுடைய தந்தையின் பெயர் சில்கி. இவள் தன் காலத்தில் தேவனுக்கு பயந்து நடந்த ஒரு பெண்மணி. யோசபாத் தேவனுடைய வழிகளில் நடந்ததற்கு இவள் தான் முக்கிய காரணம். வேதத்தில் சில இடங்களில் கீழ்கண்டவாறு வாசித்திருப்பீர்கள். "அவன் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையான படி நடந்து வந்தான், அவன் தாயின் பேர் ______________" என்பதாக வாசித்திருப்பீர்கள். இத்தகைய வாசகங்களை வாசிக்கும் போது ராஜாவாகிய அவன் செம்மையாய் நடந்து கொண்டதற்கு அவன் தாயின் வளர்ப்பே காரணம் என்று புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறே அசுபாள் தன் மகனாகிய யோசபாத்தை நல்வழியில் நடத்தி கர்த்தருடைய பார்வைக்கு செம்மையாய் நடக்கும் படி செய்தாள்.

9. **அஸ்தரோத்** : (ASHTAROTH)

பெயரின் அர்த்தம் : நட்சத்திரம்

வேத ஆதாரம் : நியா : 2 : 13, 10:6, I சாமு : 7 : 3,4, 12:10, 31:10

அஸ்தரோத் என்பது கானானியரின் பெண்பால் கடவுள் ஆகும். அஸ்தரேத் என்னும் சொல்லின் பண்மையே அஸ்தரோத் ஆகும். பொதுவாக இந்த தெய்வம் பண்மையிலேயே உச்சரிக்கப்படும். இதனுடைய முக்கிய வழிப்பாட்டு ஸ்தலம் பண்டைய பாசான் ஆகும் (உபா : 1 : 3, யோசு : 9 : 10) இதை அசீரியர்கள் 'இஷ்தார்' என்றும் ரோமானியர்களும் கிரேக்கர்களும் 'இஸ்தரேத்' என்றும் உச்சரித்தார்கள். பண்டைய எழுத்தாளர்கள் இதை நிலவு கடவுள் என்று வருணித்தார்கள். ஆனால் அசீரியர்களின் இஷ்தார் நிலவு கடவுள் அல்ல. மாறாக அது ஒன்பது கோள்களில் ஒன்றான சுக்கிரனை (வீனஸ்) குறிக்கிறது. 'அப்ரோடைட்' என்று சொல்லப்படும் காதல் தேவியோடும் இதை ஒப்பிடுகிறார்கள். இஷ்தார் என்றும் சொல்லப்படும் சுக்கிரன் 'வானத்தின் ராணியாக' வெளிப்படுவதாக கூறுகிறார்கள். மேலும் இதை அதிகாலையில் தோன்றும் விடிவெள்ளியோடு ஒப்பிட்டு போர்களின் தேவி என்றும் மாலையில் தோன்றும் அந்தி நட்சத்திரத்தோடு ஒப்பிட்டு காதல் மற்றும் தாசிகளின் தேவி என்றும் கூறுகிறார்கள்.

இப்படியாய் சொல்லப்படும் இந்த ராணியை ஜனங்கள் வீட்டின் கூரைகளில் நின்று வணங்கி வந்தார்கள். குடும்பத்தார் அனைவரும் ஒன்றுகூடி வீட்டின் மாடிகளில் இதை வணங்கினார்கள். குடும்பத்தின் பிள்ளைகள் எரிபொருள் சேகரிப்பார்கள். தகப்பன் நெருப்புமூட்டுவான். தாய் அதற்கு படைக்க மாவை பிசைந்து அப்பம் சுடுவாள். இதை வணங்கினால் செழிப்பு உண்டாகும் என்று நம்பினார்கள். எரே : 7 : 18, 44:15-30 வரை சொல்லப்பட்ட 'வானராக்கினி' இந்த அஸ்தரோத்தே ஆகும். அக்காலத்தில் எகிப்தில் சிறைப்பட்டு போன, யூதேயாவை சேர்ந்த ஜனங்கள் தீரக்தரிசியை நோக்கி, நாங்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டின போது செழிப்பாய் இருந்தோம். யெகோவாவிடம் திரும்பினபோதோ அவர் எங்கள் தேசத்தை அழித்தார் என்றார்கள். இவர்களுடைய வார்த்தை கேட்பதற்கு மனவேதனையைக் கொடுத்தாலும் அவர்கள் எந்த அளவிற்கு அந்நிய தெய்வங்களை வணங்குவதில் தீவிரித்திருத்திருந்தார்கள் என்பது நமக்கு விளங்குகிறது. மேலும் இன்றைக்கும் ரோமன் கத்தோலிக்க பிரிவை சேர்ந்தவர்கள் இயேசுவின் தாயாகிய மரியாளை வணங்கி, அவர்களை "வானத்திற்கும் பூமிக்கும் உலகளாவிய ராணி" என்கிறார்கள். இது இக்காலத்து அஸ்தரோத்தோ?

10. **அத்சாள்** : **(HADASSAH)**

பெயரின் அர்த்தம் : எப்போதுமே பச்சைபசேலென்றிருக்கும் ஒரு செடி - மிருது செடி

வேத ஆதாரம் : எஸ்தர் : 2 : 7

ராணியாகிய எஸ்தரின் யூதப்பெயர் (எஸ்தர் பார்க்கவும்)

இந்த யூதபெயருக்கு மிருது செடி என்று அர்த்தமாகும். புகழ்பெற்ற யூத ரபி ஒருவர் இதைப்பற்றி கூறும் போது வனத்திலுள்ள மரத்திற்கு ஒப்பானவன் மனிதன். ஆனால் நீதிமானோ அதிலுள்ள மிருதுசெடிக்கு ஒப்பானவன் என்று கூறுகிறார். மிருதுசெடி மிகவும் வாசனையுள்ளது. எனவே நீதிமான் மிருதுசெடிக்கு ஒப்பிடப்படுகிறான். அத்சாள் என்னும் இந்த எஸ்தர் மிருதுசெடியைபோல வாசனைமிக்கவளாகவும், நீதியுள்ளவளாகவும் திகழ்ந்தாள்.

11. **அத்செலெல்போனி** : **(HAZELELPONI)**

பெயரின் அர்த்தம் : என்னை விசாரிக்கிற தேவன் கொடுக்கும் விடுதலை. 'செலெல்' நிழல் என்று பொருள்படும். அதாவது

'கர்த்தர் என் வலது பக்கத்தில் எனக்கு நிழலாயிருக்கிறார்' என்ற செய்தியை சொல்லும் பெயர்.

வேத ஆதாரம் : I நாளா 4:3

இவள் ஏதாமின் குமாரத்தி. யெஸ்ரயேல், இஷ்மா, இத்பாஸ் ஆகியோரின் சகோதரி ஆவாள். இவர்கள் யூதாவின் வம்சத்தை சேர்ந்தவர்கள். இவள் பெயரின் விசேஷம் என்னவென்றால், பொதுவாக 'ஏல்' என்ற வார்த்தை தேவனைக் குறிப்பதால், அது பெண்கள் பெயரில் இடம் பெறாது. ஆனால் இவள் பெயரிலோ 'ஏல்' என்னும் பெயர் இடம் பெற்றுள்ளது தனி சிறப்பு.

12 **அத்தாராள்** : (ATARAH)

பெயரின் அர்த்தம் : கிரீடம்

வேத ஆதாரம் : I நாளா : 2 : 26

பாரேசின் பேரனான யெர்மெயேலின் இரண்டாம் மனைவி. ஓனாமின் தாய்.

13. **அத்தாலியாள்** : (ATHALIAH)

வேதாகமத்தில் அத்தாலியா என்ற பெயரில் இரண்டு ஆண்களும் உண்டு (I நாளா : 8:26, 27, எஸ்றா 8:7)

பெயரின் அர்த்தம் : கர்த்தரின் வாதை

வேத ஆதாரம் : II இராஜா : 8:26, 11ஆம் அதிகாரம்
II நாளா : 22,23, 24:7

இவள் ஆகாப் மற்றும் யேசபேலின் குமாரத்தி. இவள் தன் பெற்றோரைப் போலவே எல்லா தீமைகளுக்கும் உதாரணமாயிருந்தாள். விக்கிரக ஆராதனையை இஸ்ரவேலின் புகுத்தினவள். யோசபாத்தின் குமாரனாகிய யோராமின் மனைவி. அகசியாவின் தாய். இவள் இஸ்ரவேலின் ஆறாவது ராஜாவாகிய ஒம்ரியின் பேத்தியாவாள். இஸ்ரவேல் மற்றும் யுதாவின் ராஜ்யங்களுக்கிடையே இருந்து வந்த பல ஆண்டுக்கால சண்டைகள் நீங்கி யோசபாத்தின் காலத்தில் நட்பு மலர தொடங்கியது. இதனால் யோசபாத் தங்கள் நட்பின் அடையாளமாக தனது மூத்த மகனாகிய யோராமை இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின் மகளாகிய இந்த அத்தாலியளுக்கு திருமணம் செய்து வைத்தான். இவர்களுக்கு பிறந்தவனே அகசியா. தன் தாயின் குணத்திற்கு சற்றும் சளைப்பில்லாமல் எல்லாவித துர்குணங்கள் நிறைந்தவனாயிருந்தான். இப்படிப்பட்ட ஒரு தாயின் வளர்ப்பில் வளருகிறவன் வேறு எப்படி வளருவான் என்று நாம் எதிர்ப்பார்க்க முடியும்?

அத்தாலியாளின் கணவனாகிய யோராம் 8 ஆண்டுகள் அரசாண்டு பின் ஏதோ குணப்படுத்த முடியாத நோயினால் பாதிக்கப்பட்டு இறந்து போனான். அவன் ஆட்சி செய்த போதும் துர்குணமும் விக்கிரகாராதனையும் நிறைந்த இந்த அத்தாலியாளே ஆட்சியில் பலம் நிறைந்தவளாக காணப்பட்டாள். அதனால் யூதா தேசமே பாகால் வழிபாட்டு ஸ்தலமாக மாறியது. தன் கணவனுடைய மரணத்திற்குபின் மகனாகிய அகசியா ராஜாவானான். ஓராண்டு ஆட்சிக்கு பின்னர் அவன் யெகூவினால் கொல்லப்பட்டான். தன்னுடைய மகன் இறந்த போனதை அறிந்த போது அத்தாலியாள் தன் சொந்த பேரன்களை கொன்று ராஜ்யத்தை தன்னுடையதாக்கிக்கொண்டாள். தன் பேரன்கைள கொலை செய்த பிறகு 6 ஆண்டுகள் யூதா தேசத்தை அரசாண்டாள். யூதா தேசத்தை அரசாண்டவர்களில் ஒரே பெண்மணி இவள்தான். ஒரு ராஜாவுக்கு மகளாக, ஒரு ராஜாவுக்கு மனைவியாக, வேறொரு ராஜாவுக்கு தாயாக இருந்தவள் இப்போது தானே மகுடம் சூடி மகாராணியானாள். அவளுடைய கணவன் அரசாண்டபோது இவள் அரியனையில் அமராவிட்டாலும் மறைமுகமாக அரசாண்டாள். இப்போதோ நேரடையாக அரசாள துவங்கி விட்டாள். இவளுடைய ராஜ்யபாரக் காலத்தில் தேவாலயத்தின் ஒரு பகுதி மூடப்பட்டு அதிலுள்ள சாமான்கள் பாகால் கோயில்களில் பயன்படுத்தப்பட்டன. ஆனால் தேவன் எல்லா ராஜ்யங்களுக்கும் மேற்பட்டவர் அல்லவா? எனவே யூதா மக்களை விடுவிக்க ஒரு இரட்சகனை அனுப்பினார். அகசியாவின் சகோதரியான யோசேபாளின் கணவனும் ஆசாரியனுமாகிய யோய்தா, அத்தாலியாளின் பேரனான ஒரு குழந்தையை ஒளித்து வைத்து வளர்த்தான். அவன் பெயர் யோவாஸ். பின்பு யோய்தா என்னும் ஆசாரியனுடைய திட்டத்தின்படி யோவாஸ் என்னும் ஒளித்து வளர்க்கப்பட்ட அத்தாலியாளின் பேரன் ராஜாவானான். அத்தாலியாளோ வீதியில் கொல்லப்பட்டாள். நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம் என்பதை இவள் வாழ்க்கை நமக்கு விளக்குகிறது. தேவ திட்டத்தை ஒருவராலும் தடை செய்ய முடியாது என்பதையும் இதன் மூலம் அறிய முடியும்.

அபிகாயில் : (ABIGAIL) (1)

பெயரின் அர்த்தம் : மகிழ்ச்சிக்குரியவள்

வேத ஆதாரம் : I சாமு : 25 : 1-42, II சாமு : 3 : 3

இவள் மிகவும் புத்திசாலியும் மகா அழகானவளுமாயிருந்தாள். இவள் புருஷன் நாபால் முரடனும், குடிகாரனுமாயிருந்தான். அபிகாயில் தனக்கும் தன் குடும்பத்திற்கும் வரயிருந்த தீங்கை தடுத்து நிறுத்தினாள். பின்னர் தாவீதை விவாகம் பண்ணிக்கொண்டாள். அவள் கீலேயாப்பை தாவீதுக்கு பெற்றாள்.

15. **அபிகாயில்** : **(ABIGAIL) (2)**

வேத ஆதாரம் : II சாமு : 17 : 25, I நாளா : 2 : 16,17

இந்த அபிகாயில் தாவீதின் சகோதரி. இவள் ஈசாயின் குமாரத்தி அல்லவென்றாலும்,தாவீதுக்கும் இவளுக்கும் ஒரே தாய் தான். இவள் தகப்பன் பெயர் நாகாஸ் என்றும் எத்திரா என்றும் சொல்லப்பட்டுள்ளது. இவள் இஸ்மவேலியனான யெத்தேருக்கு அமாசாவை பெற்றாள்.

16. **அபித்தால்** : **(ABITAL)**

பெயரின் அர்த்தம் : பனியைப் போன்ற தகப்பனை உடையவள்

வேத ஆதாரம் : II சாமு : 3 : 4, I நாளா : 3 : 3

எபிரோனில் பிறந்தவள். தாவீதின் மனைவிகளில் இவளும் ஒருத்தி. செப்பத்தியாவின் தாய். இவளுடைய பெயரில் சொல்லப்பட்ட பனி ஆசீர்வாதத்தையும், நன்மையையும், இளைப்பாறுதலயும், ஆறுதலையும் குறிக்கிறதாயிருக்கிறது.

17. **அபியா** : **(ABIA)**

பெயரின் அர்த்தம் : கர்த்தர் என் தகப்பன்

வேத ஆதாரம் : I நாளா : 2 : 24

எஸ்ரோனின் மனைவி. அசூரின் தாய். இவள் தேவ பயம் நிறைந்த பெண்ணாக இருந்ததாக சொல்லப்படுகிறது. இவள் கணவனாகிய எஸ்ரோன் யூதாவின் மகனாகிய பாரேஸின் குமாரன். இதன் மூலம் இயேசு கிறிஸ்துவின் மூதாதையர் என்னும் கனத்தையும் இவள் பெறுகிறாள்.

18. **அபியாயேல்** : **(1) (ABIHAIL)**

பெயரின் அர்த்தம் : இப்பெயர் வேதாகமத்தில் ஆண், பெண் இருபாலருக்கும் குறிக்கப்படும். பராக்கிரமத்தின் தகப்பன் (அ) பராக்கிரமத்தின் காரணம்

வேத ஆதாரம் : I நாளா : 2 : 29

யூதா கோத்திரத்தை சேர்ந்த அபிசூரின் மனைவி. அக்பானையும் மோளிதையும் பெற்றாள்.

19. **அபியாயேல்** : (2) (ABIHAIL)

வேத ஆதாரம் : II நாளா : 11 : 18

தாவீதின் மூத்த சகோதரனான எலியாபின் வம்சத்தை சேர்ந்தவள். இவள் ரெகோபெயாமின் மனைவியாவாள்.

20. **அபியாயேல்** : (3) (ABIHAIL)

வேத ஆதாரம் : எண் : 3 : 35

லேவி கோத்திரத்தை சேர்ந்தவர்களான மெராரியின் வம்சத்தை சேர்ந்தவள் இந்த அபியாயேல். இவள் மெராரி வம்சத்தின் தலைவனாகிய சூரியேல் என்பவனின் தாயாவாள்.

21. **அபிஷாக்** : (ABISHAG)

பெயரின் அர்த்தம் : என் தகப்பனின் அலைவு

வேத ஆதாரம் : I இராஜா : 1 : 3, 2:13-25

இசக்கார் கோத்திரத்தை சேர்ந்தவளும் சூனேம் ஊரை சேர்ந்தவளுமாகிய இந்த அபிஷாக் தாவீதுக்கு பணிவடை செய்யும்படி அழைத்துவரப்பட்டவள். வயதான ராஜாவாகிய தாவீதை உற்சாகப்படுத்த, பணிவிடைசெய்ய, பராமரிக்க அழைத்துவரப்பட்ட அழகான, இளம் பெண்தான் இந்த அபிஷாக். தாவீது அவளை திருமணம் செய்தான். ஆனால் அவளோடு சேர்ந்து வாழ்வதற்கு முன்பாக மரித்து போய்விட்டான். தாவீதின் மரணத்திற்கு பின் சாலொமோன் ராஜாவானான். அப்போது தாவீதுக்கும் ஆகித்துக்கும் பிறந்த அவனுடைய குமாரன் அதோனியா வஞ்சகமாய் அரசாட்சியாய் பிடிக்க திட்டமிட்டு அபிஷாக்கை திருமணம் செய்ய விரும்புவதாக சாலொமோனின் தாயாகிய பத்சேபாளிடத்தில் கேட்கிறான். அபிஷாக் தாவீதின் மனைவியானதால், அதோனியா அவளை திருமணம் செய்தால், ராஜ்யம் அவன் வசம் திரும்பும் என அவன் கருதினான். இத்திட்டத்தை அறியாத பத்சேபாள் அவனுடைய விருப்பத்தை சாலொமோனிடம் தெரிவிக்கிறாள். ஆனால் பிரச்சனையின் ஆழத்தை புரிந்து கொண்ட சாலொமோன் அதோனியாவை கொல்ல கட்டளையிட்டான்.

22. அப்பியாள் : **(APPHIA)**

பெயரின் அர்த்தம் : கனி கொடுப்பவள்

வேத ஆதாரம் : பிலேமோன் : 2

பண்டைய பிரிகியா நாட்டிலுள்ள கொலோசே பட்டணத்தை சேர்ந்த கிறிஸ்துவின் விசுவாசி. இந்த இடம் தற்போதைய துருக்கி நாட்டில் உள்ளது. 'பிரியமுள்ள அப்பியாள்' என்று அழைக்கப்படுகிற இவள் பிலேமோனின் மனைவி என்றே வேத அறிஞர்கள் கருதுகிறார்கள். அந்த சபையின் நெருங்கிய விசுவாசியான அர்க்கிப்புவின் தாயாகவோ சகோதரியாகவோ இவள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவள் நீரோ மன்னனின் காலகட்டத்தில் கல்லெறிந்து கொல்லப்பட்டதாக வரலாறு குறிப்பிடுகிறது. இவள் தன் பெயருக்கு ஏற்ப கனி கொடுப்பவளாகவே திகழ்ந்தாள்.

23. அமூத்தாள் : **(HAMUTAL)**

பெயரின் அர்த்தம் : பனியின் சந்ததி

வேத ஆதாரம் : எரே : 52 : 1,2, II இராஜா 23:31, 24:18

லிப்னா ஊரானாகிய எரேமியாவின் குமாரத்தி. யோவாகாஸ், சிதேக்கியா என்னும் இரண்டு தேவனுக்கு பிரியமில்லாத வழியில் நடந்த ராஜாக்களின் தாய். அவள் தன் பிள்ளைகளை நல்வழியில் நடத்தவில்லை என்பது இதன் மூலம் விளங்குகிறது. அவர்களுடைய துன்மார்க்கத்தை தீர்க்கதரிசியாகிய எரேமியா எடுத்துரைத்தான்.

24. அம்மொளெகேத் : **(HAMMOLEKETH)**

பெயரின் அர்த்தம் : ராணி (அ) அரசாள்பவள்

வேத ஆதாரம் : I நாளா : 7 ; 17,18

இந்த நீண்ட பெயர் கொண்ட பெண்மணி மனாசேயின் வம்சவரலாற்றில் இடம் பெற்றுள்ளாள். இவள் கீலேயாத் பகுதியை அரசாண்டவள் என்று சொல்லப்படுகிறது. இவள் மாகீரின் குமாரத்தி, கீலேயாத்தின் சகோதரி, மனாசேயின் பேத்தி. இவள் மூலமாக மனாசே குடும்பத்திலிருந்து அநேக ஜாதிகள் எழும்பின.

25. **அன்னாள்** : **(1) (ANNA)**

பெயரின் அர்த்தம் : **இரக்கம் அல்லது கிருபை**

வேத ஆதாரம் : **லூக் : 2:36-38**

அன்னாள் பானுவேலின் குமாரத்தி. அவளுடைய மரித்துபோன கணவன் பெயர் கொடுக்கப்படவில்லை. அவளுடைய கணவரும் தேவனுடைய இரட்சிப்புக்கு காத்திருந்தவர். பானுவேல் தொலைந்து போன கோத்திரம் என்றழைக்கப்படும் ஆசேர் கோத்திரத்தை சேர்ந்தவர். அன்னாள் ஒரு தீர்க்கதரிசி, வயது சென்றவள், விதவை, தேவாலயத்திலேயே தங்கியிருந்தவள், உபவாசித்து ஜெபித்து, ஆராதனை செய்து கொண்டிருந்தவள். சிமியோனின் துதியைக்கேட்ட அன்னாள் எழுந்து மீட்புக்காக காத்திருந்த மக்களுக்கு இயேசு கிறிஸ்துவின் பிறப்பை பற்றிய நற்செய்தியை பறைசாற்றினாள். அந்நாட்களில் மக்கள் மீட்பராகிய மேசியா வந்து தங்களை இரட்சிப்பார் என்று காத்திருந்தனர். இயேசு பிறந்த போது அந்த மேசியா இவர்தான் என்பதை இவள் பறைசாற்றினாள்.

26. **அன்னாள்** : **(2) (HANNAH)**

பெயரின் அர்த்தம் : **கிருபை**

வேத ஆதாரம் : **1 சாமு : 1 அதிகாரம், 2:1,21**

லேவியனான எல்கானாவின் பிரியமான மனைவி. அன்னாளுக்கு பிள்ளையில்லாததினாலே இரண்டாம் மனைவியாகிய பெனின்னாள் அவளை மனமடிவாக்கும் வார்த்தைகளை எப்போதும் பேசுவாள். எல்கானா லேவி கோத்திரத்தை சேர்ந்த தேவனுடைய மனுஷனாயிருந்த போதிலும் இரண்டு மனைவிகளை உடையவனாயிருந்தான் (மோசேயின் நியாயப்பிரமாணமும் இதை எதிர்க்கிறது) அந்நாட்களில் அது மிக சாதாரணமாய் நடைபெறும் ஒரு காரியமாயிருந்தது. எனவே தான் தேவன் அன்னாளின் கர்ப்பத்தை அடைத்தார். ஏனெனில் அவள்தான் எல்கானாவின் முதல் மனைவி. அவள் மூலமாகத்தான் அவனுக்கு வாரிசு உண்டாகும். பின்பு தேவன் அன்னாளுக்கு மனமிரங்கினார். சாமுவேலை பெற்றெடுத்தாள்.

மேலும் மூன்று மகன்களையும் இரண்டு மகள்களையும் அன்னாள் பெற்றெடுத்தாள். அவர்கள் பெயர்கள் வேதத்தில் கொடுக்கப்படவில்லை. அன்னாளிடம் அநேக நற்குணங்கள் இருந்தது. தன் சக்களத்தி தன்னை மனமடிவாக்கினாலும் தன் நிலையிலிருந்து மாறாதிருந்தாள். தேவனை மிகவும்

நேசித்தபடியால் அவரையே நம்பி இரவும் பகலும் அவரை நோக்கி கூப்பிடுகிறவளாயிருந்தாள். தேவன் அவளுடைய தேவ பயத்தையும், பக்தியையும், நம்பிக்கையையும், பொறுமையையும் கண்டு சாமுவேல் என்னும் பிரசித்தி பெற்ற தீர்க்கதரிசியை பெற்றெடுக்கும் படி செய்தார். அவள் தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணுகிறவளாய் மாத்திரம் இல்லாமல் தேவன் கொடுத்த நன்மைக்கு அவரை துதித்து பாடுகிறவளுமாய் இருந்தாள். சாமுவேலையும் தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்தாள்.

ஆ

1) **ஆகார்** : **(HAGAR)**

பெயரின் அர்த்தம் : இது ஒரு எகிப்திய பெயர். தப்பித்து ஓடுதல் (அ) அலைந்து திரிதல் (அ) பரதேசி என்று அர்த்தங்கொள்ளும் அரேபிய வார்த்தை.

ஆகாரைக்குறித்து சொல்லப்படும் வாய்மொழி கதை :

ஆபிரகாமும் சாராளும் எகிப்தில் வசித்த போது ஆபிரகாமின் திரளான சம்பத்தை பார்த்த எகிப்திய ராஜாவாகிய பார்வோனின் மகளாகிய இந்த ஆகார் அதை இச்சித்து அதன் மேல் ஆசை கொண்டாள். எனவே அவள் சாராளோடு நெருங்கி பழக ஆரம்பித்தாள். பின்பு அவர்கள் அங்கிருந்து குடிபெயர்ந்து செல்ல முற்படும்போது ஆகாரும் ஆபிரகாமுடன் செல்வதாக கூறினாள். இதை அறிந்த பார்வோன், “நீ அவர்களுடன் செல்ல வேண்டாம். அப்படி நீ அவர்களுடன் சென்றால் நீ அவர்களுடைய அடிமை பெண்ணாகத்தான் இருக்க முடியும்” என்றான்.

ஆனால் இவளோ ‘அரண்மனையில் ஒரு இளவரசியாய் இருப்பதைவிட ஆபிரகாமின் கூடாரங்களில் அடிமை பெண்ணாக இருப்பதே மேல்’ என்று கூறி ஆபிரகாமுடன் சென்றுவிட்டாள்.

பின்பு அவள் ஆபிரகாம், சாராள் ஆகியோரின் விசுவாச மார்க்கத்தைப்பார்த்து தன் அந்நிய விக்கிரகங்களை விடுத்து, ஜீவனுள்ள தேவனை வணங்க ஆரம்பித்தாள்.

வேத ஆதாரம் : ஆதி : 16, 21:9-17, 26:12, கலா 4:24,25

மேலே சொல்லப்பட்ட வரலாற்றுக்கதை கேட்பதற்கு அருமையான ஒரு கதையாக இருந்தாலும் வேதாகமத்தில் ஆகார் சாராளின் அடிமை பெண்ணாகவே அறியப்படுகிறாள். பின்பு அவள் ஆபிரகாமுடன் சேர்ந்து அவனுடைய முதல் பிள்ளையை பெற்றெடுக்கிறாள். ஆகார் இஸ்மவேலை பெற்றெடுத்து இஸ்மவேலருக்கு தாயானாள். இவள் இரண்டுமுறை கர்த்தருடைய தூதனானவரை தரிசித்து இஸ்மவேலை குறித்த வாக்குத்தத்தங்களை பெற்றாள்.

அதன் பின்பு ஆகாரை குறித்து கடைசியாய் வேதாகமத்தில் பார்ப்பது, அவள் தன்னுடைய மகனுக்கு தன் சொந்த ஊரான எகிப்து தேசத்து பெண்ணை திருமணம் செய்து வைக்கும் போதுதான்.

கலா 4: 21-31 வரை வாசிக்கும் போது பவுல் நியாயப்பிரமாணத்திற்கும் கிருபைக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக்காட்ட ஆகாரின் கதையை பயன்படுத்துகிறார். ஆகாரை அடிமையானவளாகவும், சாராளை சுயாதீனமுள்ளவளாகவும், இஸ்மவேலை மாம்சத்தின்படி பிறந்தவன் என்றும் ஈசாக்கை வாக்குத்தத்தத்தின் படி பிறந்தவன் என்றும் குறிப்பிடுகிறார். மேலும் ஆகாரை பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்திற்கும் சாராளை புதிய ஏற்பாட்டு கிருபைக்கும் ஒப்பிடுகிறார்.

ஆகீத் : **(HAGGITH)**

பெயரின் அர்த்தம் : பண்டிகை (அ) நடனம் ஆடுபவர்

வேத ஆதாரம் : II சாமு : 3 : 4,5, I இராஜா 1:5,11
I இராஜா 2:1, I நாளா 3:2

தாவீதின் ஐந்தாவது மனைவி, அதோனியாவின் தாய். வேதாகமத்தில் இவள் பெயர் குறிப்பிடப்படும் போதெல்லாம் 'அதோனியவின் தாய்' என்றே அடையாளப்படுத்தப்படுகிறாள்.

ஆஸ்நாத் : **(ASENATH)** (கி.மு. 1715)

பெயரின் அர்த்தம் : சாயிசை சேர்ந்த நீத் என்னும் ஞானதேவதையை சேர்ந்தவள் என்று அர்த்தங் கொள்ளும் எகிப்திய பெயர்

வேத ஆதாரம் : ஆதி : 41:45-50, 46:20

இவள் போத்திபிராவின் குமாரத்தி. இந்த போத்திபிரா தற்போதைய கெய்ரோ மாகாணத்தில் உள்ள சூரிய பகவான் கோயிலின் அக்காலத்து பூசாரி. ஆஸ்நாத்

யோசேப்பின் மனைவியாகி மனாசே, எப்பிராயீம் என்னும் இரண்டு பிள்ளைகளை பெற்றாள்.

போத்திபாரின் மனைவியின் விஷயத்தில் தன் பரிசுத்தத்தை காத்துக் கொண்ட யோசேப்பு ஆஸ்நாத்தை திருமணம் செய்யும் போது அவள் அந்நிய விக்கிரகத்தின் பூசாரியின் மகள் என்பதை அறிந்திருந்தும் அதை ஏற்றுக்கொண்டான். அதனால் தானோ என்னவோ பின் நாட்களில் மனாசே எப்பிராயீம் கோத்திரத்தார் எளிதில் விக்கிரகாராதனை பாவத்தில் விழுந்து விடுகின்றனர். I கொரி : 6:14-18 வரையுள்ள பவுலின் வார்த்தைகளை நாமும் நினைவில் கொண்டால் நலமாய் இருக்கும்.

4. **ஆதாள்** : (1) (ADAH)

பெயரின் அர்த்தம் : அலங்காரம், அழகு

வேத ஆதாரம் : ஆதி : 4:19-23

ஏவாளுக்கு பிறகு வேதாகமத்தில் பெயர் கொடுக்கப்பட்ட முதல் பெண் இந்த ஆதாளே. காயீனுடைய மனைவியின் பெயரும், ஆதாமுடைய மற்ற குமாரத்திகள் பெயரும் வேதத்தில் கொடுக்கப்படவில்லை. இவள் ஆதாமுக்கு ஏழாம் தலைமுறையான லாமேக்குவின் மனைவிகளில் ஒருத்தி. யாபால், யூபால் என்னும் இரண்டு பிள்ளைகளை பெற்றாள். யாபால் கூடாரவாசிகளுக்கும், மந்தை மேய்க்கிறவர்களுக்கும் தகப்பனானான். யூபால் நாகசுரக்காரர், கின்னரக்காரர் முதலிய இசை துறையினருக்கு தகப்பனானான்.

5. **ஆதாள்** : (2) (ADAH)

வேத ஆதாரம் : ஆதி : 26:34, 36:2

இவள் ஏத்தியனாகிய ஏலோனின் குமாரத்தி. இவள் ஏசாவின் மனைவிகளில் ஒருத்தி. இவள் தன் மாமியார் மாமனாராகிய ஈசாக்கு மற்றும் ரெபேக்காளுக்கு மனநோவாயிருந்தாள். ஏசாவின் முத்த குமாரனாகிய எலிப்பாஸின் தாய். பின் நாட்களில் இஸ்ரவேலருக்கு சகோதரராக கருதப்பட்ட ஏதோமியருக்கு தாயாக மாறினாள்.

ஆதி : 26:34ல் சொல்லப்பட்ட பஸ்மாத்தான் இந்த ஆதாள் என்று வேத அறிஞர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆதி 26ல் பொதுவான வரலாறும் ஆதி. 36ல் குறிப்பான தலைமுறை விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளதால் தான் இந்த பெயர் வேறுபாடு. மேலும் அக்காலங்களில் பெண்களுக்கு திருமணத்தின்

போது வேறு பெயர் கொடுக்கப்படும் வழக்கம் இருந்து வந்தது. அப்படியே ஆதாளுக்கு பஸ்மாத் என்னும் பெயர் கொடுக்கப்பட்டதாகவும் கருதப்படுகிறது.

ஆபி : (ABI)

பெயரின் அர்த்தம் : யெகோவா என் தந்தை

வேத ஆதாரம் : II இராஜா 18:2, II நாளா 29:1, 26:5

தேவனுடைய தரிசனங்களில் புத்திமானாயிருந்த சகரியாவின் குமாரத்தி தான் ஆபி. இவள் கர்த்தருக்கு பிரியமில்லாத வழியில் நடந்த ஆகாஸ் என்னும் யூதாவுடைய இராஜாவின் மனைவியும், கர்த்தருக்கு பயந்து, அவருடைய பார்வைக்கு செம்மையானதை செய்த எசேக்கியா என்னும் இராஜாவின் தாய். சில இடங்களில் இவளுடைய பெயர் அபியாள் என்றும் கொடுக்கப்பட்டுள்ளது.

தன் கணவருடைய விக்கிரகாராதனை முறைகளின் மத்தியில் அதை தவிர்த்து தன் பெயருக்கு ஏற்றாற் போல் ஜீவனுள்ள தேவனை பற்றிக்கொண்டாள். கர்த்தரை தேடி அவருடைய சித்தத்தின்படி செய்தாள். தன்னுடைய மகனையும் கர்த்தருடைய பாதையில் வளர்த்தாள். நிச்சயமாகவே ஆபி பாராட்டுக்குரியவளே!

ஆனாகு : (ANAH)

பெயரின் அர்த்தம் : 'கேட்கிறவள்' (அ) 'கவனிக்கிறவள்' (அ) பதில் கொடுக்கிறவள்

வேத ஆதாரம் : ஆதி : 36 : 2,18,25

ஆனாகு ஏவியனாகிய சிபியோனின் குமாரத்தி ஆவாள். இவளுக்கு திஷோன் என்ற மகனும் அகோலிபாமாள் என்ற மகளும் உண்டு. அகோலிபாமாள் ஏசாவின் மனைவியாவாள். ஏசாவின் மனைவிகளின் தாய்களில் ஆனாகு பெயர் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஆனாகு என்ற பெயரில் அநேக குழப்பங்கள் உண்டு. ஆனாகு என்பது ஆணின் பெயரா பெண்ணின் பெயரா என்பதிலும் சந்தேகம் உண்டு. ஆனால் வேத அறிஞர்கள் ஆனாகு என்ற பெயரில் மூன்று பேரை நிதானிக்கிறார்கள். அதில் ஒருத்தி பெண் என்றும் மற்ற இருவர் ஆண் என்றும் குறிப்பிடுகிறார்கள். அந்த பெண்தான் அகோலிபாமாளின் தாயாகிய இந்த ஆனாகு.

இ

1. **இஸ்காள்** : (ISCAH)

பெயரின் அர்த்தம் : ஆராய்ந்து அறிபவள்

வேத ஆதாரம் : ஆதி : 11 : 29

இந்த இஸ்காள் ஆபிராமின் இளைய சகோதரனாகிய ஆரானின் குமாரத்தி ஆவாள். இவளுக்கு மில்க்காள் என்ற சகோதரியும் லோத்து என்ற சகோதரனும் உண்டு.

உ

1. **உல்தாள்** : HULDAH

பெயரின் அர்த்தம் : பெருச்சாளி (துந்திரமாகவும், புத்திசாலிதனமாகவும் செயல்படுவதைக் குறிக்கிறது)

வேத ஆதாரம் : II இராஜா 22:14-20, II நாளா : 34 : 22-33

இவள் குடும்பத்தைப்பற்றி நாம் அறிவதெல்லாம் இவள் வஸ்திரசாலை விசாரிப்புகாரனாகிய சல்லூமின் மனைவி என்பதே. ராஜாவாகிய யோசியாவின் காலத்தில் வாழ்ந்த ஒரு தீரக்கதரிசி. ஆசாரியனாகிய இல்க்கியா புஸ்தக சுருள்களை தேவாலயத்தில் கண்டெடுத்தவுடனேயே ராஜாவாகிய யோசியா அதைக்குறித்து விசாரிக்கும்படி அவர்களை உல்தாளிடத்தில் அனுப்புகிறான். அப்படியானால் தீர்க்கதரிசியான அவளுடைய புகழ் ராஜசமூகம் வரை பெருகியிருந்தது என்பதை அறிய முடிகிறது. அது மாத்திரமல்லாமல் ராஜா முதற்கொண்டு எல்லாரும் அவளுடைய வார்த்தையை தேவனுடைய வார்த்தையாக நம்பி ஏற்றுக்கொண்டார்கள்.

இஸ்ரவேலர் பாவம் செய்த போது அவர்களுக்கு உண்டாக போகும் தண்டனையை, அழிவை தீர்க்கதரிசனமாக உரைத்தாள். ஆனாலும் ராஜாவாகிய யோசியா தேவனுக்கு முன்பாக தன்னை தாழ்த்தினபடியால் அவன் அந்த அழிவை காண்பதில்லை என்றும் தீர்க்கதரிசனம் உரைத்தாள்.

ஊ

ஊசிம் : **HUSHIM**

பெயரின் அர்த்தம் : அவசரப்படுதல்

வேத ஆதாரம் : I நாளா : 8 : 8,11

இந்தப் பெயர் அவசரப்படுதலையும் குறைபிரசவ பிறப்பையும் குறிக்கிறதாயிருக்கிறது. இவள் மோவாப் தேசத்தை சேர்ந்தவள். சகராயீமின் மனைவி. இந்த சகராயீம் பென்யமீன் கோத்திரத்தை சேர்ந்தவன். ஊசிம் அபிதூபையும், எல்பாலையும் பெற்றாள். மேலும் ஊசிம் என்ற பெயரில் இரண்டு ஆண்களும் உண்டு. (ஆதி : 46 : 23, I நாளா : 7:12)

எ

எகுதியாள் : **(JEHODIJAH)**

பெயரின் அர்த்தம் : யெகோவா என் மகிமை

வேத ஆதாரம் : I நாளா : 4 : 18

இந்த எகுதியாள் மேரேத்தின் மனைவியாவாள். மேரேத்தின் யூத மனைவி எகுதியாள் என்றும், எகிப்திய மனைவி பித்தியாள் என்றும் சொல்லப்படுகிறது.

எக்லாள் : **(EGLAH)**

பெயரின் அர்த்தம் : கன்றை ஈனாத இளம் பசு

வேத ஆதாரம் : II சாமு : 3:5, I நாளா : 3:3

தாவீதின் எட்டு மனைவிகளில் இவளும் ஒருத்தி. இவளைப்பற்றி அதிக தகவல்கள் நமக்கு கொடுக்கப்படவில்லை. தாவீதின் ஆறாம் குமாரனாகிய இத்ரேயாமை பெற்றெடுத்தவள்.

எக்கோலியாள் : **(JECOLIAH)**

பெயரின் அர்த்தம் : 'ஆற்றல் மிகுந்த' (அ) யெகோவாவினால் ஆற்றல் மிகுந்தவள்

வேத ஆதாரம் : 2 இராஜா 15:2, II நாளா 26:3

யூதாவின் ராஜாவாகிய அமத்சியாவின் மனைவி. தன் தகப்பனைப்போலவே கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்த அசரியா அல்லது உசியாவின் தாய். இவள் தன் பிள்ளையையே கர்த்தருக்கு பிரியமான பாதையில் நடத்தினபடியால் தானும் தேவனைப்பற்றிக்கொண்ட நற்குணசாலியாகவே இருந்திருப்பாள்.

4. எஸ்தர் : (ESTHER)

பெயரின் அர்த்தம் : இது ஒரு பெர்சியப் பெயர்

'ஆஸ்டர்' என்ற வார்த்தையிலிருந்து பிறந்த பெயர்.
இதற்கு 'ஒரு நட்சத்திரம்' என்று அர்த்தமாம்.
'நல்ல அதிர்ஷ்டமான காலத்தை' இது குறிக்கிறது.

வேத ஆதாரம் : எஸ்தர் புத்தகம் முழுவதும்

எஸ்தர், சுமார் கி.மு. 600 ஆம் ஆண்டு எரேமியாவோடு சேர்த்து சிறைபிடிக்கப்பட்டு போன ஒரு குடும்பத்தின் வாரிசு என்று சொல்லப்படுகிறது. பெர்சிய தேசத்தில் சுசானில் வாழ்ந்து கொண்டிருந்த அபியாயேல் என்னும் ஒருவனுடைய குமாரத்தி தான் எஸ்தர். அவளுடைய பெற்றோர் மரித்தப்பின் மொர்தேகாயின் பராமரிப்பில் வளர்ந்தாள். அவள் சிறுவயதிலிருந்தே தன் வளர்ப்பு தந்தையாகிய மொர்தேகாய்க்கு கீழ்படிந்து வந்தாள். மொர்தேகாய், எஸ்தர் தனக்கு சகோதரி முறையானாலும் தன் சொந்த மகளைப்போல் வளர்த்து வந்தான்.

பின்னர் ராஜாவாகிய அகாஸ்வேருவை திருமணம் செய்து கொண்டு அந்த தேசத்திற்கே ராஜாத்தியாய் மாறினாள். யூதகுலம் அழிக்கப்பட வேண்டிய சூழ்நிலை வந்தபோது தன் உபவாசத்தாலும், ஜெபத்தாலும், தேவன் மேல் கொண்ட நம்பிக்கையினாலும் தன் புத்திசாலித்தனமான அணுகுமுறையினாலும், முழு யூத குலத்தையும் அழிவிலிருந்து காப்பாற்றி பூரிம் என்னும் ஒரு பண்டிகை கொண்டாட காரணமாயிருந்தாள். இவளுடைய யூதப்பெயர் அத்சாள் (அத்சாள் பார்க்கவும்)

5. எதிதாள் : (JEDIDAH)

பெயரின் அர்த்தம் : யெகோவாவின் பிரியம்

வேத ஆதாரம் : II இராஜா 22:1,2

போஸ்காத் ஊரானாகிய அதாயாவின் குமாரத்தி. கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்து, தன் சொந்த ஊழியக்காரரால் கொல்லப்பட்ட யூதாவின் ராஜாவாகிய ஆமோனின் மனைவி. இவளுடைய மகனான யோசியா கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்தான். ஆமோனின் மரணத்திற்கு பின்பு மகன் யோசியா 8 வயதில் ராஜாவாகி 31 வருடம் அரசாண்டான். தன் கணவன் பொல்லாத வழியில் நடந்தபோதும் தன் பிள்ளையை கர்த்தருக்கு பிரியமாய் வளர்த்து, அவன் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்தான் என்று சொல்லும் அளவிற்கு அவனை நடத்தியதில் முக்கிய பங்கு இந்த தாயாகிய எதிதாளுக்கே.

6. **எப்சிபாள்** : (HEPHZIBAH)

பெயரின் அர்த்தம் : எனக்கு பிரியமானவள்

வேத ஆதாரம் : II இராஜா : 21 : 1, ஏசாயா : 62:4

இசை நயம் கொண்ட இந்த அருமையான உருவகப் பெயர், தேவனுக்கு பிரியமாய் நடந்த எசேக்கியா ராஜாவின் மனைவியின் பெயராகும். இவள் மனாசேயின் தாய்

தேவன் சீயோனை திரும்ப சேர்த்துக் கொள்ள மனதாயிருந்த போது அதற்கு கொடுக்கப்பட்ட உருவகப் பெயர் தான் எப்சிபாள்.

“**நீ இனி கைவிடப்பட்டளவள் என்றும் பாழான தேசம் என்றும் அழைக்கப்படாமல் எப்சிபாள் என்று அழைக்கப்படுவாய்.**” அதாவது நீ கர்த்தருக்கு பிரியமானவள் என்று அழைக்கப்படுவாய். இப்பெயர் மணவாளனுக்கும் மனவாட்டிக்கும் இடையே உள்ள பிரியத்தைக் குறிக்கிறது. எனவே இப்பெயர் சபைக்கு ஒப்புமைப் பெயராகவும் குறிப்பிடப்படுகிறது எனலாம்.

எப்பாள் : (EPHAH)

பெயரின் அர்த்தம் : அந்தகாரம் (அ) இருள்

வேத ஆதாரம் : I நாளா 2 : 46

எபிரோனை சுகந்திரமாகப் பெற்ற யூதாவின் பிரபுவாகிய காலேபின் மறுமனையாட்டி. இவள் காலேபுக்கு ஆரான், மோசா, காசேஸ் என்னும் மூன்று குமாரரைப்பெற்றாள்.

8. **எப்ராத்தா** : (EPHRATH)

பெயரின் அர்த்தம் : பழமுதிர் தேசம்

எப்பிராத்தா என்பதன் சுருக்கம் தான் எப்ராத்.

வேத ஆதாரம் : I நாளா : 2 : 19,50, 4:4

பெத்லகேம் என்பதன் மறுப்பெயர் தான் எப்பிராத்தா. இந்த எப்பிராத்தா என்றால் விளைச்சல் மிகுந்த தேசம் என்று பொருள்படும். எப்ராத்தா என்னும் பேர் கொண்ட இந்த பெண் காலேபின் இரண்டாம் மனைவியும், ஊரின் தாயுமாவாள். கானான் தேசத்தை வேவுபார்க்க சென்ற காலேபின் பாட்டி. தன் கணவனுடைய இறப்புக்கு பின்பு தன் மகனோடு கீழ்த்தரமான உறவில் ஈடுபட்டு, அதன் விளைவாக பிறந்தவனே தெக்கோவாவின் தகப்பனான். அக்காலத்தில் தெக்கோவாவின் குடிகள் என ஒரு கூட்ட மக்கள் வாழ்ந்து வந்தனர். இக்குடிகளுக்கு தகப்பனானவன் தான் இந்த எப்பிராத்தாவுக்கும் அவள் மகனுக்கும் பிறந்தவன் ஆவான்.

9. **எமீமாள்** : (JEMIMA)

பெயரின் அர்த்தம் : ஒரு சிறு புறா

வேத ஆதாரம் : யோபு : 42 : 14

எமீமாள், யோபு ஆசீர்வாதத்திற்கு திரும்பின பிறகு பிறந்த மூத்த குமாரத்தியாவாள். யோபு 1:4ல் சொல்லப்பட்ட மூன்று குமாரத்திகள் யோபு 1:18,19ல் சொல்லப்பட்ட பெருங்காற்றினால் மரித்து போனார்கள். எபிரேய வேதாகமத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பு, எமீமாளை, பகலின் பிரகாசம் (அ) அழகு என்று குறிப்பிடுகிறது.

10. **எரீயோத்** : (JERIOTH)

பெயரின் அர்த்தம் : கூடார திரைசீலைகள்

வேத ஆதாரம் : I நாளா : 2 : 18

எஸ்ரோனின் மகனாகிய காலேபின் மனைவி தான் எரீயோத். இவளது இன்னொரு பெயர் அசுபாள். (அசுபாள் ① பார்க்கவும்)

11. **எருசாள்** : (JERUSHA)

பெயரின் அர்த்தம் : சுதந்திரமாக கொள்ளப்பட்டவள் (அ) வாழ்க்கைப்பட்டவள்

வேத ஆதாரம் : II ராஜா 15:33, I நாளா 6:12, II நாளா 27:1-6

தாவீதின் அரசாட்சியின் காலத்தில் ஆசாரியனாயிருந்த சாதோக்கின் குமாரத்தி தான் இந்த எருசாள். யூதாவின் இராஜாவாகிய உசியாவின் மனைவி. எருசாளின் மகனாகிய யோதாம் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்தான் என்றும் தன் வழிகளை கர்த்தருக்கு முன்பாக நேராக்கினதினால் பலப்பட்டான் என்றும் எழுதியிருப்பதன் மூலம் அவன் தாயின் வளர்ப்பு முறை விளங்கும்.

2. **எயோதியாள்** : **(EUODIAS)**

பெயரின் அர்த்தம் : இனிமையான பயணம்

வேத ஆதாம் : பிலி : 4 : 2

சாதாரணமாக இது ஆண்களுக்கு வைக்கப்படும் ஒரு பெயராகும். ஆனால் இந்த எயோதியாள், சிந்திக்கேயாள் என்னும் ஒரு பெண்ணோடு சேர்த்து வாழ்த்தப்படுவதால் இவளும் ஒரு பெண் என்று அறியப்படுகிறது. பிலிப்பி பட்டணத்தின் வெளியே ஆற்றினருகே பவுலின் பிரசங்கத்தை கேட்க வந்த ஸ்திரிகளில் இவர்களும் அடங்குவர் (அப் : 16 : 13) பின்னர் அவர்கள் விசுவாசிகளாகி பவுலுக்கு உடன் ஊழியராயிருந்தார்கள். ஆனால் இவர்கள் குடும்பத்தைப்பற்றி வேதம் நமக்கு ஒன்றையும் அறிவிக்கவில்லை.

இந்த இரு பெண்களுக்கு இடையே ஏதோ ஒரு கருத்து வேறுபாடு இருந்திருக்கிறது. அது என்னவென்று சொல்லப்படவில்லையென்றாலும் தங்கள் கருத்து வேறுபாடுகளையும், பிரிவினைகளையும் விடுத்து கிறிஸ்துவுக்குள் ஒரே சிந்தையாய் சமாதானமாய் இருக்கும்படி பவுல் அறிவுறுத்துகிறார். இப்படிப்பட்டதான பிரிவினைகளும் கருத்து வேறுபாடுகளும் இன்றைய திருச்சபைகளிலும் இருக்கிறதென்பது வருத்தத்திற்குரிய காரியமாகும். நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சிந்தையாய் சமாதானமாய் இருக்க வேண்டும் என்பது இவர்கள் மூலம் நாம் கற்றுக்கொள்ளும் பாடமாகும்.

எலிசபாள் : **(ELISHEBA)**

பெயரின் அர்த்தம் : கர்த்தரின் ஆணை

வேத ஆதாரம் : யாத் 6:23

'எலிசபெத்து' என்ற பெயரின் எபிரேய வடிவம் தான் எலிசபாள். ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த மகாப்பெரிய வாக்குத்தத்தமாகிய ஆணையை இப்பெயர் குறிக்கிறது.

'எலிசபாள்' என்னும் பேர் கொண்ட இந்த பெண் அம்மினதாபின் குமாரத்தி. நகசோனின் சகோதரி. ஆரோனின் மனைவி. இந்த ஆரோன் பிரதான ஆசாரியனும், மோசேயின் மூத்த சகோதரனுமானவன். இவள் அவனுக்கு நாதாபையும், அபியூவையும் எலேயாசாரையும், இத்தாமாரையும் பெற்றாள். எனவே எலிசபாள் ஆசாரிய ஊழியம் செய்யும் குடும்பங்களுக்கு தாயானாள்.

14. **எலிசபெத்து** : **(ELISABETH)**

பெயரின் அர்த்தம் : கர்த்தர் என் ஆணை

வேத ஆதாரம் : லூக் 1:5-80

ஆரோன் குடும்பத்தை சேர்ந்த தேவ பக்தியுள்ள ஒரு பெண்மணி தான் எலிசபெத்து. இவள் ஆரோனின் மனைவியாகிய எலிசபாளின் பெயரை கொண்டுள்ளாள். ஆசாரியனாகிய சகரியாவின் மனைவி. யோவான் ஸ்நானகனின் தாய். ஆசாரியனாகிய சகரியா தன் முறைமையின்படி தூபம் காட்டுகிற வேளையிலே தேவ தூதனை தரிசித்து, யோவானின் பிறப்பை குறித்து முன்னறிவிப்பை பெற்றான். எலிசபெத்து வயது சென்றவளாயிருந்த போது தேவதிட்டத்தின் படி கர்ப்பந்தரித்து யோவானை பெற்றாள். யோவானின் பிறப்பும், வளர்ப்பு முறையும், ஊழியமும் முன்னறிவிக்கப்பட்டதால் அவர்கள் கர்த்தருக்கு கீழ்படிந்து அவனை ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்தார்கள். இந்த எலிசபெத்து இயேசுவின் தாயாகிய மரியாளின் இனத்தாளாயிருந்தாள். எனவே கன்னிப்பெண்ணான மரியாள் கர்ப்பவதியான போது அவளை வெறுக்காமல் தேவ சித்தத்தை உணர்ந்தவளாய் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு அவளை வாழ்த்தினாள். அவள் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டவளாய் மேசியாவின் வருகையை உணர்ந்து மரியாளை வாழ்த்துகிறாள்.

ஏ

1. **ஏரோதியாள்** : **(HERODIAS)**

பெயரின் அர்த்தம் : ஏரோதியாள் என்பது ஏரோது என்ற பெயரின் பெண் வடிவமாகும். ஏரோது என்பது கிறிஸ்துவின் காலத்திலும் அப்போஸ்தலர்களின் காலத்திலும் இருந்த யூத ஆட்சியாளர்களுக்கு கொடுக்கப்பட்ட பெயராகும்.

ஏரோது என்றால் வீர தீர செயல்கள் செய்பவர் என்று அர்த்தமாகும். அதாவது 'Heroic' என்ற வார்த்தையின் அர்த்தத்தில் அடங்கும். ஆனால் அவர்கள் இந்த பெயருக்கு ஏற்றாற்போல் நடந்து கொள்ளாமல் ஜனங்களை மிகவும் துன்பப்படுத்தினார்கள்.

வேத ஆதாரம் : மத் : 14 : 3-12, மாற் 6:14-24, லூக். 3:19,20

பெரிய ஏரோதின் மகனான அரிஸ்தொபூலுவின் மகள் தான் இந்த ஏரோதியாள். பெரிய ஏரோதின் மகனான முதலாம் ஏரோது பிலிப்புவின் மனைவி. அவனுடைய சகோதரனாகிய ஏரோது அந்திப்பா, தன் சகோதரன் மனைவி என்றும் பாராமல் அவளை தான் வைத்துக்கொண்டான். அவன் தன் சகோதரனை ரோம் நகரில் ராஜரீக முறையில் சந்திக்க வரும்போதெல்லாம் ஏரோதியாளை சேர்த்துக்கொள்ள விரும்பினான். இதற்கு தடையாயிருந்த அரேபிய ராஜகுமாரத்தியான தன் மனைவியை தள்ளி வைத்துவிட்டு ஏரோதியாளை தனக்கு மனைவியாக்கிக் கொண்டான். அவளுடைய மகளாகிய சலோமேயையும் தன் அரண்மனையில் தங்க வைத்துக் கொண்டான். யோவான் ஸ்நானகன் இதைக்குறித்து அவனை கண்டித்த போது, இதை விரும்பாத ஏரோதியாள் தன் மகள் மூலமாக யோவான் ஸ்நானகனின் தலையைக் கேட்டு பெற்றுக்கொண்டாள். ராஜாவாகிய ஏரோது இதை விரும்பாதபோதிலும் சூழ்நிலையின் பேரில் அதை செய்ய கட்டளையிட்டான்.

பழைய ஏற்பாட்டின் யேசபேலின் மொத்த உருவம் தான் புதிய ஏற்பாட்டின் இந்த ஏரோதியாள். வேதாகம பெண்களில் மிகவும் மோசமான பெண்களில் இவளும் ஒருத்தி. யேசபேல் எலியா தீர்க்கதிசியை வெறுத்ததினால் அவரை கொல்ல முயற்சி செய்தாள். ஏரோதியாளும் தீர்க்கதரிசியாகிய யோவானை கொலை செய்தாள். ஜீவனுள்ள தேவனுடைய தீர்க்கதரிசிகள் மேல் கைப்போட்ட இந்த இரு பெண்களும் சந்தித்தது வீழ்ச்சியே. ஏரோதியாளின் முடிவு என்ன தெரியுமா? ஏரோதியாளின் பேராசை ஏரோதுவின் அழிவுக்கு காரணமாயிருந்தது. இவள் தன் சகோதரனாகிய ஏரோது முதலாம் அகிரிப்பாவின் மேல் பொறாமை கொண்டு அவனுடைய ராஜ்யத்தையும் தன் கணவனுக்கு கொடுக்க நினைத்தாள். இதை மறுத்த முதலாம் அகிரிப்பா, ஏரோது அந்திப்பாவை சிறைபிடித்தான். அவனுடைய மீதி நாட்கள் அவமானத்திலும் நிந்தையிலும் கழிந்தது. இதனால் ஏரோதியாளின் வாழ்வும் அழிந்தது.

2. **ஏலாள்** : **(HELAH)**

பெயரின் அர்த்தம் : 'அழுக்கு', 'துரு', 'வியாதி' பழைய ஏற்பாட்டின் சில பெயர்கள் அவர்கள் பிறப்பின் சூழ்நிலையை வெளிப்படுத்துவதாக அமைந்து விடுகிறது.

வேத ஆதாரம் : I நாளா 4:5:7

தெக்கோவாவின் மூப்பனான அசூரின் மனைவிகளில் ஒருத்தி. ஏலாளுக்கு சேரேத், எத்சோகார், எத்னான் என்னும் மூன்று குமாரர்கள் இருந்தார்கள்.

3. **ஏவாள்** : **(EVE)**

பெயரின் அர்த்தம் : ஜீவன்

வேத ஆதாரம் : ஆதி : 2,3, அதிகாரங்கள் II கொரி : 11 : 3, I தீமோ : 2 : 13

உலகத்தின் முதல் பெண்ணுக்கு ஆதாம் இட்ட பெயர் தான் ஏவாள். அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவளானதால் அவளுக்கு இப்பெயர் இடப்பட்டது. ஏதேன் தோட்டத்தில் வாழ்ந்த அவள் விலக்கப்பட்ட கனியை புசித்து தேவனுக்கு கீழ்படியாததால் அவர்கள் தோட்டத்தை விட்டே துரத்தப்பட்டார்கள். ஏவாள் காயீன், ஆபேல், சேத் மற்றும் அநேக குமாரர், குமாரத்திகளை பெற்றாள்.

ஆதாமின் மனைவியாகிய இவளுக்கு வேதாகமம் மூன்று பெயர்களைக் கொடுக்கிறது. **இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியால் 'மனுஷி எனப்படுவாள். (ஆதி : 2 : 23)** முதல் பெயர் மனுஷி என்பதாகும். 'மனுஷி என்பது ஒரு பெயரை விட மேலானதாகும். ஏனெனில் அவள் ஆதாம் என்னும் மனுஷனுக்கு இணையாய் உருவாக்கப்பட்டவள் என்பதையும், அவள் 'மனுஷி வர்க்கததை சேர்ந்தவள் என்பதையும் அது வெளிப்படுத்துகிறது. அடுத்ததாக "அவர்களை **ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்து, ... அவர்களுக்கு மனுஷர் என்று பேரிட்டார்." (ஆதி 5:2)** இரண்டாவது பெய மனுஷர் என்பதாகும். ஆணோடு சேர்த்து பெண்ணுக்கும் "மனுஷர்" என்ற பெயர் வழங்கப்பட்டது. இதன் மூலம் மனுஷன் தன் மனைவியோடு சேர்ந் பிரிக்க முடியாதவனாய் இருக்கிறான் என்பதை உணர்த்துகிறது. இதன் பின் பாவத்திற்குள் விழுந்து தண்டனையை பெற்ற பிறகே ஆதாம் அவளை ஏவா என்று அழைக்கிறான் (ஆதி : 3 : 16,20). ஏவாள் என்றா 'ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்' என்று அர்த்தமாகும். அதாவ பிள்ளையை பெற்றெடுத்து அதற்கு ஜீவன் கொடுத்தவள் என்று அர்த்தமாகு

வேதாகம காலத்தில் பெயர் மாற்றம் என்பது அந்த சூழ்நிலையின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாய் இருந்தது. அப்படியே ஏவாள் என்னும் பெயர் மாற்றம் அவளது பிள்ளைபேறு என்னும் சூழ்நிலையின் முக்கியதுவத்தை உணர்த்துகிறது. ஏவாளுக்கு வேதாகமத்தில் சில சிறப்பு அம்சங்கள் உண்டு.

1. இந்த பூமியில் வாழ்ந்தவர்களில் ஏவாளே முதல் பெண்மணியாவாள்.
2. ஏவாளே 'மனைவி' என்று அழைக்கப்பட்ட முதல் பெண்மணியாவாள்.
3. பூமியிலேயே சௌந்தரியமான முதல் பெண்மணி.
4. பூமியில் பாவமில்லாமல் பிறந்த ஒரே பெண்மணி.
5. சாத்தானால் வஞ்சிக்கப்பட்ட முதல் பெண்மணி.
6. உலகின் முதல் ஆடை தயாரிப்பாளர் ஏவாளே.
7. உலகின் முதல் கொலைக்கார மகனைப் பெற்ற தாய்.

அதுமாத்திரமல்லால் சிலுவையின் தெய்வீக வெளிப்பாட்டை முதன் முதலில் பெற்றவளும் இவளே. எப்படியெனில் ஆதி : 3 : 15ன் படி ஸ்திரீயின் வித்தான ஒருவர் வந்து சர்ப்பத்தின் தலையை நசுக்குவார் என்ற தீரக்கதரிசனத்தை பெற்றாள். இரட்சகரைக்குறித்த இந்த முதல் வாக்குத்தத்தமே பின்பு இயேசுவை சிலுவையில் தேவசித்தத்தை முடிக்கும் படி செய்தது. மேலும் இதுவே ஆதாமுக்குள் மரித்த நாம் கிறிஸ்துவுக்குள் உயிரத்தெழுவோம் என்ற நம்பிக்கையை நமக்கு கொடுக்கிறது.

ஐ

ஐனிக்கேயாள் : (EUNICE)

பெயரின் அர்த்தம் : வெற்றியை உடையவள்

வேத ஆதாரம் : அப் : 16 : 1-3, II தீமோ : 1:5,3:14,15

லோவிசாளின் மகள். அவளுடைய தகப்பன் பெயர் கொடுக்கப்படவில்லை. யூத குலத்தை சேர்ந்த பெண்மணி, ஆயினும் புறஜாதியான் என்று சொல்லப்படும் கிரேக்கனை திருமணம் செய்து கொண்டாள். ஐனிக்கேயாளின் கணவரைப்பற்றி எதுவும் சொல்லப்படாததால், பவுல் அவர்களை சந்தித்த சமயங்களில் அவர் இறந்திருப்பார் என்று கருதப்படுகிறது. பவுலின் உடன் ஊழியனான தீமோத்தேயுவின் தாய். அவள் தன் மகனை வேத வார்த்தைகளின் படி

வளர்த்தாள். தீமோத்தேயுவின் பாட்டியாகிய லோவிசாளும், தாயாகிய ஐனிக்கேயாளும் அவனை சிறுவயதிலிருந்தே நல்வழியில் நடத்தி சுவிசேஷ ஊழியத்திற்கென்று ஆயத்தப்படுத்தினதாக பவுல் சொல்லுகிறார். நாமும் நம்முடைய பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்பதே ஐனிகேயாள் மூலம் நாம் கற்றுக்கொள்ளும் பாடமாகும்.

ஒ

1. **ஒக்லாள்** : (HOGLAH)

பெயரின் அர்த்தம் : கவுதாரி

தேவ ஆதாரம் : எண். 26:33, 27:1-11, 36:1-12, யோசு 17:3

செலொப்பியாத்தின் ஐந்து குமாரத்திகளில் இவள் மூன்றாவது குமாரத்தி. செலொப்பியாத் மனாசே கோத்திரத்தை சேர்ந்தவன். அவனுக்கு ஆண் பிள்ளைகள் இல்லாதிருந்தது. இந்த ஐந்து பெண்களும் தன் தகப்பனுடைய சொத்திற்கு உரிமை கோரி மோசேயினிடதற்கு வந்தார்கள். இவர்கள் பெண்களாயிருந்தும் தங்களுக்கு சேர வேண்டிய தன் தகப்பன் சொத்துக்களுக்கு உரிமை கோரினார்கள். கடைசியில் அதை பெற்றுக்கொண்டு அநேகருக்கு ஒரு எடுத்துகாட்டாய் மாறினார்கள். தங்களுக்குரியதை கேட்டு பெற்றுக்கொள்ளும் இவர்களுடைய தைரியம் பாராட்டுதலுக்குரியது.

ஓ

ஓதேசாலே : (HODESH)

பெயரின் அர்த்தம் : அமாவாசை (அ) புதுநிலவு

வேத ஆதாரம் : I நாளா : 8 : 8,9

சகராயீமின் மனைவிகளில் இவளும் ஒருத்தி (ஊசிம் பார்க்கவும்)

பென்யமீன் கோத்திரத்தானாகிய சகராயீமின் மனைவிகளைப் பற்றி வேதம் கூறும்போது, அவர்கள் பெயர் ஊசிம், பாராள் என்று குறிப்பிடுகிறது. ஆனால் அவனுடைய பிள்ளைகளைப்பற்றி குறிப்பிடும் போது பாராளுக்கு பதிலாக ஓதேசாலே என்னும் பெயர் சொல்லப்படுகிறது. இதைப்பற்றி வேத அறிஞர்கள்

கூறும்போது பாராளையே இங்கு ஓதேசாலே என்று குறிப்பிடுவதாக கூறுகின்றனர். ஏனெனில் பாராள் என்றால், 'தீ மூட்டுதல்' அல்லது 'எரிதல்' என்று பொருள்படும். அப்படியே பண்டைய இஸ்ரவேலர்கள் புது நிலவை வரவேற்கும் விதத்தில் அமாவாசையன்று இரவில் தீ மூட்டுவது வழக்கம். 'தீ மூட்டுதல்' என்று அர்த்தங்கொள்ளும் பாராளை சொல்வதற்கு பதிலாக அதற்கு ஒப்பனையான 'புது நிலவு' என்று அர்த்தங்கொள்ளும் ஓதேசாலேயை குறிப்பிட்டதாக வேத அறிஞர்கள் கருதுகிறார்கள்.

ஓர்பாள் : (ORPAH)

பெயரின் அர்த்தம் : கழுத்து (அ) பிடரி

வேத ஆதாரம் : ரூத் 1 அதிகாரம்

எலிமெலேக்கும் நகோமியும் பஞ்சத்தின் காரணமாக பெத்லகேமை விட்டு மோவாப் தேசத்திற்கு சென்ற போது, அவர்களுடைய மகன் கிலியோனுக்கு மனைவியான மோவாப் தேசத்து பெண்தான் ஓர்பாள். ரூத்தும் ஓர்பாளும் ஒரே குடும்பத்து மருமகள்கள். மக்லோன், கிலியோன் மரித்த பின்பும் கூட ஓர்பாளும் ரூத்தும் தன் மாமியாரான நகோமியுடனேயே தங்கியிருந்தார்கள். ஆனால் நகோமி தன் சொந்த தேசத்திற்கு திரும்பும் முடிவுக்கு வந்தபோது, தன் மருமகள்கள் தன்னோடு வருவதைப்பற்றி சுயமுடிவு எடுக்கும் படி அனுமதித்தாள். ரூத்தும் ஓர்பாளும் இந்த யூத குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டபடியால் ஜீவனுள்ள தேவனைப்பற்றி நன்கு அறிந்திருந்தார்கள். எனவே தான் ரூத் நகோமியுடன் பெத்லகேமிற்கு செல்வதாகவும், உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்றும் சொல்லமுடிந்தது.

ஆனால் ஓர்பாளின் மனமோ தன் சொந்த தேசமாகிய மோவாப்பின் தெய்வமாகிய மோளேக்கிடம் இருந்தது. அவள் தன் எதிர்காலத்தைக்குறித்து கவலைப்பட்டு, தன் உறவினர்களிடமே செல்ல முற்பட்டாள். ஓர்பாள் நகோமியை மாத்திரம் விட்டு பின்வாங்கவில்லை, ஜீவனுள்ள தேவனை விட்டே பின் வாங்கினாள். ஓர்பாள் அறியாமைக்குள் சென்று தேவனுடைய புனித வரலாற்றிலிருந்து காணாமல் போனாள்.

க

1. **கஸ்பி** : (COZBI)

பெயரின் அர்த்தம் : ஏமாற்றுக்காரி

வேத ஆதாரம் : எண் 25 : 6 - 18

மீதியான் தேசத்தின் ஒரு பிரிவினரின் தலைவனாகிய சூரின் குமாரத்தி தான் கஸ்பி. அவளுடைய பெற்றோர் ஒரு ஆண் குழந்தையை எதிர்ப்பார்த்த பின்னர் அவள் பெண் குழந்தையாக பிறந்ததால், அவளுக்கு இந்த பெயர் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. அவள் சிறுவயதிலிருந்தே ஒழுக்கமற்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்ததாக வில்கின்சன் என்னும் வேத அறிஞர் குறிப்பிடுகிறார். சிமியோனியரின் வம்சத்தைச் சேர்ந்த சல்லூவின் குமாரனாகிய சிம்ரியை தன் பொல்லாத நடக்கையினால் துண்டினாள். ஏற்கனவே ஜனங்கள் பாகாலை பேயோரை பின்பற்றினதினாலேயும் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணினபடியினாலும் தேவன் இஸ்ரவேலர்களுக்குள்ளே வாதையை அனுப்பியிருந்தார். ஆயிரக்கணக்கான இஸ்ரவேலர் வாதையினால் அழிந்து கொண்டிருந்தனர். இந்த சூழ்நிலையை உணராமல் சிம்ரி கஸ்பியை அழைத்துக் கொண்டு வருகிறான். அவளோடே சயனிக்கும் படியாய் ஒரு அறைக்குள் அழைத்து செல்கிறான். இதைப்பார்த்த ஆசாரியனாகிய எலெயாசாரின் குமாரனாகிய பினெகாஸ் ஈட்டியை எடுத்து அவர்கள் இருவரையும் குத்திப்போட்டான். அப்போது இஸ்ரவேலில் வாதை நிறுத்தப்பட்டது. ஒரு பெண்ணின் மரணத்தின் மூலம் இஸ்ரவேலின் வாதை நிறுத்தப்பட்டதானால் அவள் குணம் இதன் மூலம் விளங்கும். பினெகாஸின் செய்கை அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சங். 106 : 28 - 31 சொல்கிறது. எண். 25:9, I கொரி 10:8 ஆகிய வசனங்களை வாசிக்கவும்.

கந்தாகே : (CANDACE)

பெயரின் அர்த்தம் : பிள்ளைகளின் இராணி

வேத ஆதாரம் : அப் : 8 : 27

கந்தாகே என்பது ஒரு குறிப்பிட்ட ஒரு பெண்ணின் பெயரல்ல. அது எத்தியோப்பிய இராணிகளுக்கு கொடுக்கப்பட்ட பொதுப்பெயராகும். இந்த குறிப்பிட்ட சம்பவத்திலும் கூட கந்தாகே என்னும் இராணியின் பெயரை லூக்கா

குறிப்பிடவில்லை. எகிப்திய அரசர்கள் 'பார்வோன்' என்று அழைக்கப்படுவதைப் போலவும் ரோம பேரரசர்கள் 'சீஸர்' என்று அழைக்கப்படுவதைப் போலவும் எத்தியோப்பிய இராணிகள் 'கந்தாகே' என்று அழைக்கப்பட்டார்கள். முதல் நூற்றாண்டின் கிறிஸ்தவ காலகட்டத்தில் கந்தாகே என்று சொல்லப்படும் இராணிகள் தான் எத்தியோப்பியாவை ஆண்டு வந்தார்கள். எத்தியோப்பிய மந்திரி ஒருவன் எருசலேமில் பணிந்து கொண்டு திரும்பும் போது பிலிப்பு ஆவியானவராலே அங்கே கொண்டுப்போகப்பட்டு சுவிசேஷம் அறிவித்து அவனுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதே இவ்வேதப்பகுதியின் சாரம்சமாகும். ஞானஸ்நானம் பெற்று தன் சொந்த ஊர் திரும்பிய எத்தியோப்பிய மந்தரி, கந்தாகேயிடம் தன் அனுபவத்தை எடுத்து சொல்லி, பின்னர் அவளும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதாகவும், மேலும் அநேகருக்கு அவர் சுவிசேஷம் சொல்லி, கிறிஸ்துவண்டை வழி நடத்தியதாகவும், பின்னர் எத்தியோப்பியாவின் முதல் பிஷப்பாக அவர் மாறியதாகவும் வரலாறு நமக்கு அறிவிக்கிறது.

கலவுதியாள் : **(CLAUDIA)**

பெயரின் அர்த்தம் : முடம்

வேத ஆதாரம் : II தீமோ : 4 : 21

புறஜாதியாளான கலவுதியாள் சுவிசேஷத்தை கேட்டு, அதை விசுவாசித்து ஏற்றுக்கொண்டவள். அவள் ரோம் நாட்டை சேர்ந்த கனம் பொருந்திய ஸ்திரீகளில் ஒருத்தி. வேதாகமத்தில் அவள் பவுலோடு சேர்ந்து தீமோத்தேயுவுக்கு வாழ்த்துதல் சொல்வதாக அவளை நாம் பார்க்க முடியும். அந்த வசனத்தில் சொல்லப்பட்ட புதேஞ்சுவின் மனைவி என்றும் பிற்காலத்தில் ரோம் நாட்டின் பிஷப்பாக மாறின லீனுவின் தாய் என்று வேத அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இந்த கலவுதியாள் ஒரு பிரிட்டிஷ் ராஜாவின் மகள் என்றும் வேறொரு வரலாற்று செய்தி குறிப்பிடுகிறது. எது எப்படியாயினும் இவள் தான் நேசித்து விசுவாசித்த இயேசுவுக்காய் பவுலோடு சேர்ந்து ஊழியம் செய்ததை நாம் வேதாகமத்தின் மூலம் தெளிவாக அறிய முடிகிறது. கனம் பொருந்திய ஸ்திரீயாயிருந்தும் அதை ஒரு பொருட்டாக எண்ணாமல் இயேசுவை நேசித்து ஊழியம் செய்தது பாராட்டுக்குரியதே.

4. **குலோவேயாள் : (CHLOE)**

பெயரின் அர்த்தம் : பச்சை புல்லின் முதல் துளிர்

வேத ஆதாரம் : I கொரி : 1 : 10,11

குலோவேயாள் கொரிந்து சபையின் மேற்பார்வையாளராகவும், தலைவியாகவும் இருந்தாள். அவள் தன் பெயருக்கு ஏற்றாற்போல், கனியுள்ள கிறிஸ்தவ வாழ்வின் அழகும், கிருபையும் பொருந்தியவளாயிருந்தாள். கொரிந்து பட்டணத்தில் உள்ள ஆதி திருச்சபையின் தலைவர்களுக்குள் வாக்குவாதங்கள் எழுந்தது. கிறிஸ்துவுக்குள் ஒரே சிந்தையாயிராமல் பிரிவினைகள் முளைத்தது. இதை குலோவேயாள் பவுலுக்கு அறிவிக்கிறாள். இந்த பிரச்சனையை தீர்க்க பவுல் தேவையான அறிவுரைகளை தன் நிருபத்தில் எழுதி அனுப்புகிறார். இதை நாம் கொரிந்தியர் முதலாம் அதிகாரத்தில் பார்க்க முடியும்.

ஆவிக்குரிய முதிர்ச்சியற்ற நிலையில் இருந்த கொரிந்து சபை பவுலுக்கு மிகுந்த மனவேதனையையும், அதை சரி செய்யும் பொறுப்பையும் கொடுத்தது.

இந்த சூழ்நிலைகளை திசை திருப்பி பிரச்சனையை பெரிதாக்காமல், இவர்களுடைய வாக்குவாதங்களை சரியான போதனையினாலேயே தீர்க்க முடியும் என்று அறிந்து அதைக்குறித்து பவுலுக்கு அறிவித்தாள். பவுலின் போதனைகள் தான் இவர்களுடைய பிரச்சனைகளுக்கு தீர்வு என்பதை அறிந்து சரியான முடிவு எடுத்தாள். குலோவேயாளின் இந்த முடிவை நாம் பாராட்டியே ஆக வேண்டும். ஏனெனில் இன்றைய சபைகளிலும் கூட இது போன்ற பிரச்சனைகள் இருந்துக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் சிலர் அதை தீர்க்க வழி அறியாமல் தங்கள் சுயநலத்தினாலும் கோபத்தினாலும் அதை பெரிதாக்கிவிடுகின்றனர். எந்த ஒரு பிரச்னையாயிருந்தாலும் வேதத்தினுடைய போதனைகளை சார்ந்தே முடிவு எடுக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக சகோதர அன்பில் நிலைத்திருந்தால் இது போன்ற பிரச்சனைகள் திருச்சபைக்குள் வருவதற்கான வாய்ப்பே இல்லை.

5. **கெத்சீயாள் : (KEZIA)**

பெயரின் அர்த்தம் : இலவங்கப்பட்டை (அ) வாசனை நிறைந்த மரப்பட்டை

வேத ஆதாரம் : யோபு : 42 : 14

யோபு இரட்டிப்பான ஆசீர்வாதம் பெற்றப்பின் பிறந்த இரண்டாவது மகள் தான் கெத்சீயாள். சங் : 45:8ல் சொல்லப்பட்ட வாசனை நிறைந்த மூலிகையின் பெயரே இப்பெயரின் அர்த்தம். இவளும் அழகு நிறைந்த மகளாயிருந்தாள். (எமீமாள் – பார்க்கவும்)

கேத்தூராள் : (KETURAH)

பெயரின் அர்த்தம் : வாசனை திரவியம்

வேத ஆதாரம் : ஆதி : 25 : 1-6, I நாளா : 1 : 32,33

சாராளின் மரணத்திற்கு பின்பு ஆபிரகாம் சேர்த்து கொண்ட மூன்றாம் மனைவி (ஆகாரை இரண்டாம் மனைவியாக கணக்கில் கொண்டால்). சாராள் மரித்தப்பின் தன் மகன் ஈசாக்கும் திருமணம் செய்துக்கொண்டு சென்றதால் தனிமையிலிருந்த ஆபிரகாம், துணையாயிருக்க கேத்தூராளை மறுமணம் செய்துக்கொண்டார். கேத்தூராளை மறுமனையாட்டி என்று I நாளா : 1 : 32 சொல்கிறது. சிம்ரான், யக்ஷான், மேதான், மீதியான், இஸ்பாக் மற்றும் சூவா ஆகிய ஆறு பிள்ளைகளை ஆபிரகாமுக்கு பெற்றாள். ஈசாக்குக்கு அவர்கள் பிரச்சனையாயிருக்க கூடாதென்று எண்ணி ஆபிரகாம் அவர்களை கிழக்கே கீழ்தேசத்திற்கு அனுப்பிவிட்டான். அங்கே அவர்கள் புதிய ஜாதிகளுக்கு தகப்பனானார்கள். கேத்தூராளின் பிள்ளைகளின் மூலம் ஆபிரகாம் அநேக ஜாதிகளுக்கு தகப்பனானான். ஆபிரகாம், கேத்தூராளுக்கு இடையேயான உறவைக்குறித்து கூப்பர் என்னும் வேத அறிஞர் சொல்லும் போது, அது காதல் நிறைந்த ஒரு திருமண பந்தம் அல்ல. வயது முதிர்ந்த ஒருவரை கவனித்துக்கொள்ளும் செவிலிதாயாகவே இருந்தாள். இதனால் காதலைக் காட்டிலும் மாரியாதையும், பயபக்தியுமே மேலோங்கி இருந்தது என்கிறார்.

கேரேனாப்பு : (KEREN HAPPUCH)

பெயரின் அர்த்தம் : வண்ணங்களால் நிரப்பப்பட்ட கொம்பு (அ) அழகுப்படுத்துபவள்

வேத ஆதாரம் : யோபு : 42 :14

மிருகங்களின் கொம்புகளால் செய்யப்பட்ட பெட்டியில் வண்ணக்கலவை நிரப்பப்பட்டிருப்பதே இந்த பெயரின் அர்த்தமாகும். இப்படி ஒரு அழகான பெயரைக் கொண்ட இப்பெண் யோபுவின் மூன்றாவது, அதாவது கடைசி மகள். அவள் தன் பெயருக்கு ஏற்றாற் போலவே அழகிய கண்களை

உடையவளாயிருந்தாள். அதாவது அழகுப்படுத்தப்பட்ட கண்கள் என்பு
இப்பெயர் குறிப்பிடும் அர்த்தமாகும்.

8) **கோமேர் : (GOMER)**

பெயரின் அர்த்தம் : நிறைவு செய்தல்

(அதாவது விக்கிரகாராதனையின் துன்மார்க்கத்தின் அளவை பெருக்கி அ
நிறைவடைய செய்தல்)

தேவ ஆதாரம் : ஓசியா : 1 : 1-11, 3 : 1-5

கோமேர் திப்லாயிமின் குமாரத்தியும், ஓசியா தீர்க்கதரிசியின் மனைவியுமாவா
விக்கிரகாராதனைக்கு அடையாளமாயிருந்த கோமேர் தேவனுடைய ஜனத்தி
அடையாளமாய் மாறினாள். தேவனுடைய ஜனமாகிய இஸ்ரவேல் கர்த்த
விட்டு விலகிபோயிற்று என்பதற்கு அடையாளமாய் தீர்க்கதரிசியாகிய ஓசி
கோமேரை தனக்கு மனைவியாக சேர்த்துக்கொண்டான். ஒசியாவுக்கு
கோமேருக்கும் மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள்.

யெஸ்ரயேல் : கர்த்தர் விதைத்தார் என்று அர்த்தம் (அவரால் நாட்டவும் சிதறடிக்கவும் முடியும் என்பதை குறிக்கிறது)

லோருகாமா : இனி இரக்கம் செய்வதில்லை

லோகம்மீ : இவர்கள் என் ஜனமல்ல

இஸ்ரவேலர் தேவனை விட்டு பின்வாங்கியதால் தேவன் அவர்களு
கொடுக்கும் தீர்க்கதரிசன முடிவின் அடையாளமே கோமேரும் அவளது மூ
பிள்ளைகளும்!

ச

1. **சப்பிராள் : (SAPPHIRA)**

பெயரின் அர்த்தம் : இந்திரநீலம் (ஒரு வகை இரத்தினக்கல்) இது அழகைக் குறிக்கிறது

வேத ஆதாரம் : அப் : 5 : 1-11

இந்த சப்பிராள் அனனியாவின் மனைவி என்பதை தவிர அவர்களைப் ப
வேதாகமம் நமக்கு ஒரு தகவலும் கொடுக்கவில்லை. சப்பிராள் என்பது

அரமேய மொழிப்பெயர். அதற்கு அழகு என்று பொருள்படும். இந்த அனனியாவும் சப்பிராளும் ஆதித்திருச்சபையில் மற்றெல்லாரைப் போலவும் தங்கள் நிலத்தை விற்று அப்போஸ்தலருடைய பாதத்தில் வைக்க முடிவு செய்தார்கள். ஆனால் அவர்கள் அதை விற்ற போது தங்களுக்கென்று ஒரு பகுதியை வஞ்சித்து வைத்துக்கொண்டார்கள். அதை அவர்கள் அப்போஸ்தலர் பாதத்தில் வைக்கும் வரை அது அவர்களுடையதாயிருந்தது. இருப்பினும் அதை அவர்கள் மறைத்து வஞ்சித்து வைத்தார்கள். பேதுரு அதைக்குறித்து கேட்ட போது அவர்கள் பொய் சொல்லி தங்கள் ஜீவனையே அழித்துக் கொண்டார்கள். சுயநலம், பெருமை, பொய் ஆகியவை சப்பிராளையும் அவள் கணவரையும் மரணம் வரை கொண்டு சென்றது.

சப்பிராளின் இந்த நிகழ்வில் பொய்யைவிட பகட்டும், பெருமையுமே மேலோங்கி இருந்தது. அக்காலத்தில் எல்லாரும் தங்களுக்குரியதை விற்று அப்போஸ்தலர்களிடம் கொடுத்ததால் தங்களுக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் அதை பகட்டுக்கும் பெருமைக்கும் செய்தார்கள். எனவேதான் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டால் நமக்கு என்ன செய்வது என்ற சுயநலம் அவர்களுக்குள் எட்டிப்பார்த்தது. பெருமைக்கும் சுயநலத்திற்கும் இடையில் மாட்டிக் கொண்ட அவர்கள் கடைசியில் மாயமாலத்தில் விழுந்து போனார்கள். எல்லார் முன்பாக தாங்களும் எல்லாவற்றையும் விற்றுக்கொடுத்துவிட்டது போல பாவனை செய்தார்கள். பெருமையும் மாயமாலமுமே அவர்களை மரணம் வரை கொண்டு சென்றது.

இன்றைய சபைகளிலும் கூட பெருமைக்காகவும் பகட்டுக்காகவும் காணிக்கைகளை கொடுப்போர் எண்ணிக்கை அதிகம். தேவன் அதை ஒரு போதும் அங்கீகரிப்பதில்லை. மேட்டிமையாய் நடந்த கொண்ட நேபுகாத்நேச்சாரும் அவனது தண்டனையும் நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டியது அவசியமே.

சலோமி : **(1) (SALOME)**

பெயரின் அர்த்தம் : முழுமை, ஒற்றுமை, சமாதானம்

வேத ஆதாரம் : மத் : 14 : 6-11, மாற் 6 : 22-28

சலோமி என்பது சாலொமோன் என்பதன் பெண் பால் பெயர் வடிவமேயாகும். இரண்டு பெயர்களுக்கும் 'ஷாலோம்' என்பதன் அர்த்தமான சமாதானம் என்றே பொருள்படும்.

முதலாவது நாம் பார்க்கும் இந்த சலோமி ஏரோதியாளின் மகள். இவள் பெயர் சலோமி என்று வேதாகமத்தில் எங்கும் குறிப்பிடவில்லை. ஆனால் யூத வரலாற்று ஆசிரியரான ஜோசபஸ் தான் அவள் பெயர் சலோமி என்று தன் எழுத்தில் குறிப்பிடுகிறார். ஏரோதியாளுக்கும் அவளுடைய முதல் கணவரான ஏரோது பிலிப்பிற்கும் பிறந்தவள் தான் இந்த சலோமி. இவள் ஏரோதின் பிறந்த நாளில் நடனமாடி, தன் தாயின் ஆலோசனையின்படி பரிசாக யோவான் ஸ்நானனின் தலையை கேட்டு பெற்றுக் கொண்டவள்.

3. **சலோமி** : **(2) (SALOME)**

வேத ஆதாரம் : மத் : 20 : 20-24, 27:56, மாற் : 15 : 40,41, 16 : 1,2

இந்த சலோமியின் குடும்ப வரலாறுகள் பற்றி வேதம் எதுவும் சொல்லவில்லை. நாம் அறிந்ததெல்லாம் திறமையான மீனவனான செபதேயுவின் மனைவி என்பதும் இயேசுவின் சீஷர்களான யோவான் மற்றும் யாக்கோபின் தாய் என்பதுமே. இயேசுவின் சிலுவை மரணத்தை தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த பெண்களில் இவளும் ஒருத்தி. அது மாத்திரமல்லாமல் இயேசுவின் சரீரத்திற்கு சுகந்த வர்க்கமிடும்படி அவருடைய கல்லறைக்கு சென்ற பெண்களில் இவளும் ஒருத்தி. இயேசுவை மேசியாவாக நம்பி ஏற்றுக் கொண்டவள்.

அவள் இயேசுவை மேசியாவாக நம்பி ஏற்றுக்கொண்டதாலேயே தன் மகன்களான யோவானையும் யாக்கோபையும் அவருக்கு சீடர்களாக மாற சம்மதித்தாள். அவள் தன் கணவரோடு சேர்ந்து இயேசுவை பின்பற்றினாள். கடைசி வரை இயேசுவுக்கு உண்மையுள்ள சீஷியாக இருந்தாள். இயேசு சிலுவையில் அறையப்படும்போது தன் இரு மகன்களும் அவரை விட்டு ஓடிபோன போதும் கூட, இயேசுவின் மீது தான் கொண்ட அன்பினால் தூரத்தில் நின்று கண்ணீர் சிந்தினவளாய் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாள். பின் இயேசுவுக்கு சுகந்த வர்க்கமிட அதிகாலையிலேயே தன் இனத்தாராகிய பெண்களுடனே சென்றாள். அவர்களுடைய பயபக்திக்கு பரிசளிக்கும் வகையில் தூதனுடைய தரிசனத்தையும் வெளிப்பாட்டையும் பெற்றார்கள். பின்னர் அவர்கள் இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை எல்லாருக்கும் அறிவித்தார்கள்.

பயபக்தி நிறைந்த இந்த சலோமேக்கு ஒரு எதிர்பார்ப்பும் இருந்தது. இதைக்குறித்து மத் : 20 : 20-24 வரை நீங்கள் வாசிக்க முடியும். சலோமி பயபக்தி நிறைந்த ஒரு சீஷியாக மாத்திரமில்லாமல் தன் பிள்ளைகளை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து அழகு பார்க்க விரும்பும் ஒரு நல்ல தாயாகவும் இருந்தாள். அவள்

இயேசுவை மேசியா என்று உறுதியாய் நம்பினாள். ஆகவே இயேசு சீக்கிரத்தில் ரோம ராஜ்யத்தை தாழ்த்தி அவர் அரசனாக மாறுவார் என்று நம்பினாள். எனவேதான் நீர் உம்முடைய ராஜ்யத்தில் அமரும் போது எனது இரண்டு பிள்ளைகளாகிய யோவானையும் யாக்கோபையும் உமது வலது புறமும் இடது புறமும் அமரும் படி செய்ய வேண்டும் என்றாள். இயேசு உலகபிரகாரமான ஒரு ஆட்சியை அமைப்பதற்காக அப்போது வரவில்லை என்பதை அறியாதிருந்தாள். இத்தகைய விண்ணப்பம் நிச்சயமாக உண்மையான விசுவாசத்தினால் உண்டானதல்ல. அது சுயநலத்தினாலும், பெருமையினாலும் உண்டானதே. இயேசுவோ அறியாமையினால் உண்டான விண்ணப்பமாக அதை பார்த்தார். எனவேதான் இயேசு அவர்களுடைய விண்ணப்பத்தை மறுக்காமல் அதை திருத்தி, அவர்கள் எதிர்காலத்தில் பட வேண்டிய உபத்திரவங்களைக் குறித்து எடுத்துரைத்தார். ஆனாலும் அப்போது அவர்கள் அதை புரிந்து கொள்ளவில்லை. இந்த ஒரு காரியத்தை தவிர செபதேயுவும் அவன் மனைவியாகிய சலோமியும் அவள் பிள்ளைகளான யோவானும் யாக்கோபும் இயேசுவை நேசித்து விசுவாசித்து கடைசி வரை நிலைத்திருந்தார்கள்.

சாராள் : **(SARAH)**

சாராய் : இளவரசி

சாராள் : இராணி

வேத ஆதாரம் : ஆதி : 11 : 29-31, 12 : 5-17, 17:15-21,18, 20 : 2-18, 21 : 1-12, 23 : 1-19, 24 : 36,37, 25 : 10,12, 49 : 31, ஏசா : 51 : 2, ரோமர் : 4 : 19, 9:9, எபி : 11 : 11, I பேதுரு 3 : 6

ஆபிரகாமின் மனைவி. அவனை விட பத்து வயது சிறியவள் (ஆதி : 17:17) ஆபிரகாம் அவளை ஊர் என்னும் கல்தேய பட்டணத்தில் திருமணம் செய்துக்கொண்டான். சாராள் ஆபிரகாமுக்கு ஒரு வகையில் சகோதரி. ஆபிரகாமின் தகப்பனின் இன்னொரு மனைவிக்கு பிறந்தவள். (ஆதி : 20 : 12) ஆபிரகாம் ஆரானிலிருந்து கானான் தேசத்திற்கு புறப்பட்டபோது அவளுக்கு வயது 65. (ஆதி : 12:4)

சாராள் அந்த வயதிலும் மிகுந்த இளைமையும் அழகுள்ளவளுமாயிருந்தாள். எனவேதான் ஆபிரகாம் எகிப்தியரிடமும், பின்பு பல ஆண்டுகள் கழித்து அபிமெலேக்கிடமும் சாராளை தன் மனைவி என்று சொல்லாமல் சகோதரி என்று சொல்லுகிறான். சாராளுக்கு பிள்ளையில்லை. எனவே தனது 75ஆம் வயதில்

தன்னை தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு தடையென்றெண்ணி ஆகாரை அவனுக்கு மனைவியாகக் கொடுத்தாள். ஆபிரகாம் இஸ்மவேலுக்கு தகப்பனான பின் சாராளுக்கு 89 வயதான போது தானே கர்ப்பந்தரித்து வாக்குத்தத்தத்தின் பிள்ளையை பெற்றெடுக்க மனதிடன் கொண்டாள். ஈசாக்கு என்னும் வாக்குத்தத்தத்தின் மகனை பெற்றெடுத்தாள். இந்த வாக்குத்தத்தத்தை அவள் பெற்ற போது தான் தேவன் சாராய் என்னும் அவளுடைய பெயரை சாராள் என்று மாற்றினார். சாராள் தனது 127வது வயதில் எபிரோன் என்னும் கீரியாத் அர்பாவிலே மரித்தாள். ஆபிரகாம் தன் குடும்பத்திற்காக வாங்கின கல்லறையாகிய மக்பேலா என்னும் குகையிலே அடக்கம் செய்யப்பட்டாள்.

சாராளைக்குறித்து பார்க்கும் போது, அவளது முந்தைய பெயர் சாராய் என்பதாகும். இளவரசி என்னும் அர்த்தம் எல்லைக்குள் அடங்குவதாக இருக்கிறது. அவளுடைய பெயர் மாற்றப்பட்ட சூழ்நிலை இங்கு மிக முக்கியமானது. இவளுடைய பெயர் ஏதோ தற்செயலாக மாற்றப்படாமல் தேவனுடைய பரிபூரண திட்டங்கள் நிறைவேறும் படியாக, அதற்கு அடையாளமாக அவரே அந்த பெயரை மாற்றி அமைக்கிறார். அநேக ஜாதிகளுக்கு தாயாக்கும் நோக்கில் அவளை தலைவியாக மகாராணியாக பாவித்து சாராள் என்று பேரிடுகிறார். தேவன் அவளுக்காக வைத்திருந்த திட்டங்கள் யாவும் நிறைவேற அவள் தன்னை அர்ப்பணித்திருந்தாள். ஈசாக்கை பெற்றெடுத்து இஸ்ரவேலுக்கு வித்திட்டாள். அவள் விசுவாசத்தினால் கர்ப்பந்தரிக்க பெலன் அடைந்தாள் என்று வேதம் சொல்லுகிறது. சாராளின் விசுவாசமும் தைரியமும் அவளிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும்.

5. **சிந்திக்கேயாள்** : (SYNTYCHE)

பெயரின் அர்த்தம் : அதிர்ஷ்டசாலி

வேத ஆதாரம் : பிலி 4:2

பிலிப்பி பட்டணத்தை சேர்ந்த ஒரு விசுவாசி (எயோதியாள் - பார்க்கவும்)

எயோதியாளின் தோழியான இவள் பவுலின் பிரசங்கத்தை கேட்டு இயேசுவை ஏற்றுக் கொண்டவள். ஆனாலும் சிந்திகேயாளுக்கும் எயோதியாளுக்கும் ஏதோ கருத்து வேறுபாடு இருந்ததாக வேதம் சொல்கிறது. பவுலின் அறிவுரையைச் கேட்டு அவர்கள் தங்கள் கருத்து வேறுபாட்டை விட்டொழித்து, கிறிஸ்துவுக்குள் ஒருங்கிணைந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை.

சிபியாள் : (ZIBIAH)

பெயரின் அர்த்தம் : பெண் வெளிமான்

வேத ஆதாரம் : II இராஜா : 12 : 1, II நாளா 24 : 1

ஆசாரியனாகிய யோய்தாவினால் அத்தாலியாளுக்கு மறைக்கப்பட்ட குழந்தையான யோவாஸின் தாய் தான் இந்த சிபியாள். யோவாஸ் 6 வருடம் மறைத்து வளர்க்கப்பட்டு பின் தனது ஏழாவது வயதில் யூதாவின் ராஜாவாகி 40 ஆண்டுகள் அரசாண்டான். தேவாலயத்தை பழுதுபார்த்தான். கர்த்தருக்கேற்றபடி செம்மையான பாதையில் நடந்தான். அவன் ஆசாரியனாகிய யோய்தாவினால் போதிக்கப்பட்டதால் மாத்திரம் இந்த நல்லொழுக்கநெறியில் வளரவில்லை. அவன் நல்வழியில் வளர்ந்து தேவனையே சேவித்து பின்பற்ற அவன் தாயும் அவனை ஊக்கப்படுத்தினாள். ஆனால் வேதாகமத்திலோ அவள் பெயரைத்தவிர வேறெந்த தகவலும் குறிப்பிடவில்லை.

சிப்பிராள் : (SHIPHRAH)

பெயரின் அர்த்தம் : பெருக்கம் அல்லது அழகு

வேத ஆதாரம் : யாத் : 1:15

இஸ்ரவேலர்களின் பெருக்கத்தைப் பார்த்து அஞ்சின பார்வோன், இஸ்ரவேலில் பிறக்கும் எல்லா ஆண்பிள்ளைகளையும் கொல்லும்படி இரண்டு மருத்துவச்சிகளை நியமிக்கிறான். இவர்களில் ஒருத்தி தான் சிப்பிராள். ஆனால் அவர்கள் அந்த பாவத்தை செய்யவில்லை. இஸ்ரவேலிய பெண்கள் தாங்கள் வருவதற்குள் பிள்ளை பெற்று விடுகிறார்கள் என்று பார்வோனிடம் சொல்லிவிட்டார்கள்.

பூவாள், சிப்பிராள் இரண்டு பெயர்களுமே எகிப்திய பெயர்கள். எபன் எஸ்றா என்னும் பழம்பெரும் யூத வரலாற்றாளர், 500க்கும் மேற்பட்ட மருத்துவச்சிகளுக்கு இந்த இருபெண்கள்தான் தலைவிகள் என்று கூறுகிறார். அவர்கள் தேவனுக்கு பயந்தார்கள் என்பது மிகவும் முக்கியமான வார்த்தை. ராஜாவை எதிர்த்து தேவனுக்கு கீழ்படிவது மிகவும் சிறப்பான ஒரு காரியமாகும். எனவேதான் கர்த்தர் அவர்கள் குடும்பங்களை தழைக்க செய்தார்.

8. சிப்போராள் : (ZIPPORAH)

பெயரின் அர்த்தம் : ஒரு சிறு பறவை (அ) குருவி

வேத ஆதாரம் : யாத் : 2 : 21,22, 4:24,25, 18:1-6

மீதியானிய ஆசாரியனாகிய எத்திரோவின் ஏழு மகள்களில் இவளும் ஒருத்தி மோசேயின் மனைவி. மோசே பார்வோனுக்கு பயந்து ஓடிபோன போது எத்திரோவின் மகள்களுக்கு மந்தை மேய்ப்பதிலும், தண்ணீர் இரைப்பதிலும் எதிரிகளிடமிருந்து காப்பதிலும் உதவி செய்தார். பின்னர் எத்திரோவின் மருமகனாகி விடுகிறார்.

சிப்போர்ராள் யூத கோட்பாடான விருத்த சேதனத்தை ஏற்றுக்கொள்ளாதவள் எனவே தனது இரண்டாவது மகன் எலியேசருக்கு விருத்தசேதனம் செய்யவில்லை. எலியேசர் என்றால் "என் தகப்பனுடைய தேவன் என் உதவி என்று அர்த்தமாம். இதிலிருந்தே அவள் யூத மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளாதவள் என்பது விளங்கும். மோசேயும் தன் இரண்டாவது மகனுக்கு விருத்தசேதனம் செய்வதில் தன் மனைவி பேச்சை கேட்டு நடந்தான். பின்பு தேவன் இஸ்ரவேலரை மீட்க மோசேயை பார்வோனிடம் அனுப்பினார். அப்போது மோசே தன் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் எகிப்து சென்றான். செல்லும் வழியில் தேவன் அவனை கொல்லப்பார்த்தார். தன்னுடைய கட்டளையாகிய விருத்தசேதனத்தை எலியேசருக்கு செய்யாததால் மோசேக்கு தேவன் கொடுமையான ஒரு நோயை கட்டளையிட்டார். தன் தவறை உணர்ந்த சிப்போராள் தன் கணவனின் உயிரை காப்பாற்ற சட்டென்று முடிவு எடுக்கிறாள். உடனே அங்கிருந்த கத்தியை போன்ற ஒரு கல்லை எடுத்து, தன் பிள்ளையினுடைய நுனி மாம்சத்தை வெட்டி அதை மோசேயின் காலின் அருகே வீசினாள். உடனே தேவன் தன் தண்டனையை விலக்கிக்கொண்டார்.

அதன் பின்பு அவள் மோசேயோடே எகிப்திலேயே இருந்தாள். அவர்கள் எகிப்தை விட்டு வெளியேறி சீனாய் மலையின் அருகில் வந்த போது மோசே அவளையும் தன் பிள்ளைகளையும் தன் மாமனாகிய எத்திரோவிடம் திருப்பி அனுப்புகிறான். அவள் போய் தேவனுடைய மகத்துவமான எல்லா செயல்களையும் தன் தகப்பனுக்கு அறிவித்தாள். பின்பு எத்திரோ தன் மகளையும் பேரபிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு ரெவிதீம் வருகிறார். அதன் பின் அவளைப்பற்றி எங்கும் சொல்லப்படவில்லை. மிரியாம் வெண்குஷ்டம் அடைந்ததற்கு காரணமான எத்தியோப்பிய பெண் சிப்போராள் அல்லவென்றே கருதப்படுகிறது.

சிம்ரீத் : (SHIMRITH)

பெயரின் அர்த்தம் : ஜாக்கிரதையுள்ளவள்

வேத ஆதாரம் : II இராஜா 12 : 21, II நாளா 24 : 26

இவள் ஒரு மோவாபிய பெண்மணி. யோசபாத்தின் தாய். இந்த யோசபாத் யோசகார் என்னும் ஒருவனோடு சேர்ந்துக்கொண்டு ராஜாவாகிய யோவாசை படுக்கையிலேயே கொன்று போட்டான். இவர்கள் இருவரும் ராஜாவாகிய யோவாசின் ஊழியக்காரர்கள்.

ஆசாரியனாகிய யோய்தாவின் மரணத்திற்கு பின் ராஜாவாகிய யோவாஸ் யூதாவின் பிரபுக்களோடு சேர்ந்து கொண்டு விக்கிரகாராதனை செய்தான். தேவன் தமது தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவனை எச்சரித்த போதும் அவன் திருந்தவில்லை. அப்போது ஆசாரியனாகிய யோய்தாவின் மகனாகிய சகரியாவின்மேல் தேவனுடைய ஆவி இறங்கி அவர்களுக்கு விரோதமாய் தீர்க்கதரிசனம் உரைத்தான். அப்போது ராஜாவாகிய யோவாஸ் அவனை கல்லெறிந்து கொல்ல கட்டளையிட்டான். ஜனங்கள் சகரியாவை தேவாலயத்தண்டையிலே கல்லெறிந்து கொன்றார்கள். அப்போது தேவ கோபம் அவன் மேல் இறங்கியது. அதனால் ஆசகேல் என்னும் சீரிய ராஜா எருசலேமின் மேல் யுத்தம் பண்ண வந்தான். அவன் சிறுங்கூட்டமாய் இருந்த போதிலும் பெரிய சேனையாகிய யோவாசின் சேனையை தேவன் சீரியர்கள் கையில் ஒப்புக் கொடுத்தார். அவர்கள் அவனை அதிகமாய் காயப்படுத்தி குற்றுயிராய் விட்டு போனார்கள். இந்த சூழலில் தான் யோவாஸ் மில்லோவின் வீட்டிலே படுத்துகிடந்தான். அப்போது ராஜாவின் செயல்களால் கோபமடைந்த புரட்சிபடை கூட்டத்தை சேர்ந்தவர்களில் ஒருவன் தான் யோசபாத். இந்த யோசபாத்தின் தாய் தான் சிம்ரீத். தேவனுடைய கோபத்தை நிறைவேற்ற ராஜாவை படுக்கையிலேயே கொன்றான் இந்த வீரத்தாயின் வீரமகன்!

சிரேஷ் : (ZERESH)

பெயரின் அர்த்தம் : வணங்கப்படும் நட்சத்திரம் (அ) பொன்

வேத ஆதாரம் : எஸ்தர் 5:10,14, 6:13

இது ஒரு பெர்சியப்பெயர். இவள் ஆமானின் மனைவி. ஆமான் யூத குலத்தின் எதிரி. யூதனாகிய மொர்தெகாயையும் அவனை சேர்ந்த எல்லா யூதரையும் அழிக்க வகை தேடினவன். தன் கணவனுடைய அழிவிற்கு இந்த சிரேஷும் ஒரு வகையில் காரணம் தான். மொர்தெகாய்க்காக தூக்கு மரம் செய்யும் படியும்

அவனை தூக்கிலிட ராஜாவிடம் சொல்லும்படி திட்டமிட்டுக் கொடுத்தவளும் இந்த சிரேஷ்தாள். ஆனால் காரியம் மாறுதலாய் முடிந்தது. அவள் மொர்தெகாய்க்காக செய்ய திட்டமிட்ட தூக்கு மரம் அவள் கணவனையே பதம் பார்த்தது.

11. **சில்பாள்** : (ZILPAH)

பெயரின் அர்த்தம் : ஊற்றப்படும் வாசனை திரவியம்

வேத ஆதாரம் : ஆதி : 29,24, 30:9,10, 35:26, 37:2, 46:18

லாபான் தன் மூத்த மகளுக்கு கொடுத்த வேலைக்காரி. லேயாளுக்கு பிள்ளை பெறும் காலம் நின்று போன போது அவள் தன் வேலைகாரியாகிய சில்பாளை அழைத்து தன் வம்சத்தை இன்னும் விருத்தி செய்யும்படி அவளை தன் கணவனாகிய யாக்கோபுக்கு மனைவியாகக் கொடுத்தாள். காத், ஆசேர் ஆகிய இரண்டு பிள்ளைகளை சில்பாள் யாக்கோபுக்கு பெற்றாள்.

12. **சில்லாள்** : (ZILLAH)

பெயரின் அர்த்தம் : இருளின் நிழல் (அ) பாதுகாப்பு

வேத ஆதாரம் : ஆதி : 4 : 19-23

லாமேக்கின் இரண்டு மனைவிகளில் ஒருத்தி. வேதத்தில் பெயர் கூறப்பட்ட முதல் மகளாகிய நாமாளின் தாய். இவள் தூபால் காயீனுக்கும் தாயாவாள்.
(ஆதாள் (1) பார்க்கவும்) தூபால் காயீன் பித்தளை, இரும்பு தொழில் செய்வோருக்கு ஆசாரியனான்.

13. **சீமாத்** : (SHIMEATH)

பெயரின் அர்த்தம் : வதந்தி (அ) புகழ்ச்சி

வேத ஆதாரம் : II இராஜா : 12 : 21, II நாளா : 24 : 26

இந்த சீமாத் யோசகாரின் தாயாகிய அம்மோனிய ஸ்திரீ. இந்த யோசகார் யூதாவின் ராஜாவாகிய யோவாசை படுக்கையிலேயே கொன்றவன்.
(சிம்ரீத் பார்க்கவும்)

14. **சூகாள்** : (SHUA)

பெயரின் அர்த்தம் : செழிப்பு, ஆஸ்தி

வேத ஆதாரம் : ஆதி : 38 : 1,2, I நாளா : 7:32

இது இரு பாலினருக்கும் வைக்கப்படும் பெயராகும். இது ஒரு கானாகிய பெயர். ஆசேரின் பேரனாகிய ஏபேரின் மகள் தான் இந்த சூகாள். யப்லேத், சோமேர், ஒத்தாம் ஆகியோரின் சகோதரி.

சூசன்னாள் : **(SUSANNA)**

பெயரின் அர்த்தம் : லீலிமலர்

வேத ஆதாரம் : லூக் : 8 : 2,3

இயேசு அநேக வியாதியஸ்தரை சுகமாக்கினார் அல்லவா! அப்படியாக இயேசுவிடம் சுகம் பெற்றவர்களில் சூசன்னாளும் ஒருத்தி. இயேசு தன்னை சுகமாக்கியதால் அவருக்கு நன்றியுள்ளவளாய் அவரை பின் தொடர்ந்து, அவருடைய சீஷர்களுடன் சேர்ந்து தன் ஆஸ்திகளை கொடுத்து ஊழியம் செய்தவள். ஜான் மற்றும் சார்ல்ஸ் வெஸ்லி என இரண்டு பிள்ளைகள் அவளுக்கு உண்டு.

செபுதாள் : **(ZEBUDAH)**

பெயரின் அர்த்தம் : வழங்கப்படுதல் (அ) பரிசு

வேத ஆதாரம் : II இராஜா 23 : 36

ரூமா என்னும் ஊரை சேர்ந்த பெதாயாமின் மகள். இவள் ராஜாவாகிய யோசியாவின் மனைவி. யோயாக்கீம், யோவாகாஸ் ஆகியோரின் தாய். அவள் தன் பிள்ளைகளை கர்த்தருக்குள் வளர்க்காததால் அவர்கள் தங்கள் இளமையிலிருந்தே கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு முன்பாக பொல்லாப்பானதை செய்தார்கள் என்ற வார்த்தையே அவன் தாயின் வளர்ப்பு முறையையும் வாழ்க்கை முறையையும் விளக்குவதாய் அமைகிறது.

'செபுதாள்' என்ற பெயரைக் குறித்து பார்ப்போமானால், சில வேளைகளில் தேவனுடைய நாமங்கள் வேறு சில வார்த்தைகளோடு இணைந்து பெயராக வைக்கப்படுகிறது. இங்கேயும் 'சபாத்' என்ற வார்த்தை தேவனை கொடுக்கிறவராக வருணிக்கிறது. 'அவர் கொடுத்தார்' என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. மேலும் 'செபதேயு' என்ற பெயரின் பெண் வடிவமே இந்த 'செபுதாள்' என்ற பெயராகும்.

17. **செராக்கு** : (SERAH)

பெயரின் அர்த்தம் : பரிபூரணம்

வேத ஆதாரம் : ஆதி : 46 : 17, I நாளா 7:30, எண் 26:46

இவளுடைய பெயர் மூன்று வசனங்களிலும் வெவ்வேறு விதமா கொடுக்கப்பட்டுள்ளது. செராக்கு, சாராள், சேராள் என்று மூன்று பெயர்க கொடுக்கப்பட்டிருந்தாலும், இவை ஒரே பெண்ணையே குறிக்கிறது. இவ யாக்கோபுக்கும் லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாளுக்கும் பிறந் ஆசேரின் குமாரத்தி.

18. **செருயாள்** : (ZERUIAH)

பெயரின் அர்த்தம் : முசுக்கட்டை செடி

வேத ஆதாரம் : II சாமு : 17 : 25, II நாளா 2 : 16

இந்த செருயாள் தாவீதின் சகோதரியாவாள். ஆனால் இவள் ஈசாயி குமாரத்தியல்ல. இவள் நாகாசின் குமாரத்தியாவாள். தாவீதின் தாய்க் நாகாசுக்கும் ஏற்கனவே திருமணமாகியிருக்கும் என்று கருதப்படுகிற செருயாளுக்கு அபிசாய், யோவாப், ஆசகேல் என்னும் மூன்று பிள்ளைக இருந்தார்கள். இந்த மூன்று பேரும் வேதத்தில் எங்கும் செருயாளின் குமாரர் என்றே குறிப்பிடப்படுகிறார்கள். இந்த மூன்று பேரின் தகப்பன் பெ கொடுக்கப்படாததற்கு காரணம், ஒரு வேளை அவளை சீக்கிரம் மரித்திருப் அல்லது செருயாள் அன்றைய சமுதாயத்தில் மதிப்பு மிக்க ஒரு பெண்மணிய திகழ்ந்திருப்பார் என்று சொல்லப்படுகிறது.

19. **செரூகாள்** : (ZERUAH)

பெயரின் அர்த்தம் : குஷ்டரோகம்

வேத ஆதாரம் : II இராஜா : 11 : 26-40

இவளுக்கு ஏன் இப்படி ஒரு பெயர் வைக்கபட்டது என்பது அறியப்படவில்லை. இ செரூகாள் நேபாத்தின் மனைவி. நேபாத் சாலொமோன் ராஜாவின் அரண்ம ஊழியக்காரனாயிருந்தான். இவள் ஒரு விதவை என்று சொல்லப்படுவதால் நே முன்பே மரித்திருப்பான் என்று அறியப்படுகிறது. இந்த செரூகாள் யெரோபெயா தாய். சாலொமோனின் இராஜ்யத்தை பிரிக்க தேவன் சித்தங்கொண்ட போத கோத்திரங்களுக்கு இராஜாவாக எழும்பினவன். அகியா தீர்க்கதரிசிய சால்வையின் 10 துண்டுகளை பெற்றுக்கொண்டு 10 கோத்திரங்கள

ராஜாவானான். ரெகோபெயாமின் காலத்தில் ராஜ்யம் பிரிக்கப்பட்டு யெரொபெயாம் 10 கோத்திரங்களுக்கு ராஜாவானான்.

). செலோமீத் : (SHELOMITH) (1)

பெயரின் அர்த்தம் : சமாதானம் நிறைந்த

வேத ஆதாரம் : லேவி : 24 : 10,11

தாண் கோத்திரத்தானாகிய திப்ரியின் மகள். அவள் ஒரு எகிப்தியனை திருமணம் செய்திருந்தாள். அவனுடைய பெயர் அறியப்படவில்லை. அவளுடைய மகன் கர்த்தரின் நாமத்தை நிந்தித்தப்படியால் கல்லெறிந்து கொல்லப்பட்டான். பாரம்பரிய வரலாறு இவர்களைக்குறித்து சொல்வது என்னவென்றால், இந்த எகிப்தியன் இஸ்வேலர்கள் எகிப்தில் அடிமைகளாயிருந்த சமயத்தில், செலோமித்தின் கணவனுக்கு இவன் வேலைவாங்கும் அதிகாரியாயிருந்தான். அந்த சமயத்தில் இந்த எகிப்தியன் செலோமீத்தின் கணவரைக் கொன்று, அவளை தனக்கு மனைவியாக்கிக்கொண்டான். யாத் : 2 : 11ல் நாம் வாசிக்கிறபடி மோசே கொன்ற எகிப்தியன் இவன் தான் என்று சொல்லப்படுகிறது. இந்த எகிப்தியனுக்கும் செலோமீத்திற்கும் பிறந்த அந்த மகனே கர்த்தரை நிந்தித்து கல்லெறிந்து கொல்லப்பட்டான். எபிரேய சட்டத்தின் படி இந்த எகிப்தியனின் மகன் தன் இஸ்ரவேலிய தாயுடன் பாளையத்தில் தங்க முடியாது. அவன் பாளையத்திற்கு வெளியே தான் தங்க வேண்டும். இதை ஏற்றுக்கொள்ள முடியாத அந்த மகன், இந்த சட்டத்தை இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்த கர்த்தரை நிந்தித்தான். அதனாலேயே கல்லெறிந்து கொல்லப்பட்டான்.

செலோமீத் : (2) (SHELOMITH)

வேத ஆதாரம் : I நாளா : 3 : 19

செருபாபேலின் குமரத்தி. இஸ்ரவேலர்கள் பாபிலோனிய சிறையிருப்பில் இருந்தபோது அவர்களை வழி நடத்திய செருபாபேல் அல்ல இவன். மெசுல்லாம், அனனியா என்பவர்கள் செலோமீத்தின் சகோதரர்கள் ஆவர்.

சேராள் : (SHERAH)

பெயரின் அர்த்தம் : இரத்த சம்பந்தப்பட்ட பெண் பால் உறவு

வேத ஆதாரம் : I நாளா : 7 : 24

இந்த சேராள் எப்பிராயீமின் குமாரத்தி. இவள் மூன்று அரணான பட்டணங்க கட்டினவள். இந்த பட்டணங்கள் தங்கள் குடும்ப சுதந்திரத்தின் மூலம் அவ பெற்றதாக இருக்கலாம். தன் குடும்ப சுதந்திரத்தை பெருக்க வேண்டும் என் நோக்கில் அவள் அதை கட்டினாள். மூன்று அரணான பட்டணங்களை கட்டுவ சாதாரண காரியம் அல்ல. எனவேதான் வேத அறிஞர்கள் இவளை பலசாலியா பெண்மணி என்று வருணிக்கிறார்கள்.

த

1. **தபீத்தாள்** : **(TABITHA)**

பெயரின் அர்த்தம் : **வெளிமான்**

வேத ஆதாரம் : **அப் : 9 : 36-43**

எபிரேய பெயரான சிபியாள் (யோவாசின் தாய்) என்பதன் சீரிய கல்தே வடிவம்தான் தபீத்தாள். இந்த தபீத்தாள் யோப்பா பட்டணத்தைச் சேர்ந்த ஒரு சீஷ அநேக விதவைகளுக்கும் ஏழைகளுக்கும் உதவி செய்து வந்தவள். இவள் ஒ நாள் வியாதிப்பட்டு மரித்தபோது, பேதுரு அங்கே வரவழைக்கப்பட்டார். பின்ன பேதுருவால் உயிரோடு எழுப்பப்பட்டாள். இதை கண்ட அநேகர் ஆச்சரியப்ப பிரமித்தனர். இந்த செய்தி யோப்பா எங்கும் பரவியது. இந்த செய்தியை அறி அநேகர் விசுவாசிகளானார்கள். இவள் ஒரு தையல் கலைநிபுணர். அநே ஏழைகளுக்கும் விதவைகளுக்கும் அங்கிகளை தைத்துக் கொடுத்தாள்.

தபீத்தாளின் பெற்றோர் மற்றும் வம்சவரலாற்றை பற்றி வேதாகமம் எது சொல்லவில்லை. வேதாகமம் நமக்கு அதிகமாய் போதிப்பது அவள நற்கிரியைகளையே. அவள் ஒரு தையற் கலை நிபுணராய் இருப்பதால், த கைகளால் அங்கிகளைத் தைத்து ஏழை எளியோருக்கு வழங்கினாள். தன்னா இயன்றதை மற்றவர்களுக்கு செய்தாள். அவள் நன்மை செய்கிறவளா மாத்திரமில்லாமல், அவள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட விசுவாசியா வாழ்ந்தாள். எனவேதான் அவள் சீஷி என்று அழைக்கப்பட்டாள்.

இவள் அநேக ஏழைகளுக்கும் விதவைகளுக்கும் நன்மை செய்து வாழ் படியால் தான் அவள் மரித்த போது அநேக விதவைகள் மற்றும் அவளி நன்மையை பெற்றோர் அங்கே கூடி வந்தார்கள். பின்பு பேதுருவைக் கொண் தேவன் அவளை உயிரோடு எழுப்பினார். தங்களுக்கு இத்தனை நாட்க நன்மை செய்தவள் இல்லாமல் போய்விட்டாளே என்று அழுதுக்கொண்டிரு

மக்கள் மறுபடியும் உயிரோடு எழுந்த தபீத்தாளைப் பார்த்து எவ்வளவு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்திருப்பார்கள்.

இவள் உயிர்தெழுந்த செய்தி யோப்பா பட்டணம் முழுவதும் பரவியது. அதனால் அநேகர் விசுவாசிகளாகி இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். இதன் மூலம் அக்காலத்து சபையில் எழுப்புதல் உண்டாகவும் இவள் காரணமாயிருந்தாள். நாமும் நம்மால் இயன்றதை தேவனுக்கென்றும் ஏழை எளியவர்களுக்கும் செய்ய கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். தேவ கிருபை நாம் கையிட்டு செய்யும் கிரியைகளை ஆசீர்வதிப்பதாக!

2. **தாபாத்** : **(TAPHATH)**

பெயரின் அர்த்தம் : ஒரு துளி வெள்ளைபோளம்

வேத ஆதாரம் : I இராஜா : 4 : 11

இவள் சாலொமோனின் குமாரத்தி. அபினதாபின் குமாரனின் மனைவி. இந்த அபினதாபின் குமாரன் சாலொமோனின் ராஜ்யத்தில் தோர் என்னும் நாட்டுபுறத்திற்கு விசாரிப்புக்காரனாயிருந்தான்.

3 **தாப்பெனேஸ்** : **(TAHPENES)**

பெயரின் அர்த்தம் : காலத்தின் தலைவன்

வேத ஆதாரம் : I இராஜா : 11 : 14 - 20

இவள் பார்வோனின் மனைவியாகிய எகிப்தின் ராணி. இந்த தாப்பெனேஸ் தன் சகோதரியை தன்னிடம் அடைக்கலமாய் வந்திருந்த ஆதாத் என்னும் ஏதோமிய ராஜகுமாரனுக்கு திருமணம் செய்து கொடுத்தாள். ஏதோமியனான ஆதாத், தாவீதின் படைத்தலைவனாகிய யோவாப் ஏதோமை சங்கரித்து போது, அவர்களுக்கு பயந்து எகிப்துக்கு ஓடிபோனான். பின்னர் அவன் சாலொமோனின் விரோதியாய் மாறினான். தன் சகோதரியின் மகனும் ஆதாத்தின் மகனுமான கேனுபாத்தை தார்பெனேஸ் தன் வீட்டில் தன் பிள்ளைகளுடன் சேர்த்து வளர்த்தாள். தன் சகோதரி மரித்து போனதால் அவள் குழந்தைக்கு இவளே மாற்றாந்தாயாக மாறி தன் பிள்ளைகளுடன் சேர்த்து அவனையும் வளர்த்தாள். அவளுடைய சகோதரி அநேகமாக தனது பிள்ளை பேற்றின் போதுதான் மரித்திருப்பாள் என்று கருதப்படுகிறது.

4 **தாமார்** : **(TAMAR) (1)**

பெயரின் அர்த்தம் : பனை மரம்

வேத ஆதாரம் : ஆதி : 38 : 6-30, ரூத் : 4 : 12, I நாளா : 2 : 4, மத் : 1 : 3

கிழக்கத்திய நாடுகளில் பனைமரம் விலையேற பெற்ற ஒரு மரமாகும். எனவே அழகையும், செழிப்பையும் வருணிக்கும் விதத்தில் இப்பெயர் அக்காலங்களில் இடப்பட்டது. யூதாவின் மருமகள் இவள். யூதாவின் மூத்த மகனாகிய ஏரின் மனைவி. அவன் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தபடியால் கர்த்தர் அவனை அடித்தார்.அவன் மரித்துப் போனான். பின்பு எபிரேய முறைமையின்படி தாமார் யூதாவின் இரண்டாவது மகனாகிய ஓனானுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டாள். அவன் தன் அண்ணனுக்கு சந்ததியை உண்டாக்க விரும்பாததால் கர்த்தர் அவனையும் அடித்தார். அவனும் மரித்துப்போனான். இவர்கள் இருவரும் தங்கள் பொல்லாத நடக்கையினால் மரித்துபோனார்கள். ஆனால் பழியோ, அவன் மனைவி தாமாரின் மேல். ஆம், தாமாருக்கு திருமணம் செய்து வைத்ததால் தான் தன் இரண்டு மகன்களும் மரித்தார்கள் என்று யூதா எண்ணி, தன் மூன்றாவது மகனை அவளுக்கு மைத்துன சுகந்திரமாய் கொடுக்கவில்லை. அவன் பெரியவனாகும் வரை உன் தகப்பன் வீட்டிலே போய் அவனுக்கு காத்திரு என்று சொல்லிவிட்டான். ஆனால் அவன் பெரியவனான பிறகும் அவனை அவளுக்கு கொடுக்கவில்லை. எனவே, இதை அறிந்த தாமார் வஞ்சகமாய், தன்னை ஒரு வேசியைப்போல் காண்பித்து யூதாவுடன் சேர்ந்தாள். இப்படி அவள் செய்ததற்கு ஒரு காரணம் உண்டு. தாமார் தன் கணவனுடைய வம்சம் தழைக்க வேண்டும் என்று விரும்பினாள். ஒரு வேளை அவள் அப்படி செய்யாதிருந்தால், யூதாவின் வம்சம் அற்றுப்போயிருக்கும். யூதா தாமாருடன் சேரும் போது அவளை ஒரு வேசி என்றே எண்ணினான். வெறும் சரீர சுகத்திற்காக மட்டும் யூதா செய்த காரியத்தை தாமார், வம்ச விருத்திக்காக ஒரு பெரிய நோக்கத்துடன் செய்தாள். எனவேதான் யூதா அவள் என்னிலும் நீதியுள்ளவள் என்றான். கணவன் இறந்த பிறகு அவளை திருமணம் செய்து வைப்பதற்கு மைத்துனர்கள் இல்லாதிருந்தால் அவள் தன் மாமனாருடன் சேர்ந்து அந்த வம்சத்தை தழைக்க செய்யலாம் என்கிறது எபிரேய சட்டம். எனவே அவள் அப்படி செய்தது தவறல்ல. மேலும் தாமார் தன் மீது எந்த தவறும் இல்லை என்பதை இதன் மூலம் நிரூபித்துக் கொண்டாள். அக்காலங்களில் ஒரு பெண்ணுக்கு பிள்ளை இல்லையென்றால் அவளை மிகவும் தாழ்வாக எண்ணுவார்கள். இப்படி எல்லா பிரச்சனைகளையும் சமுகமாய் முடிக்க புத்திசாலிதனமாய் திட்டமிட்டு வெற்றிப் பெற்றாள். அது

மாத்திரமல்லாமல் இந்த வம்சத்தில் தான் இயேசு கிறிஸ்துவும் பிறந்தார். தாமார் கர்ப்பவதியாகி பாரேஸ், சேரா என்னும் இரட்டை பிள்ளைகளை பெற்றாள். இந்த பாரேஸின் வம்சத்தில் தான் மேசியாவாகிய இயேசு கிறிஸ்து பிறந்தார். தாமார் சுயநலமில்லாமல் தன் கணவர் குடும்பத்தை தழைக்க செய்ததால் மேசியாவுக்கு மூத்த தாயாகும் பாக்கியத்தைப் பெற்றாள். தாமாரின் தகப்பன் குடும்பத்தை பற்றி வேதம் எதுவும் சொல்லவில்லை. அவள் ஒரு கானானிய பெண் என்பதை மட்டும் அவள் பெயரின் மூலம் அறியலாம்.

தாமார் : (2) (TAMAR)

வேத ஆதாரம் : II சாமு : 13, II நாளா : 3 :9

இந்த இரண்டாவது தாமார், தாவீதுக்கும் மாக்காளுக்கும் பிறந்தவள். பேரழகியான இவள் அப்சலோமின் சகோதரி. தாவீதின் இன்னொரு மனைவியான அகினோவாமிக்கு பிறந்த அம்னோன் தாமாரின் அழகில் மயங்கி அவள் மேல் ஆசையாயிருந்தான். அவள் தனக்கு சகோதரி என்று எண்ணாமல், அவளை அடைய நினைத்தான். பின்பு அவனுடைய பொல்லாத நண்பனாகிய யோனதாப்பின் ஆலோசனையின் படி தாமரை தன் வீட்டிற்கு தனியே தந்திரமாய் அழைத்து அவளை பலவந்தம் பண்ணி கற்பழித்தான். அப்பாவியான அப்பெண்மணி எவ்வளவோ தடுக்க முயற்சித்தும் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதுவரை அவளை நேசித்த அம்னோன் தன் பாவ செயலினால் திடீரென்று அவளை வெறுக்கத் தொடங்கினான். அவளை தன் வீட்டை விட்டே துரத்தி விடுகிறான். இக்கொடிய செயலை செய்த அம்னோனுக்கு தாவீது எந்த தண்டனையும் வழங்கவில்லை. அதனால் அவள் தன் சகோதரனாகிய அப்சலோமிற்கு நடந்ததை அறிவித்தாள். அவனும் உடனடியாக அவனுக்கு எந்த தீங்கும் செய்யவில்லை. மாறாக, ‘அவன் உன் சகோதரன், இந்த காரியத்தை உன் மனதிலே வைக்காதே’ என்றான். ஆனாலும் அப்சலோம் அம்னோனை மனதில் பகைத்தான். இரண்டு ஆண்டுகள் கழித்து அவனை கொல்ல திட்டமிட்டு அதை செய்தும் முடித்தான்.

தாமார் : (3) (TAMAR)

வேத ஆதாரம் : II சாமு : 14 : 27

இந்த தாமார் அப்சலோமின் குமாரத்தி. இவள் மிகவும் அழகான பெண். தன் சகோதரியின் நினைவாகவே அப்சலோம் தன் மகளுக்கு தாமார் என்று பெயரிட்டிருப்பான். பனை மரம் போல உயரமான ஒரு பெண். கிபியா ஊரானாகிய

ஊரியேலின் மனைவி. அவள் அவனுக்கு மாக்காளை பெற்றா
(I இராஜா : 15 : 2, II நாளா : 11 : 20-22, 13:2)

7. **தாமரி** : (DAMARIS)

பெயரின் அர்த்தம் : கிடாரி (கன்று ஈனாத இளம் பசு)

வேத ஆதாரம் : அப் : 17 : 34

கிரேக்க தேசத்தில் உள்ளே அத்தேனே பட்டணத்தின் பிரசித்த பெற்ற பெண் தா இந்த தாமரி. இவளுடைய பெயர் இளம் பெண் என்னும் அர்த்தத்ை குறிக்கிறது. பவுல் மார்ஸ் மேடையில் ஏறி பிரசங்கம் பண்ணின போது சி அவன்ன இகழ்ந்தார்கள். இந்த சூழ்நிலையில் பவுல் சொல்லியவைகள கவனித்து கேட்டு அதை ஏற்றுக்கொண்டவள் தாமரி. இவளோடு சேர் சொல்லப்பட்டுள்ள தியொனீசியு இவளுடைய கணவன் என்று சி எழுதுகிறார்கள். ஆனால் அதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

8 **திம்னாள்** : (TIMNAH)

பெயரின் அர்த்தம் : தடை செய்பவள்

வேத ஆதாரம் : ஆதி : 36 : 12,22, I நாளா : 1 : 39

லோத்தானுடைய சகோதரி. ஏசாவின் மூத்த மகனாகிய எலீப்பா மறுமனையாட்டி. அமலேக்கின் தாய். ஓரியர்களுக்கும் ஏதோமியர்களுக் நடந்த யுத்தத்தின் சமயத்தில் இவள் அடிமையாக அழைத்து செல்லப்பட் என்று கருதப்படுகிறது. லோத்தானும் அவள் சகோதரியாகிய இந்த திம்னா ஓரிய இனத்தை சேர்ந்தவர்கள் என்று கருதப்படுகிறது. இவர்கள் சேயீர் மலை வாழ்ந்த குடிகள் ஆவர். ஏசாவின் வம்சவழியில் வந்த ஏதோமியர் சே மலையில் குடியேறின போது அங்கு வாழ்ந்த ஓரிய இனத்தை சேர்ந்தவர்க கொள்ளையிட்டார்கள். அப்போது சிறைபிடித்து கொண்டுப் போகப்பட்ட அமலேக்கின் தாயாகிய இந்த திம்னாள்.

9. **தியானாள்** : (DIANA)

பெயரின் அர்த்தம் : தெய்வீகம்

வேத ஆதாரம் : அப் : 19 : 24 - 41

தியானாள் என்ற பெயர் லத்தின் மொழியை மூல பாஷையாகக் கொண் லத்தின் மொழியின் டிவியானா (**DIVIANA**) அல்லது டிவஸ் (**DIVUS**) எ

வார்த்தையிலிருந்து உண்டான பெயராகும். இது ஆங்கிலத்தில் 'DIVINE' என்ற சொல்லப்படும் 'தெய்வீகம்' என்று அர்த்தங்கொள்ளும்.

தியானாள் ரோம புராண கதைகளினால் உண்டான 'நிலவு தேவி'. அவர்கள் தங்கள் நிலங்கள், வயல்கள் மற்றும் தங்கள் அன்றாட செயல்பாடுகள் ஆகிய எல்லாமே இந்த நிலவு தேவியாலேயே செழிக்கிறது என்று கருதுகிறார்கள். கிரேக்க கடவுளான 'ஆர்டிமிஸ்' உடன் தியானாளை ஒப்பிடுகிறார்கள். 'ஆர்டிமிஸ்' என்பது கிரேக்க மூலக்கடவுளான 'சீயஸ்' (ZEUS) – ன் பிள்ளையான அப்பொல்லோவின் இரட்டை சகோதரி ஆகும். இவள் வானத்தில் வேட்டையாடுபவள். இந்த தியானாள் காதலுக்கும் கன்னித்தன்மைக்கும் அடையாளப்படுத்தபடும் தேவியாவாள். அவளை அழகான, உயரமான ஒரு பெண்ணாகவே வடிவமைக்கிறார்கள். அவளுடைய தோளின் மேல் அம்புகளை வைக்கும் ஒரு உறை இருக்கும். வேட்டை தெய்வமாதலால் தன் கையில் ஈட்டியை பிடித்திருப்பாள். இவளிடம் அஸ்தரோத்தின் எல்லா குணங்களும் உண்டு. (அஸ்தரோத் பார்க்கவும்). அவளுடைய சிலை வானத்திலிருந்து கீழே விழுந்ததாக சொல்லப்படுகிறது. ஆனால் அது வானத்திலிருந்து விழுந்தது எரி கல் என்றே சொல்லப்படுகிறது. இந்த தியானாளின் உருவத்தை நாம் பண்டைய நாணயங்களில் பார்க்கமுடியும். அது முரட்டு தனமான தோற்றத்தை உடைய பெண்ணின் தோற்றம் ஆகும். அவள் தலையில் கிரீடம் சூட்டப்பட்டிருக்கும். அவளுக்கு அநேக மார்பகங்கள் உண்டு. இயற்கையின் அதீத சக்தியையும் பெலத்தையும் இவளுக்கு அடையாளப்படுத்துவதே இதற்கு காரணம்.

அவளுடைய பண்டைய கோயில் கி.மு. 580ல் கண்டுபிடிக்கப்பட்டு, கி.மு. 356ல் எரேஸ்டிராடஸ் என்பவனால் எரிக்கப்பட்டது. பின்னர் அவளது இரண்டாவது கோயிலை மகா அலெக்சாந்தர் தனது ஆட்சிக்காலத்தில் கட்டினான். அதுவே ஆசியாவிலும், உலகெங்கும் புகழ்பெற்ற தியானாளின் வழிபாட்டு ஸ்தலமாய் மாறினது. இந்த தியானாளின் கோயிலை சிறு வெள்ளி சிற்பங்களாக செய்து செய்து விற்க ஆரம்பித்தார்கள். இந்த வியாபாரம் நன்கு சூடு பிடித்தது. வியாபாரம் நன்றாய் போய்க் கொண்டிருந்த வேளையில் பவுல் எபேசுவில் பிரசங்கம் பண்ணி, கையினால் செய்யப்பட்ட தெய்வங்கள், தெய்வங்களே அல்ல என ஆணித்தரமாய் கூறினான். இதனால் அநேகர் மனமாற்றம் அடையத் தொடங்கினர். இதனால் இந்த தட்டான்களின் வியாபாரம் மந்தம் அடைய தொடங்கியது. இதனால் ஏற்பட்ட அமளியையே மேற்கண்ட வேதப்பகுதியில் வாசித்தோம்.

10. **திரிபேனாள்** : (TRYPHENA)

பெயரின் அர்த்தம் : சுகசெல்வமுள்ள

வேத ஆதாரம் : ரோம : 16 : 12

ரோம் நாட்டை சேர்ந்த பெண். பவுல் தன் நிருபத்தை ரோமருக்கு எழுதின போது, ரோமர்களை வாழ்த்தும் அட்டவனையில் இவள் பெயரும் வருகிறது. கர்த்தருக்கென்று பிரசயப்பட்டதாக சொல்லி பவுல் அவளை வாழ்த்துகிறார்.

11. **திரிபோசாள்** : (TRYPHOSA)

பெயரின் அர்த்தம் : ருசியுள்ள

ரோம் நாட்டை சேர்ந்த திரிபோசாள் திரிபேனாளுடன் சேர்ந்து பவுலால் வாழ்த்தபடுகிறாள். இவளும் காத்தருக்கென்று பிரயாசப்பட்டு ஊழியம் செய்தவள். திரிபேனாளும் திரிபோசாளும் சகோதரிகள் என்றும் உடன் ஊழியர்கள் என்றும் சொல்லப்படுகிறது. அதிலும் இவர்கள் இருவரும் இரட்டை சகோதரிகள் என்றும் சொல்லப்படுகிறது.

இவர்கள் இருவரும் ரோம் நாட்டின் கனம் பொருந்திய குடும்பத்தை சேர்ந்தவர்கள். இவர்கள் ரோமாபுரியில் உள்ள கிறிஸ்தவ சபையில் அயராது ஊழியம் செய்து வந்தார்கள். அவர்களுடைய பெயர்கள் புறஜாதிகள் வைக்கக்கூடிய பெயராயிருந்தாலும் அதற்கு எதிர்மறையாய் எளிமையாக வாழ்ந்து கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தார்கள். ரோம பேரரசனுக்கு கீழ் வேலை செய்த ஊழியர்களுக்கென தனியாக உள்ள கல்லறைகளில் இந்த இரு பெணகளின் பெயர்களும் கிறிஸ்தவ கல்வெட்டுகளாக பதிக்கப்பட்டுள்ளன. இவர்களையே பவுல் பிலி : 4 : 22ல், "இராயனுடைய அரண்மனையிலுள்ள பரிசுத்தவான்கள்" என்று குறிப்பிடுகிறார். இத்தகைய சிறப்பு மிக்க பெண்கள் எளிமையோடும் தாழ்மையோடும் ஊழியம் செய்தது சிறப்பே. எல்லாவற்றுக்கும் மேலாக ரோமர் 16ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட பரிசுத்தவான்களில் இடம் பிடித்திருப்பது அதிலும் சிறப்பு வாய்ந்ததாகும்.

12. **திர்சாள்** : (TIRZAH)

பெயரின் அர்த்தம் : இனிமையான, மகிழ்ச்சியான

வேத ஆதாரம் : எண். 26 : 33

செலொப்பியாத்தின் ஐந்து குமாரத்திகளில் இவள் கடைசி குமாரத்தி. ஒக்லாளின் சகோதரி (ஒக்லாள் பார்க்கவும்)

13. **தீனாள்** : (DINAH)

பெயரின் அர்த்தம் : நீதி அல்லது நீதி செய்கிறவர்

வேத ஆதாரம் : ஆதி : 34 அதிகாரம்

யாக்கோபுக்கும் லேயாளுக்கும் பிறந்தவள். அவள் ஒருநாள் ஊரை சுற்றிப்பார்க்கவும், தேசத்தில் உள்ள பெண்களை பார்க்கவும் சென்றாள். அப்போது ஏமோரின் குமாரனாகிய சீகேம் அவளை பார்த்து இச்சித்து, அவளை தூக்கிக் கொண்டு போய் கற்பழித்து, தீட்டுப்படுத்தினான். உடன்படிக்கையின் குடும்பமான யாக்கோபின் குடும்பத்திற்கு இது பெரிய அவமானத்தை கொடுத்தது. இதை கேள்விப்பட்ட தீனாளின் சகோதரர்களான சிமியோனும் லேவியும், ஏமோரின் குமாரனான சீகேமையும் பட்டணத்தின் எல்லா ஆண் மக்களையும் பட்டயத்தினாலே கொன்றுப்போட்டார்கள். ஏற்கனவே யாக்கோபுடன் சமாதான பேச்சு வார்த்தை நடத்தி தீனாளை தன்னுடைய மகன் சீகேமுக்கு மனைவியாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட ஏமோர், தன் பட்டணத்திலுள்ள எல்லா ஆண்மக்களையும் விருத்த சேதனம் செய்யும்படி சொன்னான். அவர்கள் விருத்தசேதனம் செய்துக்கொண்ட ஜனமாயிருந்தால் யாக்கோபு அவனை ஏற்றுக்கொள்ள ஏதுவாயிருக்குமே என்று எண்ணினான். சீகேமின் சொல்லைக் கேட்டு பட்டணத்தில் உள்ள எல்லா ஆண்மக்களும் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டார்கள். அவர்கள் விருத்தசேதனம் செய்த மூன்றாம் நாளிலே அவர்கள் வலி இன்னும் குறையாத வேளையிலே சிமியோனும் லேவியும் அங்கு சென்று எல்லாரையும் பட்டயத்தினாலே கொன்றுப்போட்டார்கள்.

பொதுவாக அரபியர்கள் மத்தியில் பல நூற்றாண்டுகளாக ஒரு சட்டம் இருந்தது. அது கற்பழிப்பு குற்றத்திற்கு மரண தண்டனை என்பதே. அதிலும் அந்த மரண தண்டனையை பாதிக்கப்பட்ட பெண்ணின் சகோதரர்களே கொடுப்பார்கள். ஆனால் சிமியோனும் லேவியும் இங்கே, ஆசீர்வாதத்தை அல்ல, தங்கள் தகப்பனிடத்திலிருந்து சாபத்தையே பெற்றுக்கொண்டார்கள். அதை நீங்கள் ஆதி : 49 : 5-7 வரை வாசிக்க முடியும்.

இந்த தீனாள் ஊரை சுற்றிப்பார்க்க ஆசைப்பட்டு வெளியே போனதால், அடுத்தடுத்து, நீண்ட வரிசையான பிரச்சனைகளை கொண்டுவந்தது. இளமையும், தைரியமும், ஆர்வமும் கொண்ட தீனாள் தன் குடும்பத்திற்கு ஒரு களங்கமாய் மாறினாள். புதுமையை தேடி சேரக்கூடாதவர்களோடு சேர்ந்து, தன் ஆர்வகோளாறினால் தீனாள், கானானிய வருடாந்திர பண்டிகையில் கலந்துகொள்ள சென்றாள் என்றும், அது இயற்கையை வழிபடும் ஒரு வித

பண்டிகை என்றும் யூத வரலாற்றாசிரியரான ஜோசபஸ் எழுதுகிறார். உலகத்தின் கவர்ச்சியை நாடி சென்ற தீனாள் பாவத்தையும், அவமானத்தையும் தான் சம்பாதித்தாள். இன்றும் உலகத்தின் கவர்ச்சியை நாடி அதன் பின் ஓடும் இளம் பெண்களை நினைக்க வேண்டிய தருணம் இது! அவர்களுக்காக ஜெபிக்க வேண்டியது நம்முடைய கடமை.

14. **துருசில்லாள்** : **(DRUSILLA)**

பெயரின் அர்த்தம் : பனியினால் நீர்பாய்ச்சப்படுதல்

வேத ஆதாரம் : அப் : 24 : 24,25

மகா ஏரோதுவின் பேரனான ஏரோது அகிரிப்பாவின் இளைய மகள். இவளுக்கு மரியம், பெர்னீஸ் என்னும் இரண்டு சகோதரிகள் உண்டு. துருசில்லாள் மிகவும் அழகு நிறைந்தவள். ஆனால் அவளுடைய சகோதரி பெர்னீஸ் அழகானவள் அல்ல. எனவே பொறாமையினால் பெர்னீஸ் துருசில்லாளுக்கு எப்போதும் தொல்லை கொடுத்துக் கொண்டேயிருப்பாள். துருசில்லாளுக்கு 6 வயதான போது கி.பி. 44ல் அவளுடைய தகப்பனான அகிரிப்பா மரித்து போனார். அவர் மரிக்கும் முன்பு துருசில்லாளை அந்தியோகியனின் மகனான எபிபேனஸ் என்பவனுக்கு நிச்சயித்து சென்றார். அந்த மணமகன் யூத மார்க்கத்தை தழுவுவதாக ஒப்புக் கொண்டான். ஆனால் பின்பு அவன் அதை செய்ய மறுத்ததால் இந்த சம்பந்தம் நின்று போயிற்று. பின்னர் துருசில்லாள் தனது 15 வயதில் ஆசிஸ்சஸ் என்ற எமேசாவின் ராஜாவை திருமணம் செய்து கொண்டாள். ஏனெனில் அவர் யூத மார்க்கத்திற்கு மதம் மாறினார்.

ஆனால் அவள் தன் கணவனை விட்டுவிட்டு ரோம ஆளுநரான பேலிக்ஸை திருமணம் செய்து கொண்டாள். இவள் மிகவும் அழகனானவளானதால் பேலிக்ஸ் இவள் மேல் கண் வைத்து, இச்சித்தான். பின்னர் சீமோன் என்னும் மாயவித்தைக்காரனின் மூலம் அவளை சேர்த்துக் கொண்டான். ஏற்கனவே தன் சகோதரி பெர்னீஸின் தொல்லையால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த துருசில்லாள், பேலிக்ஸை மணம் முடிக்க உடனே ஒப்புக்கொண்டாள். யூத ஸ்திரீயாகிய இவள் புறஜாதியான, தேவனை வணங்காத ரோமனை திருமணம் செய்துக்கொண்டாள். அவளுக்காக யூத மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட தன் கணவனுக்கு துரோகம் செய்தாள். துருசில்லாளுக்கும் பேலிக்ஸ்க்கும் அகிரிப்பா என்று ஒரு மகன் உண்டு.

பவுல் காவல்பண்ணணப்பட்டபோது, ஆளுநரான பேலிக்ஸ் முன் கொண்டுவரப்பட்டான். அவன் நீதியைக் குறித்தும், இச்சையடக்கத்தைக்

குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் பேசின போது பேலிக்ஸ் பயந்து, இன்னொரு சமயம் அழைக்கிறேன் என்று சொல்லி அனுப்பிவிடுகிறான். துருசில்லாளுக்கு ஒரு குற்ற மனசாட்சி வாதித்துக் கொண்டேயிருந்தது. தன் இரகசிய பாவங்களைக் குறித்து பேசினதினால் அவள் பவுலை பகைத்தாள். பவுல், பேலிக்ஸ் மற்றும் துருசில்லாள் முன்பு கொண்டுவரப்பட்டபோது, துருசில்லாளுக்கு வயது 20. பின்னர் 20 ஆண்டுகள் கழித்து கி.பி. 79ல் வெசுவியஸ் என்னும் இத்தாலிய எரிமலை வெடித்து சிதறியது. இந்த பேரழிவில் துருசில்லாளும் அவளுடைய மகனாகிய அகிரிப்பாவும் நெருப்பு குழம்பில் சிக்கி புதைந்து போனார்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவளுடைய வாழ்க்கையில் இப்படியாய் வெளிப்பட்டது!

தெபொராள் : (DEBORAH) (1)

பெயரின் அர்த்தம் : தேனீ

வேத ஆதாரம் : ஆதி : 24 : 59, 35 : 8

ரெபேக்காளின் தாதி. தெபொராளின் குடும்பப் பின்னனிப் பற்றி அதிகம் நமக்கு தெரியவிட்டாலும், அவள் நாகோர் குடும்பத்தின் (ஆபிரகாமின் சகோதரன்) பரம்பரை வேலைக்காரர்களில் ஒருத்தி என்றே கருதப்படுகிறது. ரெபேக்காள் திருமணத்திற்காக ஈசாக்கின் வீட்டிற்கு வந்தபோது, அவளுடைய தாதியாய் அவளுடன் கூட வந்தவள் தான் இந்த தெபோராள். ஏசாவும் யாக்கோபும் பிறந்த போது அவள் இந்த இரண்டு பிள்ளைகளை எவ்வளவு அன்போடு கவனித்திருப்பாள் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. பின்பு யாக்கோபுக்கு திருமணமாகி அவன் பிள்ளைகளையும் அவள் கவனித்திருப்பாள். பின்னர் பிள்ளைகள் வளர்ந்த பின்பும் கூட அவள் தன் சொந்த தேசம் திரும்பாமல், ரெபேக்காளின் குடும்ப நபரைப்போல அங்கேயே இருந்துவிட்டாள். தெபொராள் தனது 155வது வயதில் மரித்தாள். பெத்தேலுக்கு அருகில் ஒரு கர்வாலி மரத்தின் கீழ் அடக்கம் பண்ணப்பட்டாள். இவளுடைய மரணம் யாக்கோபின் முழு குடும்பத்தையும் கலங்க செய்தது. எனவேதான் அந்த கர்வாலி மரத்தை 'அல்லோன்பாகூத்' என்று யாக்கோபு அழைத்தான். அதற்கு "அழுகையின் கர்வாலி" என்று அர்த்தமாகும்.

16. தெபொராள் : (2) (DEBORAH)

வேத ஆதாரம் : நியா : 4,5, எபி : 11 : 32-34

இஸ்ரவேலின் நியாயாதிபதி. இவள் ஒரு தீர்க்கதரிசி. லபிதோத்தின் மனை... இவள் எப்பிராயீமின் மலைதேசமான ராமாவுக்கும் பெத்தேலுக்கும் இடை... இருந்த ஒரு பேரீச்சமரத்தின் கீழ்குடியிருந்தாள். இந்த மரம் தெபொராளி... பேரீச்சமரம் என்று அழைக்கப்பட்டது. யாபீனையும் அவன் சேனையை... அவன் சேனாதிபதியாகிய சிசெராவையும் அழிக்க பாராக்கை அழைத்து தீர்க்... தரிசனம் உரைத்து அவனோடு யுத்தத்திற்கு போனாள். அங்கே சிசெரா... வெற்றிக்கொண்டப்பின் அதைக்குறித்து தேவனைத் துதித்து வெற்றிப்பாட... பாடினாள். தெபொராள் திடமனம் கொண்ட பெண்மணியாயிரு... இஸ்ரவேலரை நியாயம் விசாரித்து வேதாகமத்தில் தனக்கென்று ஒ... பெருமைமிகு இடத்தை தக்க வைத்துக்கொண்டாள். அதுமட்டுமல்லாமல் இ... இஸ்ரவேலருக்கு ஒரு தாயாக விளங்கினாள். இஸ்ரவேலருக்கு தாயாக இரு... தெபொராளுக்கு பிள்ளைகள் இருந்தார்களா என்பது அறியப்படவில்லை.

17. தெலீலாள் : (DELILAH)

பெயரின் அர்த்தம் : மிருதுவான, பெலவீனமான

வேத ஆதாரம் : நியா : 16 : 4-21

எருசலேம் முதல் மத்தியதரைக்கடல் வரை நீண்டுள்ள சோரேக் பள்ளத்தாக்கி... ஆற்றங்கரையில் வாழ்ந்தவள். சிம்சோனை தன் அழகினாலே மயக்... அவனுடைய அழிவுக்கு காரணமாயிருந்தவள். பெலிஸ்திய பிரபுக்கள் கொடுத்... 1100 வெள்ளிக்காசுகளுக்காக அவள் சிம்சோனுக்கு துரோகம் செய்து அவனை... பெலிஸ்தியரிடம் ஒப்புக்கொடுத்தாள். அவள் பெலிஸ்திய தாசியாய் இருக்கலா... என்ற கருத்தும் இருந்து வருகிறது. இவளை 'பழைய ஏற்பாட்டு யூதாஸ்' என்... வேத அறிஞர்கள் விமர்சிக்கிறார்கள்.

18. தொற்காள் : (DORCAS)

பெயரின் அர்த்தம் : வெளிமான்

வேத ஆதாரம் : அப் : 9 : 36-43

நாம் ஏற்கனவே பார்த்த தபீத்தாளின் இன்னொரு பெயர் தான் தொற்கா... தபீத்தாள் என்ற பெயரின் கிரேக்க வடிவம் தான் தொற்காள்.
(தபீத்தாள் பார்க்கவும்)

ந

நகோமி : (NAOMI)

பெயரின் அர்த்தம் : யெகோவாவின் இனிமை

வேத ஆதாரம் : ரூத் புத்தகம் முழுவதும்

நகோமி எலிமெலேக்கின் மனைவி. இவர்கள் யூத மார்க்கத்தை உறுதியாய் பின்பற்றுபவர்கள். ஆனாலும் கூட இவர்களுடைய பூர்வீகத்தைப்பற்றி நமக்கு ஒன்றும் சொல்லப்படவில்லை. என்றாலும் ராகாப்பை திருமணம் செய்துக்கொண்ட யூதாவின் பிரபுவான சல்மோனின் சகோதரன் என்று சொல்லப்படுகிறது. இது உண்மையெனில் நகோமி ஒரு நல்ல சூழ்நிலையிலே தன் வாழக்கையை வாழ்ந்துக் கொண்டிருந்தாள் என்று சொல்லலாம். தன் பெயருக்கு ஏற்றாற்போல் இனிமை நிறைந்த வாழ்க்கையையே நகோமி வாழ்ந்துக் கொண்டிருந்தாள். இவர்களுக்கு மக்லோன், கிலியோன் என்று இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள்.

இந்த சூழ்நிலையில் தேசத்தில் கொடிய பஞ்சம் உண்டானது. இதனால் அவர்கள் மோவாப் தேசத்தில் போய் குடும்பமாய் குடியேறினார்கள். நகோமி அங்கேயும் தேவனை நேசித்து, அவருக்காகவே வாழ்ந்தாள். எலிமெலேக்கு பெத்லகேமைவிட்டு மோவாப் தேசத்தில் குடியேறியது தேவ சித்தத்திற்கு விரோதமாயிருந்தது. அது மாத்திரமல்லாமல் தன் இரண்டு மகன்களுக்கும் மோவாப் தேசத்து பெண்களைக் கொண்டது அடுத்த தவறு. இதனால் எலிமெலேக்கு மோவாப் தேசத்திலேயே மரித்துப்போனான். பின்னர் அவனது இரண்டு மகன்களும் மரித்து போனார்கள். இதனால் மனம் உடைந்த நகோமி தன் சொந்த ஊருக்கு போக முடிவெடுத்தாள். தன் மருமகளான ஓர்பாள் தன் தாய்வீட்டுக்கு திரும்பினாள். இன்னொரு மருமகளான ரூத் தன் மாமியாரோடு இணைந்து யூதாதேசம் வந்தாள். அங்கே தன்னை 'இனிமை' என்று அர்த்தங்கொள்ளும் 'நகோமி' என்று அழைக்காமல் 'கசப்பு' என்று அர்த்தங்கொள்ளும் 'மாராள்' என்று அழைக்கச் சொன்ன நகோமியை கர்த்தர் ஆசீர்வதித்து அவள் இழந்து போன இனிமையை ரூத்தின் மூலம் கொடுத்தார். அங்கே ரூத்துக்கு போவாசுடன் மறுமணம் நடந்தது. தன் பிள்ளைகளை இழந்து தன் சந்ததி முடிந்து போனதாய் எண்ணின நகோமியின் வம்சம் ரூத்தின் மூலம் தழைத்தது. ஆம், பிரியமானவர்களே ரூத் : 4 : 14-16 வரை வாசித்தால் அது நன்கு விளங்கும். ரூத்தின் பிள்ளைக்கு நகோமி தாயானாள். 'இனிமை' என்று

அர்த்தங்கொள்ளும் 'நகோமி', தன் வாழ்க்கையின் மத்திய பகுதியில் கொஞ்சம் கசப்புகளை அனுபவித்திருந்தாலும், அவளுடைய தொடக்க காலத்தைப் போலவே அவளுடைய முடிவுக் காலமும் இனிமையாகவேயிருந்தது.

2. **நாமாள்** : (1) (NAAMAH)

பெயரின் அர்த்தம் : இனிமை

வேத ஆதாரம் : ஆதி : 4 : 22

நகோமியும், நாமாளும் ஒரே மூல வார்த்தையிலிருந்து உண்டான பெயராகும். இந்த நாமாள் லாமேக்குக்கும் சில்லாளுக்கும் பிறந்த மகளாவாள். தூபால் காயீன் இவளுடைய சகோதரன். நோவாவின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளத்திற்கு முன்பு வாழ்ந்தவர்களில் பெயர் அறியப்பட்ட நான்கு பெண்களில் இவளும் ஒருத்தி.

இது புறஜாதிகள் வைக்கக்கூடிய ஒரு பெயர். வேதாகமத்தின் மிக பழைமையான பெயர்களில் இதுவும் ஒன்று. I நாளா : 4 : 15ல் சொல்லப்பட்ட 'நாகாம்' என்ற பெயரின் பெண்பால் வடிவமே இந்த நாமாள் என்ற பெயராகும்.

3. **நாமாள்** : (2) (NAAMAH)

வேத ஆதாரம் : I இராஜா : 14 : 21,31, II நாளா : 12 : 13

சாலொமோனின் அநேக மனைவிகளில் இவளும் ஒருத்தி. இஸ்ரவேலின் நேரடியான எதிரியான அம்மோன் ஜாதியை சேர்ந்தவள். நாமாளுக்காக சாலொமோன், அவள் தெய்வமாகிய மோளேக்குக்கு ஒரு பெரிய மேடையை உண்டு பண்ணியிருந்தான். சாலொமோனை கர்த்தரிடத்திலிருந்து அந்நிய தேவர்களிடத்திலும் விக்கிரகாராதனையிலும் வழி விலக செய்ததில் நாமாளுக்கு பெரிய பங்குண்டு. தன்னுடைய துன்மார்க்கமான பாதையில் தன் மகனாகிய ரெகோபெயாமையும் வளர்த்தாள். சாலொமோனுக்கு பிறகு ராஜாவான ரெகோபெயாம் தன் தாய் கற்றுக் கொடுத்த பொல்லாத வழியிலேயே நடந்தான். இதனால்தான் தேவன் ராஜ்யத்தை பிரிக்க சித்தங் கொண்டார். ராஜ்யம் பிரிந்த போகும் அளவிற்கு பெரிய கேடு இஸ்ரவேலில் உண்டானதற்கு நாமாளே பெரும் காரணம்.

நாராள் : **(NAARAH)**

பெயரின் அர்த்தம் : பெண்

வேத ஆதாரம் : I நாளா 4 : 5,6

யூதா தேசத்தின் ஒரு பட்டணமாகிய தெக்கோவாவின் மூப்பனாகிய அசூரின் இரண்டாம் மனைவி. அகுசாம், எப்பேர், தெமனி, ஆகாஸ்தாரி ஆகியோர் இவளுடைய பிள்ளைகள் ஆவர்.

நெகுஸ்தாள் : **(NEHUSHTA)**

பெயரின் அர்த்தம் : வெண்கலம்

வேத ஆதாரம் : II இராஜா : 24 : 8

எருசலேமை சேர்ந்த எல்நாத்தானின் குமாரத்தி. யோசியாவின் மூத்த மகனாகிய யோயாக்கீமின் மனைவி. இவன் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தான். இவர்களுடைய மகனாகிய யோயாக்கீனும் கர்த்தருடைய பாதையை விட்டு வழி விலகி நடந்தான். பின்னர் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யோயாக்கீனின் ராஜ்யத்தை சிறை பிடித்தபோது அவன் தாயாகிய நெகுஸ்தாளும் பாபிலோனுக்கு சிறைக்கைதியாய் கொண்டுப்போகப்பட்டாள்.

நொவதியாள் : **(NOADIAH)**

பெயரின் அர்த்தம் : யெகோவாவை சந்திப்பவள்

நொவதியாள் ஒரு கள்ளத்தீர்க்கதரிசி. அவள் தன் பெயரின் அர்த்தத்திற்கு எதிராய் வாழ்ந்தவள். அவள் தன் சுய ஆவியின் பரவசத்தினாலே தீர்க்கதரிசனம் சொல்லி வந்தாள். இவள் சன்பல்லாத்து, தொபியா ஆகியோரோடு சேர்ந்துக் கொண்டு நெகேமியாவின் அலங்கம் கட்டும் உன்னத பணியை தடை செய்தவள். இதற்காக நெகேமியாவை பயமுறுத்தினவள். ஆனால் நெகேமியா ஜெபம் மாத்திரம் செய்தான். அவளுடைய எல்லா கிரியைகளும் தகர்க்கப்பட்டு அலங்கம் வெற்றியாய் கட்டி முடிக்கப்பட்டது.

கள்ளத்தீர்க்தரிசியான இந்த நொவதியாள், ஜீவனுள்ள தேவனுடைய உண்மையான தீர்க்கதரிசியான உல்தாளுக்கு எதிர்த்து நின்றவள். நொவதியாள் தன்னிகரற்றவள். ஆனால் மிகவும் கொடூரமானவளும் கூட. எஸ்றாவின் காலத்தில் நொவதியா என்ற பெயரில் ஒரு லேவியனும் வேதாகமத்தில் உண்டு. (எஸ்றா : 8 : 33)

7. **நோவாள்** : (NOAH)

பெயரின் அர்த்தம் : இளைப்பாறுதல்

வேத ஆதாரம் : எண் 26 : 33, 27:1

செலோப்பியாத்தின் ஐந்து குமாரத்திகளில் இவள் இரண்டாம் குமாரத்தி. ஒக்லாள் திர்சாள் ஆகியோரின் சகோதரி.
(ஒக்லாள் பார்க்கவும்)

ப

1. **பஸ்மாத்** : (1) (BASMATH)

பெயரின் அர்த்தம் : வாசனை மிகுந்த

வேத ஆதாரம் : ஆதி : 26, 34, 36:10

பஸ்மாத் ஏசாவின் மனைவி. இவளுடைய இன்னொரு பெயர் ஆதாள். பஸ்மாத் என்ற பெயர் அவள் திருமணத்தின் போது அவளை புகழும் படியாய் கொடுக்கப்பட்ட பெயராகும். (ஆதாள் (2) பார்க்கவும்)

2. **பஸ்மாத்** : (2) (BASMATH)

வேத ஆதாரம் : ஆதி : 28 : 9, 36 : 3,4,13

இந்த இரண்டாவது பஸ்மாத்தும் ஏசாவின் மூன்று மனைவிகளில் ஒருத்தி தான் இவளுடைய இன்னொரு பெயர் மகலாத். இவள் இஸ்மவேலின் குமாரத்தி. இந்த பஸ்மாத்தின் மகன் பெயர் ரெகுவேல். இவனிலிருந்து நான்கு ஏதோமிய தோன்றினார்கள்.

பஸ்மாத் : (3) (BASMATH)

வேத ஆதாரம் : I இராஜா : 4 : 15

இவள் சாலொமோனின் குமாரத்தி. அகிமாசின் மனைவி. ஆகிமாஸ் நப்தலியில் சாலொமோன் ராஜாவின் பிரபுவாயிருந்தான்.

பத்சேபாள் : (BATHSHEBA)

பெயரின் அர்த்தம் : ஆணையின் குமாரத்தி

வேத ஆதாரம் : II சாமு 11 : 2,3, 12:24

II இராஜா 1 : 11-31, 2 : 13-19, II நாளா : 3 : 5

இவள் எலியாமின் குமாரத்தி. இந்த எலியாம் இன்னொரு இடத்தில் அம்மியேல் என்று குறிப்பிடப்படுகிறார். இவர் தாவீதின் பராக்கிமசாலிகளில் ஒருவர். இந்த எலியாம் அகித்தோப்பேலின் குமாரன் ஆவர். சரி போகட்டும்! இப்போது பத்சேபாளை குறித்து பார்ப்போம். இவள் தாவீதின் ஊழியக்காரனான உரியாவின் மனைவி. தாவீது பத்சேபாளை இச்சித்து அவளை தனக்கு மனைவியாக்கிக் கொள்ள உரியாவை கொல்ல சதி செய்தான். உரியா இறந்த பின் அவளை தனக்கு மனைவியாக்கிக்கொண்டான். தாவீதுக்கும் பத்சேபாளுக்கும் ஐந்து பிள்ளைகள் பிறந்தார்கள். அதில் முதல் பிள்ளை தேவ தண்டனையால் மரித்து போனது. சிமீயா, சோபாப், நாத்தான் மற்றும் சாலொமோன் ஆகியோர் இவர்களின் நான்கு பிள்ளைகள் ஆவர்.

தாவீது ஆகீத்துக்கு பெற்ற குமாரனாகிய அதோனியா ராஜாவாக எண்ணம் கொண்டு செயல்பட்டபோது, தீர்க்கதரிசியான நாத்தானுக்கு ஆதரவாக இருந்து, தனது மகனான சாலொமோனை ராஜாவாக்கும் படி தாவீதிடம் பேசினாள். பின்னர் சாலொமோன் ராஜாவான பிறகும், அதோனியா, ராஜ்யத்தை தாவீதின் மனைவியாகிய அபிஷாக் மூலம் பிடிக்க திட்டமிட்டு, அபிஷாக்கை தனக்கு திருமணம் செய்து கொடுக்கும்படி ராஜாவாகிய சாலொமோனிடம் கேட்கும்படி பத்சேபாளிடம் வஞ்சகமாய் பேசினான். பத்சேபாள் இதைக்குறித்து சாலொமோனிடம் பேசினபோது, அதோனியாவின் வஞ்சக எண்ணத்தை புரிந்து கொண்டு, அவனை கொல்ல கட்டளையிட்டான். இங்கே பத்சேபாளோ தன் எதிரியின் வஞ்சக எண்ணத்தைக்கூட புரிந்து கொள்ளாமல், அவனுக்காகவே பரிந்து பேசும் அளவிற்கு அறியாமை நிறைந்தவளாய் இருப்பது ஆச்சரியம்தானே! (அபிஷாக் பார்க்கவும்)

பாராள் : **(BAARA)**

பெயரின் அர்த்தம் : முரட்டுத்தனமான

வேத ஆதாரம் : I நாளா : 8 : 8

பாராள் சகராயீமின் மனைவி. இவள் மோவாப் தேசத்தை சேர்ந்தவள். பென்யமீன் கோத்திரத்தானாகிய சகராயீம் மோவாம் தேசம் சென்ற போது இவளை திருமணம் செய்துக்கொண்டான். (ஓதேசாலே பார்க்கவும்)

பித்தியாள் : **(BITHIAH)**

பெயரின் அர்த்தம் : யெகோவாவின் குமாரத்தி

வேத ஆதாரம் : I நாளா : 4 : 18

இவள் பார்வோனின் குமாரத்தி. மேரேத்தின் மனைவி. இவன் யூதாவை சேர்ந்தவன். இவள் ஒரு எகிப்திய பெண்ணாயிருந்து, பின்னர் யெகோவாவை ஏற்றுக்கொண்டு, அவரை தொழுது கொள்ள விரும்பியதால், யெகோவாவின் குமாரத்தி என்று அர்த்தங்கொள்ளும் பித்தியாள் என்று அழைக்கப்பட்டதாக கருதப்படுகிறது. (எகுதியாள் பார்க்கவும்) மேரேத்தின் எகிப்திய மனைவி என்று இவள் அடையாளப்படுத்தபடுகிறாள்.

7. **பிரிஸ்கில்லாள்** : **(PRISCILLA)**

பெயரின் அர்த்தம் : 'பிரிஸ்கா' என்றால் பழமை. பிரிஸ்கில்லாள் என்றால் சிறிய பிரிஸ்கா என்று அர்த்தமாகும். அதாவது கொஞ்சம் பழமையான என்று அர்த்தம் கொள்ளலாம்.

வேத ஆதாரம் : அப் : 18:2, 18, 26, ரோமர் 16:3, I கொரி : 16:19, II தீமோ : 4 : 19

ஆக்கில்லாவின் மனைவி. தன் கணவனைப் போலவே இவளும் பொந்து தேசத்தை சேர்ந்த யூத பெண்மணி என்றே கருதப்படுகிறாள். இவர்கள் ரோம் தேசத்தில் தங்கியிருந்தார்கள். அப்போது கிலவுதியுராயன் யூதரெல்லாரையும் ரோமாபுரியை விட்டு வெளியேறும்படி கட்டளையிட்டப்படியினால், அங்கு புதிதாய் வந்திருந்த பவுல் ஆக்கில்லா, பிரிஸ்கில்லாளுடன் இணைந்துக்கொண்டார். இவர்களும் பவுலைப்போலவே கூடாரத்தொழில் செய்பவர்கள். இவர்கள் மூவரும் கொரிந்து பட்டணத்திற்கு போய் அங்கே ஓரிடத்தில் தங்கி கூடாரத் தொழில் செய்தனர். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் எப்போது இயேசுவை கிறிஸ்துவாக ஏற்றுக்கொண்டனர் என்பது அறியப்படாவிட்டாலும், அவர்கள் இருவரும் குடும்பமாய் கர்த்தருக்கென்று வைராக்கியமாய் ஊழியம் செய்தார்கள் பிரிஸ்கில்லாளைப்பற்றி எழுதினாலும், ஆக்கில்லாவை விட்டு விட முடியாது ஏனெனில் கணவன் மனைவி இருவரும் எங்கேயும் ஒன்றாகவே இருந்து கர்த்தருக்காக உழைத்தார்கள். அப் : 18 : 18, ரோ : 16:3, II தீமோ : 4 : 19 ஆகிய வசனங்களை வாசிக்கும்போது ஆக்கில்லா கணவராயிருந்தும் பிரிஸ்கில்லாள் பெயரே முதலில் குறிப்பிடப்படுகிறது. இதற்குக் காரணம் பிரிஸ்கில்லாள் ஆக்கில்லாவைக் காட்டிலும் அதிக உற்சாகமுள்ளவளாய், பவுலின் பார்வையில் மதிப்புமிக்கவளாக காணப்பட்டாள். பின்பு ஒன்றரை ஆண்டுகள் கழித்து பவுல் கொரிந்து பட்டணத்திலிருந்து, சீரியா தேசம் சென்றபோது இவர்களும் பவுலோடு கூட போனார்கள். அவர்கள் எபேசு பட்டணம் வரை போய் அங்கே தங்கிவிட்டார்கள். I கொரிந்தியர் நிருபத்தில் பவுலோடு சேர்ந்து கொரிந்தியருக்

வாழ்த்துதல் சொன்னார்கள். அப்போது அவர்கள் பவுலோடு எபேசுவில் இருந்திருப்பார்கள். அவர்கள் எபேசுவில் இருந்த போதுதான் அப்பொல்லோவை சந்தித்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விளக்கமாய் எடுத்துரைத்தார்கள். பின்னர் அவர்கள் மறுபடியும் ரோமாபுரிக்கு வந்திருக்க வேண்டும். ஏனெனில் பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துகிறார். ஆனால் மறுபடியும் அவர்கள் எபேசு பட்டணத்திற்கு வந்திருக்க வேண்டும். ஏனெனில் பவுல் ரோம் தேசத்திலிருந்து தீமோத்தேயுவுக்கு நிருபத்தை எழுதும் போதும் இவர்களை வாழ்த்துகிறார்.

பிரிஸ்கில்லாளைக் குறித்து சொல்லும் போது, அவள் தன் கணவரோடு சேர்ந்து உற்சாகமாய் ஊழியம் செய்தாள் என்பதோடு நிறுத்திவிட முடியாது. ஏனெனில் ஒரு நல்ல குடும்பத்தலைவியாய் தன் கணவருடைய வேலையிலும் உதவி செய்தாள். ஒரு திருமணமானப் பெண் அல்லது குடும்பத்தலைவி எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு ஒரு மாதிரியாய் பிரிஸ்கில்லாளின் வாழக்கை அமைந்திருந்தது.

பில்காள் : **(BILHAH)**

பெயரின் அர்த்தம் : கூச்ச சுபாவம் நிறைந்தவள்

வேத ஆதாரம் : ஆதி : 29 : 29, 30:3-8, 35 : 22,25, 37 : 2, 46 : 25, I நாளா : 4 : 29, 7 : 13

இவள் லாபானின் வீட்டிலிருந்த அடிமைப்பெண் ஆவாள். லாபானின் மகள் ராகேலுக்கு வேலைக்காரியாக கொடுக்கப்பட்டவள். ராகேலுக்கு பிள்ளையில்லாததினாலே தன் வேலைக்காரியாகிய பில்காளை தன் கணவனாகிய யாக்கோபுக்கு மனைவியாக கொடுத்தாள். அவள் மூலமாவது தனக்கு பிள்ளை கிடைக்கட்டும் என்றெண்ணி இப்படி செய்தாள். பில்காள் கர்ப்பவதியாகி தாண் மற்றும் நப்தலியை பெற்றாள். நியாயாதிபதியாகிய சிம்சோன் தாண் வம்சத்தை சேர்ந்தவன் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் ராகேல் மரித்த போது யாக்கோபு ஏதேருக்கு அருகே கூடாரம் போட்டு தங்கினான். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி யாக்கோபின் மூத்த மகனாகிய ரூபன், பில்காளோடே சயனித்தான். இதை யாக்கோபு கேள்விப்பட்டான். இதனால் ரூபன் மூத்த மகனாயிருந்தும் அவனுடைய சேஷ்டபுத்திரபாகம் பிடுங்கப்பட்டு அது யோசேப்பின் குமாரருக்கு கொடுக்கப்பட்டது.
(ஆதி : 35 : 22, 49 : 4, I நாளா : 5 : 1)

9. **பூவாள்** : (PUAH)

பெயரின் அர்த்தம் : அறிவாளி, புத்திசாலி

வேத ஆதாரம் : யாத் : 1 : 15

இஸ்ரவேலர் நாள்தோறும் பெருகியதால் பயந்து போன பார்வோன் இஸ்ரவேலில் பிறக்கும் ஆண் பிள்ளைகளை பிரசவத்தின் போதே கொல்ல நியமிக்கப்பட்ட மருத்துவச்சிகளில் ஒருத்தி. (சிப்பிராள் பார்க்கவும்)

10. **பெபேயாள்** : (PHEBE)

பெயரின் அர்த்தம் : தூய்மையான, பிரகாசமான

வேத ஆதாரம் : ரோம : 16 : 1,2

பெபேயாள் என்பது கிரேக்கர்களின் நிலவு கடவுளைக்குறிக்கிறது. அதாவது தூய்மையான பிரகாசமான நிலவைப் போன்றவள் என்று தங்கள் தெய்வத்தை வருணிக்கும் பெயரே பெபேயாள். ஆனால் பவுல் அறிமுகப்படுத்தும் இந்த பெபேயாளோ இயேசு கிறிஸ்துவுக்காக பிரகாசமாய் ஒளி வீசும் ஒரு ஊழியக்காரி. கொரிந்து பட்டணத்தின் கிழக்கு துறைமுகமான கெங்கிரேயா ஊரை சேர்ந்த சபை ஊழியக்காரி. இவள் தன் காரியமாய் கொரிந்திலிருந்து ரோம் தேசம் செல்வதால் பவுல் ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதும் தனது நிருபத்தில், அங்கு புறப்பட்டு வரும் பெபேயாளை கவனித்துக்கொள்ளும்படி எழுதுகிறார். அவளுக்கு என்ன தேவைப்பட்டாலும் கொடுத்து உதவி செய்யுங்கள் என்றும் குறிப்பிடுகிறார். பவுல் பெபேயாளை பற்றி கூறும் போது அவளை 'நமது சகோதரி' என்றும் 'சபை ஊழியக்காரி' என்றும் 'தனக்கும் அநேகருக்கும் ஆதாரவாயிருந்தவள்' என்றும் குறிப்பிடுவதை பார்க்கலாம். அதாவது சகோதரியை போன்ற பாசம் நிறைந்தவள் என்றும் கிறிஸ்தவ சபைக்கு நல்ல ஒரு ஊழியக்காரி என்றும், தனக்கும் மற்றவருக்கும் நன்றாய் உதவி செய்யும் குணம் படைத்தவள் என்றும் கூறுகிறார். எனவே அவளை மதித்து, ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கூறுகிறார்.

11. **பெர்சியாள்** : (PERSIS)

பெயரின் அர்த்தம் : பெர்சியாவை சேர்ந்தவள்

வேத ஆதாரம் : ரோமர் : 16 : 12

ரோம் தேசத்தில் உள்ள கிறிஸ்தவள். கர்த்தருக்கென்று மிகவும் அதிகமாய் பிரயாசப்பட்டவள். பவுல் இவளை பிரியமானவள் என்று சொல்லி வாழ்த்துவது அவளுடைய வாழ்க்கை முறையின் அழகை நமக்கு வெளிப்படுத்துகிறது.

பெர்னீக்கேயாள் : (BERNICE)

பெயரின் அர்த்தம் : வெற்றியாளன், வெற்றி பெறுபவள்

வேத ஆதாரம் : அப் : 25 : 13,23, 26 : 30

அப் : 12 : 1ல் சொல்லப்பட்ட சபையை துன்படுத்தின ஏரோது முதலாம் அகிரிப்பாவின் மூத்தமகள். துருசில்லாளின் சகோதரி. தன் சகோதரி தன்னை விட அழகாயிருந்ததால் அவளை நாள்தோறும் துன்பப்படுத்தினவள். இவளுடைய தொல்லையினாலேயே பேலிக்ஸ் துருசில்லாளின்மேல் கண் வைத்த போது அவனை ஏற்றுக்கொள்ள உடனே ஒப்புக் கொண்டாள். பெர்னீக்கேயாள் முதலில் மார்க்கஸ் என்பவரை திருமணம் செய்துக் கொண்டாள். பிறகு கல்கீஸின் ராஜாவாகிய ஏரோது என்னும் தன் உறவினரை திருமணம் செய்துக் கொண்டாள். கொஞ்ச நாட்களிலேயே அவன் மரித்து போனதினால் தன் சொந்த சகோதரனாகிய இரண்டாம் அகிரிப்பாவோடு சேர்ந்துகொண்டாள். மற்றவர்கள் அவர்கள் உறவை சந்தேகிக்கும் அளவிற்கு அவனுடன் நெருக்கமாக பழகினாள். மற்றவர்களுடைய சந்தேகத்திற்கு முற்றுப்புள்ளிவைக்க பாலமி (Ptolemy) என்னும் சிலிசியாவின் ராஜாவை திருமணம் செய்துக் கொண்டாள். அவன் அவளுக்காக விருத்தசேதனம் பண்ணி யூத மதத்தை தழுவினான். பிறகு அவனோடும் வாழ பிடிக்காமல் மறுபடியும் தன் சகோதரனோடு சேர்ந்து வாழ்ந்தாள். இத்தகைய ஒரு சூழலில் தான், அகிரிப்பா மற்றும் பெர்னீக்கேயாள் முன்பு பவுல் நியாயம் விசாரிக்க நிறுத்தப்படுகிறார்.

பின்னர் இவள் வெஸ்பாசியனோடும் அவனுடைய மகனான தீத்துவுடனும் வாழ்ந்தாள். தீத்து மகாராஜாவான போது இவளை ஒதுக்கிவைத்து விட்டான். ரோம வரலாற்றிலேயே மிகவும் கேவலமான ஒரு வாழ்க்கையை இவளும் இவளது சகோதரியான துருசில்லாளும் வாழ்ந்தார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. துன்மார்க்கமும் வேசித்தனமும் இவள் வாழ்க்கையை நிறைத்திருந்தது.

பென்னினாள் : (PENINNAH)

பெயரின் அர்த்தம் : பவளம்

வேத ஆதாரம் : I சாமு : 1 : 2,6

எல்கானாவின் இரண்டாம் மனைவி. அன்னாளின் சக்களத்தி. அன்னாளின் மலட்டுதன்மையை அடிக்கடி சுட்டிக்காட்டி அவளை எப்போதும் மனமடிமாக்குவதே இவளது இயல்பு. நெஞ்சில் ஈரம் இல்லாதவள் என்ற

சொல்லுக்கு ஏற்றவள். தன் கணவர் அன்னாள் மேல் அதிக அன்பு காட்டினதும் இவள் பொறாமைக்கு ஒரு காரணமாயிருக்கலாம்.

ம

1. **மகலாத்** : (MAHALATH) (1)

பெயரின் அர்த்தம் : வியாதி, கவலை, வருத்தம்

வேத ஆதாரம் : ஆதி : 28 : 9

இஸ்மவேலின் குமாரத்தி. நெபாயோத்தின் சகோதரி. ஏசாவின் மூன்றாம் மனைவி. 53ஆம் சங்கீதத்தின் தலைப்பில் இப்பெயரை நீங்கள் பார்க்க முடியும். அது துக்கத்தில் பாடுகிற பாடலை குறிக்கிறது. இவளுக்கு இப்படி ஒரு பெயர் ஏன் வைக்கப்பட்டது என்பது அறியப்படவில்லை. ஒரு வேளை இது அவளுடைய பிறப்பின் போது இருந்த சூழ்நிலையாயிருக்கலாம்.

2. **மகலாத்** : (MAHALATH) (2)

வேத ஆதாரம் : II நாளா : 11 : 18

ரெகொபெயாமின் பதினெட்டு மனைவிகளில் முதல் மனைவி இவள். அவனுக்கு அறுபது மறுமனையாட்டிகளும் இருந்தார்கள். இவள் தாவீதின் குமாரனாகிய எரிமோத்தின் குமாரத்தி. எனவே இவள் தாவீதின் பேத்தியாவாள்.

3. **மக்லாள்** : (MAHLAH)

பெயரின் அர்த்தம் : வியாதி, கவலை, துக்கம்

வேத ஆதாரம் : எண். 26 : 33

செலோப்பியாத்தின் ஐந்து குமாரத்திகளில் மூத்த குமாரத்தி இவள். (ஒக்லாள் பார்க்கவும்)

4. **மத்ரேத்** : (MATRED)

பெயரின் அர்த்தம் : உந்தித்தள்ளுதல்

வேத ஆதாரம் : ஆதி : 36 : 39, I நாளா : 1 : 50

இவள் மெகேதபேலின் தாய். மெகேதபேல் ஆதாத் என்னும் ஏதோமிய ராஜாவின் மனைவி. இதன் மூலம் இவள் ஒரு ஏதோமிய ராஜாவின் மாமியார் ஆனாள். இவளுடைய தகப்பன் பெயர் மேசகாப்.

மரியாள் : **(1) (MARY) (கன்னி மரியாள்)**

பெயரின் அர்த்தம் : **கண்ணீர்**

மரியாள் என்ற பெயர் 'மாராள்' 'மிரியாம்' என்ற பெயர்களிலிருந்து உருவானது. மாராள் என்றால் கசப்பு, மிரியாம் என்றால் எதிர்ப்பு. எனவே தான் மரியாள் என்ற பெயர் கண்ணீர் என்று அர்த்தங் கொண்டது.

வேத ஆதாரம் : மத் : 1,2 அதிகாரங்கள், மத் : 12 : 46, லூக்கா 1,2 அதிகாரங்கள், யோவான் : 2 : 1-11, 19 : 25, அப் : 1 : 14

இவள் 'கன்னிமரியாள்' என்றும், 'இயேசுவின் தாயாகிய மரியாள்' என்றும் அழைக்கப்பட்டாள். இவளுக்கென்று எந்த ஒரு முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று பின்னனியும் இல்லை.

இவள் யோசேப்பின் மனைவி. இவளும் யோசேப்பைப் போலவே யூதா கோத்திரத்தை சேர்ந்த தாவீதின் வம்சத்தாள் என்றே சொல்லப்படுகிறது. இவளைப்பற்றிய எல்லா தகவல்களும் நமக்கு வேதத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. 'நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா' என்று நாத்தான்வேல் கேட்டது போல, நாசரேத் என்னும் எந்த ஒரு முக்கியதுவமும் இல்லாத ஒரு சிறிய ஊரில் வாழ்ந்துக்கொண்டிருந்தவள். எலிசபெத் கர்ப்பவதியான ஆறாம் மாதத்திலே காபிரியேல் தூதன் மூலம் மரியாளுக்கு வாழ்த்துதலும் நற்செய்தியும் உண்டானது. அப்போது அவள் தச்சரான யோசேப்புக்கு நிச்சயிக்கப்பட்ட கன்னிப் பெண்ணாயிருந்தாள். மேசியாவை பெற்றெடுக்க தேவன் தெரிந்து கொண்ட தாயாய் விளங்கினாள். தான் கன்னிப்பெண்ணாயிருந்தும் மற்றவர்கள் தன்னைப் பற்றி என்ன சொல்லுவார்கள் என்று கவலைப்படாமல் தன்னை ஆண்டவருக்கு அடிமையாக ஒப்புக்கொடுத்தாள். மரியாள் எலிசபெத்தோடு சேர்ந்துபாடின ஸ்தோத்திரப்பாடல் இங்கே முக்கியமானது. மரியாள் யோசேப்பை திருமணம் செய்த பின் அவளுக்கு நான்கு மகன்களும் அநேக குமாரத்திகளும் பிறந்தார்கள். யாக்கோபு, யோசே, யூதாஸ் மற்றும் சீமோன் என்பது அந்நால்வரின் பெயராகும். இயேசுவின் பிறப்பு, ஞானிகளின் வருகை, எகிப்துக்கு தப்பியோடுதல், பின்னர் மறுபடியும் நாசரேத் திரும்புதல் ஆகியவற்றில் மரியாளின் பங்கை நாம் நன்கு அறிவோம். இதன் பின்பு இயேசு ஊழியம் செய்ய தொடங்கின பின்பு மரியாள் நான்கு முறைதான் காட்சியில் இடம் பெறுகிறாள்.

1. **கானா ஊர் திருமணத்தில்** (யோ : 2 : 1- 11) மரியாள் அந்த திருமண வீட்டி இருந்து, இயேசுவின் முதலாம் அற்புதத்திற்கு சாட்சியாய் விளங்கினாள். அவ அந்த சமயத்தில் ஒரு விதவையாயிருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.
2. **அடுத்ததாக இயேசு ஒரு வீட்டில் பிரசங்கித்துக் கொண்டிருந்த போது அவரை தேடி சென்ற மரியாள்.** இதை மத் 12 : 46-50, மாற் : 3 : 31-35 லூக் : 8 : 9-21 ஆகிய இடங்களில் வாசிக்கலாம். இயேசு அவர்களை வெளி வந்து சந்திக்காமல் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே எனது தாயு சகோதரருமாயிருக்கிறார்கள் என்றார்.
3. **மூன்றாவதாக இயேசுவின் சிலுவையின் அருகில் நின்றுக் கொண்டிருந் மரியாள்.** தன் தாயாகிய மரியாளை யோவானிடம் ஒப்படைக்கும் நிகழ் அங்கே பார்க்க முடியும். (யோவான் : 19:25) இதுவரை நாம் பார்த்த மரியா மிகுந்த மென்மையானவளும், தாழ்மையுள்ளவளும், உண்மையுள்ளவளு பொறுமையும் அன்பும் நிறைந்தவளாயும் காணப்பட்டாள். ஆனால் அடுத் காட்சியில் இடம் பெறும் போது மரியாள் தேவ சமூகத்தில் அவருடை வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருக்கிறவளாய் வைராக்கியம் நிறைந்தவள காணப்படுகிறாள்.
4. ஆம், கடைசியாக அவள் சீஷர்களை சந்தித்து மேல்வீட்டறையிலே பரிசுத் ஆவியானவரின் வருகைக்காக காத்திருக்கிறவளாக காண முடியும் (அப் : 1:1 உண்மையும், பக்தியும், அன்பும் நிறைந்த ஒரு தாயின் மாதிரியாகவே மரியாள வேதம் நமக்கு காண்பிக்கிறது.

6. **மரியாள் (மகதலேனா மரியாள்) : MARY MAGDELENE (2)**

வேத ஆதாரம் : மத் : 27 : 56, 61, 28:1, மாற் : 15 : 40, 47, 16: 1-19, லூக் : 8 : 2, 24 : 10, யோ : 19:25, 20 : 1-18

இந்த மரியாள் மகதலா என்னும் ஊரைச் சேர்ந்தவள். இது கப்பர் நகூமிலிரு மூன்று மைல் தொலைவில் உள்ள கலிலேயா கடற்கரையோர பட்டண இயேசுவின் காலத்தில் இது மிகவும் புகழ் வாய்ந்த ஒரு பட்டணமாகும். சா தொழிலும், ஜவுளித் தொழிலும் இதன் வளமைக்கு மெருகேற்றியது.

மகதலேனா மரியாளின் பெற்றோர், வயது திருமணம் பற்றி எது அறியப்படவில்லை. ஆனால் அவள் சுயாதீனமாய் இயேசுவைப் பின்ப அவரோடு பயணிப்பதன் மூலம் அவளுக்கு குடும்ப உறவுகள் ஏதும் இல் என்பதை அறிந்து கொள்ளலாம். இயேசு இவளிலிருந்து ஏழு பிசாசுக துரத்தினார். இவள் சுகம் பெற்ற உடனே இயேசுவை பின்பற்றினாள். இயேசு

பாதத்தில் பரிமள தைலம் பூசின பாவியான ஸ்திரீ இவள் தான் என்றும், லாசருவின் சகோதரியான மரியாளும் இவள்தான் என்றும் சிலர் நம்புகிறார்கள். ஆனால் இதற்கு எந்த ஒரு ஆதாரமும் இல்லை.

பின்னர் இயேசுவின் சிலுவையின் அருகில் நின்றவள். இயேசு கல்லறை அருகிலேயே அமர்ந்திருந்தவள். உயிர்தெழுந்த இயேசுவை முதலில் தரிசித்தவளும் இவள் தான். பின்னர் இயேசுவின் உயிர்த்தெழுதலை சீஷருக்கு அறிவித்தாள். ஆனால் அதன் பிறகு அவளைப்பற்றி எந்த தகவலும் அறியப்படவில்லை.

மரியாள் : (பெத்தானியாவை சேர்ந்தவள்) (3)

வேத ஆதாரம் : லூக் : 10 : 38 - 41, யோவா : 11, 12 : 1-3

பெத்தானியாவை சேர்ந்த இந்த மரியாள் மார்த்தாள் மற்றும் லாசருவின் சகோதரி. இவர்கள் இயேசு நேசித்த ஒரு குடும்பத்தார். இவர்கள் தங்கியிருந்த வீடு குஷ்டரோகியாகிய சீமோனுடையது என்று வேதம் சொல்லுகிறது. (மத் : 26 : 6, மாற் : 14 : 3) அப்படியானால் இம் மூவரும் அவனுடைய பிள்ளைகளாக இருக்கலாம் என்றும், அலலது அவன் மார்த்தாளுடைய கணவனாக இருந்து மரித்து போயிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

இந்த குடும்பத்தார் இயேசுவை மிகவும் நேசித்தனர். மரியாள் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து எப்போதும் வசனத்தை கேட்கிறவளாய் இருந்தாள். இயேசுவின் பாதத்தில் பரிமள தைலம் ஊற்றினவள் இவளே. ஆனால் இவள் அந்த பாவியான ஸ்திரீ அல்ல. பாவியான ஸ்திரீ பரிமள தைலம் ஊற்றியது வேறு ஒரு சம்பவம் ஆகும். அந்த பாவியான ஸ்திரீ தன் பாவங்களை இயேசு மன்னித்ததால் பரிமள தைலம் ஊற்றி தன் நன்றியை தெரிவித்தாள். ஆனால் இந்த மரியாளோ தன் சகோதரன் லாசருவை இயேசு உயிரோடு எழுப்பினதினால், நன்றியறிதலோடு பரிமள தைலத்தை அவருடைய பாதத்தில் ஊற்றினாள். தேவையான நல்ல பங்கை மரியாள் தெரிந்து கொண்டாள்.

மரியாள் (கிலேயோப்பா மரியாள்) (4)

வேத ஆதாரம் : மத் : 27 : 56, மாற் : 15 : 40,47, 16:1,
லூக் : 24 : 10, மத் : 27 : 61, யோ : 19 : 25

அல்பேயு அல்லது கிலேயோப்பா என்று அழைக்கப்பட்ட ஒரு மனுஷனின் மனைவி. இந்த கிலேயோப்பா எம்மா ஊருக்கு போன இரண்டு சீஷர்களில் ஒருவன். சின்ன யாக்கோபு, யோசே என்பவர்களின் பெற்றோர்கள்தான்

இவர்கள். இதில் யாக்கோபு இயேசுவின் 12 அப்போஸ்தலர்களில் ஒருவன். இயேசு கிறிஸ்துவின் சிலுவையருகே நின்றவளும், கல்லறைக்கு எதிரே அமர்ந்திருந்தவளும், தேவதூதர்கள் இயேசுவின் உயிர்தெழுதலை அறிவித்த போது அருகே நின்றவளும், இயேசுவுக்கு சுகந்த வர்க்கமிடும் படி சென்றவளும் இந்த மரியாள்தான். வேதாகமத்தில் இவள் மூன்று விதங்களில் அடையாளப்படுத்தப்படுகிறாள்.

1. கிலேயோப்பா மரியாள்
2. சின்ன யாக்கோபின் தாய்
3. மற்ற மரியாள்

9. **மரியாள் (மாற்குவின் தாய்) (5)**

வேத ஆதாரம் : அப் : 12:12, கொலோ : 4 :10

ஆதித்திருச்சபையின் காலக்கட்டத்தில் இவளுடைய வீட்டில் தான் கிறிஸ்தவர்கள் கூடி ஜெபித்தார்கள். பேதுரு சிறைச்சாலையில் இருந்த போது சபையார் அவனுக்காக கூடி ஊக்கமாய் ஜெபித்த இடம் இந்த மரியாளின் வீடுதான். அது மாத்திரமல்ல, பெந்தேகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டதும் இவளுடைய வீடுதான் என்றும் கருதப்படுகிறது. இரண்டாம் சுவிசேஷமாகிய மாற்கு சுவிசேஷத்தை எழுதின மாற்குவின் தாய். பவுலோடு பிரயாணம் பண்ணின பர்னபா இவளுடைய சகோதரனாவான். இவளுடைய கணவரைப்பற்றி எவ்வித தகவலும் அறியப்படவில்லை.

10. **மரியாள் (ரோமாபுரியை சேர்ந்தவள்) (6)**

வேத ஆதாரம் : ரோமர் : 16 : 6

பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின நிருபத்தின் கடைசியில் அவருடைய வாழ்த்துதல் அட்டவணையில் இந்த மரியாளும் ஒருத்தி. மரியாள் ரோமாபுரியை சேர்ந்த கிறிஸ்தவ பெண்மணி. 'எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாள்' என்ற பதத்தின் மூலம் அவள் பவுலோடு சேர்ந்து ரோமாபுரியில் அதிக பிரயாசப்பட்டு ஊழியம் செய்தவள் என்பது விளங்குகிறது.

மாகலா : (MAHALAH)

பெயரின் அர்த்தம் : வியாதி, கவலை

வேத ஆதாரம் : I நாளா : 7 : 18

மனாசே கோத்திரத்தை சேர்ந்த அம்மொளெகேத்தின் மகள். இவளுக்கு இஸ்கோத் அபியேசர் என்னும் இரண்டு சகோதரர்கள் உண்டு. (அம்மொளெகேத் பார்க்கவும்).

மாகாள் : **(MAACAH)**

பெயரின் அர்த்தம் : ஒடுக்குதல்

வேத ஆதாரம் : I நாளா : 2 : 48

இவள் எஸ்ரோனின் குமாரனாகிய காலேபின் மறுமனையாட்டியாவாள். இவளுக்கு சேபேர், திர்கானா, சாகாப், சேவா ஆகிய நான்கு குமாரர் உண்டு. தன் தகப்பன் கொடுத்த நிலங்களில் திருப்தியடையாமல் கீழ்புறத்திலும், மேற்புறத்திலும் செழிப்பான நிலங்களை தன் விசுவாசத்தினால் கேட்டுப் பெற்றுக்கொண்ட அக்சாளின் தாய் இவளே. (அக்சாள் பார்க்கவும்)

மாக்காள் : **(1) (MAACHAH)**

பெயரின் அர்த்தம் : ஒடுக்குதல்

வேத ஆதாரம் : I நாளா : 7 : 12,15,16

இவள் பென்யமீன் கோத்திரத்தை சேர்ந்தவள். உப்பீம் சுப்பீம் என்பவர்களின் சகோதரி. மனாசே கோத்திரத்தை சேர்ந்த மாகீரின் மனைவி. இவளுக்கு பேரேஸ், சேரேஸ் என இரண்டு குமாரர்கள் உண்டு.

மாக்காள் : **(2) (MAACHAH)**

வேத ஆதாரம் : I நாளா : 8 : 29, 9:35

கிபியோனின் மூப்பனாகிய யெகியேலின் மனைவி. இவளுடைய வம்சத்தில் தான் ராஜாவாகிய சவுல் பிறந்தான்.

மாக்காள் : **(3) (MAACHAH)**

வேத ஆதாரம் : I நாளா : 3 : 2, II சாமு : 3 : 3

கேசூரின் ராஜாவாகிய தல்மாயின் குமாரத்தி. தாவீதின் எட்டு மனைவிகளில் இவளும் ஒருத்தி. தாவீதின் மூன்றாம் குமாரனாகிய அப்சலோமின் தாய். இவள் ராஜக்குடும்பத்தில் பிறந்து ராஜக்குடும்பத்திலேயே வாழ்க்கைப்பட்டது இவளது சிறப்பு.

16. **மாக்காள்** : (4) (MAACAH)

வேத ஆதாரம் : II நாளா : 11 : 20,21, 13:2, 15:16, I இராஜா : 15 : 1,2,13

அப்சலோமின் குமாரத்தியாகிய தாமாரின் மகள். ராஜாவாகிய ரெகோபெயாமின் 18 மனைவிகளில் அவனுக்கு மிகவும் பிரியமான மனைவி இந்த மாக்காள். இவள் யூதாவின் ராஜாவாகிய அபியாவின் தாய். இவள் விக்கிரகாராதனையில் அதிக ஈடுபாடு கொண்டவள். தனது பேரனாகிய ஆசா ராஜாவாகும் வரை அரண்மனையில் தனது பொறுப்பை நிலைநாட்டிக் கொண்டவள். ஆசா ராஜாவான பிறகு எல்லா விக்கிரகங்களையும் சுட்டெரித்துப் போட்டு மாக்காளை ராஜாத்தியாயிராதபடிக்கு விலக்கினான். II நாளா : 13 : 2ல் இவளுடைய பெயர் மிகாயாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

17. **மார்த்தாள்** : (MARTHA)

பெயரின் அர்த்தம் : பெண்மணி, அம்மாள் (எஜமானி)

வேத ஆதாரம் : லூக் : 10 : 38-41, யோவா : 11,12:1-3

II யோவான் முதலாம் வசனத்தில் சொல்லப்பட்ட 'அம்மாள்' என்ற வார்த்தை அதன் அர்த்தத்தைக் குறிக்காமல் அது ஒரு பெயர்ச்சொல் என்று பலர் கருதுகிறார்கள். அதாவது அம்மாள் என்று அர்த்தங்கொள்ளும் பெயரை எழுதுவதற்கு பதிலாக 'குரீயா' என்னும் கிரேக்க வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார்கள். 'குரீயா' என்பதற்கு பெண்மணி என்று அர்த்தமாகும். மேலும் கார்பஸோ என்பவர் இந்த வார்த்தை மார்த்தாளைக் குறிக்கிறது என்கிறார்.

மார்த்தாள் பெத்தானியாவை சேர்ந்தவள். மரியாள் மற்றும் லாசருவின் சகோதரி. இவர்கள் இயேசுவை மிகவும் அதிகமாய் நேசித்த குடும்பமாகும். மரியாள் இயேசுவின் பாதத்தருகிலேயே அமர்ந்திருந்தாள். ஆனால் மார்த்தாள் தான் இயேசுவை நேசிப்பதை வேறு வழியில் காட்டினாள். இயேசுவுக்கு உணவுக் கொடுத்து, உபசரித்து, அவருக்கு தேவையானதையெல்லாம் கொடுத்த அவளுடைய அன்பை வெளிப்படுத்தினாள். ஆனாலும் இயேசு அவர்களுடைய ஆத்துமா போஷிக்கப்படுவதையே பெரிதும் விரும்பினார். எனவே தான் மார்த்தாளைப் பார்த்து "நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்படுகிறாய் என்றார். (மரியாள் 3 பார்க்கவும்)

இவர்கள் தங்கியிருந்த வீடு குஷ்டரோகியாகிய சீமோனுடையது என்று மத் : 26 6 சொல்கிறது. எனவே இந்த சீமோன், மார்த்தாளின் தகப்பனாகவோ

கணவனாகவோ இருந்து பின் மரித்து போயிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இயேசு எப்போது பெத்தானியா வந்தாலும் இவர்கள் வீட்டில் தான் தங்குவார். தன் வழி பிரயாணத்தில் இளைப்பாறவும் ஓய்வெடுக்கவும் அங்கு வருவார். ஆனால் அவர் அங்கேயும் ஓய்ந்திருக்கவில்லை. எப்போதும் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கித்துக் கொண்டேயிருப்பார்.

மார்த்தாளின் வாழ்க்கை அவள் குடும்பத்தை சார்ந்ததாயிருந்தது. அவள் தன் பெயருக்கேற்ப ஒரு நல்ல குடும்ப தலைவியாக தன் சகோதரனையும் சகோதரியையும் கவனித்துக்கொண்டாள். தனது விருந்தினரான இயேசுவை உபசரிப்பதிலும் அதிக ஆர்வம் காட்டினாள்.

மிரியாம் : (MIRIAM) (1)

பெயரின் அர்த்தம் : கசப்பு, எதிர்ப்பு

வேத ஆதாரம் : யாத் : 15 : 20, 21, எண். 12 : 1-15, 20:1, 26:59
உபா : 24 : 9, மீகா : 6 : 4

அம்ராமுக்கும் யோகெபெத்துக்கும் பிறந்த பிள்ளைகளில் மூத்தவள் இவள்தான். ஆரோன் மற்றும் மோசேயின் சகோதரி. மோசே நாணல்பெட்டியில் வைக்கப்பட்டு நைல் நதியில் விடப்பட்ட போது அதை தூரத்திலிருந்து கண்காணித்து, பார்வோனின் மகளிடம் தன் தாயாகிய பிள்ளையின் சொந்த தாயையே, பிள்ளையை வளர்க்கும் தாதியாக கொண்டு போன புத்திசாலி மற்றும் பாசமுள்ள பெண் இவள் தான். பின்னர் செங்கடலை கடந்து போன போது இவள் தன் கையிலே தம்புருடை எடுத்து கர்த்தரை துதித்து பாடினாள். மற்ற பெண்களுக்கு இயல்பான ஒரு தலைவியாய் மாறி ஆராதனை நடத்தினாள். இங்கே வேதம் இவளை தீர்க்கதரிசியானவள் என்று அடையாளப்படுத்துகிறது.

ஜோசபஸ் என்ற யூத வரலாற்றாளர், ஆன்டிகுயிட்டீஸ் என்ற தமது நூலில், யாத் : 24 : 14ல் சொல்லப்பட்ட ஊர் தான் மிரியாமின் கணவர் என்கிறார். இது உண்மையானால், யாத் : 31 : 2 சொல்லப்படும் பெசலெயேல் என்னும் சித்திர கைவேலையாளன் மிரியாமின் பேரனாவார். ஆனால் மிரியாமின் கணவரைப்பற்றியோ, பிள்ளைகள் பற்றியோ வேதம் எதுவும் குறிப்பிடவில்லை. வேதம் மிரியாமை ஒரு தனி பெண்மணியாகவே காட்டுகிறது.

மோசே இஸ்ரவேலரை வனாந்திர வழியாய் நடத்தி சென்ற போது எத்தியோப்பிய தேசத்து பெண் ஒருத்தியை மறுமணம் செய்து கொண்டான். அப்போது மிரியாம்

வயது சென்றவளாயிருந்திருப்பாள். அவளால் இந்த திருமணத்தை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. மோசே திருமணம் செய்து கொண்டதாக சொல்லப்பட்ட எத்தியோப்பிய பெண் சிப்போராளாய் இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அவள் மீதியான் தேசத்து பெண். அதிலும் சிப்போராளோடு செய்த திருமணம் மிரியாமுக்கு பிடிக்க வில்லை என்றால் அவள் அவளை கடிந்துகொள்ள வனாந்திரம் வரும் வரை காத்திருக்க தேவையில்லை. ஏனெனில் மோசே சிப்போராளை முன்பே திருமணம் செய்து கொண்டான். சிப்போராளின் மரணத்திற்கு பின் இந்த எத்தியோப்பிய பெண்ணை மோசே திருமணம் செய்திருக்க வேண்டும். எத்தியோப்பிய பெண்மணியான அப்பெண்ணை மிரியாமுக்கு பிடிக்காததால் அவள் மோசேயை எதிர்த்து அவனுக்கு விரோதமாய் பேசினாள். மோசேக்கு நெருக்கமாய் இன்னொரு புறஜாதி பெண் வருவதை அவள் விரும்பவில்லை. அவளுடைய எண்ணம் தவறல்லவென்றாலும் அவள் பேசின வார்த்தைகள் தவறானவையே ஆகும். எனவே வெண்குஷ்டமடைந்து 7 நாள் பாளையத்திற்கு புறம்பாக்கப்பட்டாள். பின்னர் காதேஸ் வனாந்திரத்திலே மரித்து அடக்கம் பண்ணப்பட்டாள்.

19. **மிரியாம்** : **(MIRIAM) (2)**

வேத ஆதாரம் : I நாளா : 4 : 17

யூதா கோத்திரத்தைச் சேர்ந்த எஸ்றாவின் குமாரனாகிய மேரேத்தின் குமாரத்தி இந்த பெயருக்கு சொந்தக்காரர் ஒரு வேளை ஆணாகவும் இருக்கலாம் என்று வேத அறிஞர்கள் கருதுகிறார்கள்.

20. **மில்க்காள்** : **(MILCAH) (1)**

பெயரின் அர்த்தம் : ஆலோசனை

வேத ஆதாரம் : ஆதி : 11 : 29, 22 : 20,23, 24:15,24,47

இவள் ஆபிராமின் சகோதரனான நாகோரின் மனைவி. ஆபிராமின் இன்னொரு சகோதரனான ஆரானின் மகள். இஸ்க்காளின் சகோதரி. இவள் நாகோருக்கு எட்டு பிள்ளைகளை பெற்றாள். அதில் பெத்துவேல்தான் இளையகுமாரன். இந்த பெத்துவேல் லாபானுக்கும் ரெபேக்காளுக்கும் தகப்பனாவான்.

21. **மில்க்காள்** : (MILCAH) (2)

வேத ஆதாரம் : எண் : 26 : 33, 27:1, 36:11, யோசு : 17 : 3

செலோப்பியாத்தின் ஐந்து குமாரத்திகளில் இவள் நான்காம் குமாரத்தியாவாள். (ஓக்லாள் பார்க்கவும்)

22. **மீகாள்** : MICHAL

பெயரின் அர்த்தம் : ஓடை

வேத ஆதாரம் : I சாமு : 14 : 49, 18:20-28, 19:11-17, 25:44
II சாமு : 3 : 13,14, 6:16-23, 21:8, I நாளா : 15 : 29

மீகாள் சவுலின் இளையக்குமாரத்தி. அவளுடைய தாயின் பெயர் அகினோவாம். இந்த மீகாள் தான் தாவீதின் முதல் மனைவி. தாவீது பெலிஸ்தியனாகிய கோலியாத்தை கொன்ற செய்தியை அறிந்த மீகாள் தாவீதை நேசிக்கத் தொடங்கினாள். இந்த செய்தி ராஜாவாகிய சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது அவன் தாவீதின் மேல் கொண்ட பொறாமையை இதன் மூலம் பழி தீர்த்துக்கொள்ள எண்ணினான். தாவீது மீகாளை திருமணம் செய்து கொள்ள 100 பெலிஸ்தியரின் நுனித்தோல் மாம்சத்தை மாப்பிள்ளை வீட்டு பரிசமாக கொண்டு வரவேண்டும் என்றான். தாவீது 200 பெலிஸ்தியரைக் கொன்று இரட்டிப்பான பரிசம் கொடுத்து மீகாளை மணம் முடித்துக் கொண்டான். இதை சவுலால் தாங்க முடியவில்லை. எனவே தாவீதைக் கொல்ல அவன் வீட்டிற்கு ஆள் அனுப்பினான். இதை அறிந்துக் கொண்ட மீகாள் தன் கணவனை ஜன்னல் வழியாக இறக்கிவிட்டு அவனை தப்பியோட செய்தாள். ஆனால் இதன் பிறகு சவுல் தன் குமாரத்தியாகிய மீகாளை காலீம் ஊரானாகிய லாயீசின் குமாரனான பல்த்திக்கு கொடுத்தான். ஆனால் மீகாள் இதற்கு எப்படி ஒப்புக்கொண்டாள் என்பதுதான் விளங்கவே இல்லை. அவள் தாவீதின் மேல் கொண்ட நேசம் தணிந்து போனதோ என்னவோ!

ஆனால் பின்னர் தாவீது தன் மனைவியாகிய மீகாளை பல்த்தியிடமிருந்து மீட்டுக் கொள்கிறான். மீகாளுக்கும் தாவீதுக்குமான உறவில் வேதத்தில் எழுதப்பட்ட கடைசி நிகழ்வு எது தெரியுமா? தாவீது கர்த்தருடைய பெட்டியை திரும்ப தன் தேசத்திற்கு கொண்டு வந்த போது அவன் கர்த்தருக்கு முன்பாக குதித்து நடனம் ஆடினான். மீகாள் அதை ஜன்னல் வழியாய் பார்த்த போது அவனை தன் இருதயத்தில் அவமதித்தாள். அத்துடன் அவனுடனான தன் உறவை முடித்துக்கொண்டாள். முதல் முறை ஜன்னல் வழியாய் தன் கணவனை

இறக்கிவிட்டு தப்ப செய்த போது அவனை மிகவும் அதிகமாய் நேசித்தாள். இப்போதோ அதே ஜன்னல்! ஆனால் அவள் தாவீதை வெறுத்தாள்.

மீகாள் அரண்மனை வாழ்க்கையை விரும்பி தன் கணவரின் ராஜரீக தோற்றத்தையும் பகட்டையுமே விரும்பினாள். தாவீது தன்னை தாழ்த்தி ஒரு சாதாரண மனுஷனை போல ஆடிப்பாடினபோது அவன் ஒரு ராஜாவைப் போல நடந்துக் கொள்ளவில்லை என்று சொல்லி அவனை ஒதுக்கி வைத்தாள். மீகாளுக்கு அவள் காலமெல்லாம் பிள்ளையில்லாதிருந்தது. அவள் தன் மூத்த சகோதரியாகிய மேரப்பின் பிள்ளைகளுக்கு ஒரு தாயாக இருந்து வளர்த்தாள். II சாமு : 21 : 8ல் சொல்லப்பட்ட மீகாளின் ஐந்து பிள்ளைகள் அவளுடைய அக்காளின் பிள்ளைகளே. (மேரப் பார்க்கவும்)

23. மெகேதபேல் : (MEHETABEL)

பெயரின் அர்த்தம் : கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவள்

வேத ஆதாரம் : ஆதி : 36 : 39, I நாளா : 1 : 50

இவள் மத்ரேத்தின் குமாரத்தி. ஏதோமின் ராஜாவாகிய ஆதாரின் மனைவி. இவனுடைய பட்டணம் ஓரிடத்தில் பாகு, மற்றொருரிடத்தில் பாகி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (மத்ரேத் பார்க்கவும்)

24. மெசுல்லேமேத் : (MESHULLEMETH)

பெயரின் அர்த்தம் : பெண்பால் நண்பன் (அ) தோழி

வேத ஆதாரம் : II இராஜா 21:19

யோத்பா ஊரானாகிய ஆரூத்சின் குமாரத்தி. யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் குமாரனாகிய மனாசேயின் மனைவி. ஆமோனின் தாய். இவன் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்து விக்கிரகங்களை வணங்கினான். இவனுடைய பொல்லாத நடக்கைக்கு அவனுடைய தாயின் வளர்ப்பும் ஒரு காரணம் என்பதை ஒப்புக் கொண்டேயாகவேண்டும்.

25. மேரப் : (MERAB)

பெயரின் அர்த்தம் : பெருக்கம்

வேத ஆதாரம் : I சாமு : 14 : 49, 18 : 17,19

மேரப் சவுலின் மூத்த குமாரத்தி. தாவீது கோலியாத்தை கொன்ற உடனே அவள் தாவீதுக்கு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவள் மேகோலாத்தியனாகிய ஆதரியேலுக்கு கொடுக்கப்பட்டாள். அவள் அவனுக்கு ஐந்து பிள்ளைகளை பெற்றாள். ஆனால் மேரப் இளம் வயதிலேயே மரித்ததால் அவளுடைய தங்கையாகிய மீகாள் அந்த தாயில்லா பிள்ளைகளை வளர்க்கும் தாயானாள். கிபியோனியர் சவுலின் மேல் உள்ள இரத்தபழிக்காக 7 பேரை தூக்கிலிட தாவீதிடம் கேட்டபோது சவுலின் 2 பிள்ளைகளும் மேரப்பின் 5 பிள்ளைகளும் ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள். II சாமு : 21: 8ல் மீகாள் என்ற பெயர் மேரப் என்றே வாசிக்கப்பட வேண்டும். ஏனெனில் II சாமு : 6 : 23ன் படி மீகாளுக்கு பிள்ளையில்லை.

ய

யாகேல் : (JAEL)

பெயரின் அர்த்தம் : வரையாடு

வேத ஆதாரம் : நியா 4 : 17-22, 5:6, 24-27

யாகேல் கேனியனான ஏபேரின் மனைவியாவாள். நப்தலி தேசத்தில் உள்ள மேரம் என்ற ஆற்றுக்கு நான்கு மைல் வடமேற்கில் உள்ள கேதேசில் கூடாரம் போட்டு குடியிருந்தாள். (நியா : 4 : 11) அக்காலத்தில் கூடாரம் சம்பந்தமான எல்லா வேலைகளையும் வீட்டுப் பெண்களே செய்து வந்தனர். கூடாரத்தின் அறைகளை பிரிப்பது, அளவிடுதல் மற்றும் கூடார ஆணிகளை அடிப்பது போன்ற எல்லா வேலைகளையும் பெண்களே செய்து வந்தார்கள். பாராக் யாபீனின் சேனையை துரத்தின போது சேனாதிபதியான சிசெரா கால்நடையாய் ஏபேரின் கூடாரத்திற்கு ஓடிபோனான். அக்காலத்தில் ஏபேரின் குடும்பத்திற்கும் யாபீனுக்கும் சமாதானம் இருந்து வந்தது. எனவே யாகேல் அவனை உள்ளே அழைத்து அவனை ஒரு சமுக்காளத்தினால் மூடினாள். அவன் தாகத்திற்கு தண்ணீர் கேட்டான். அவள் பாலை குடிக்கக் கொடுத்தாள். பசியும் தாகமும் தீர்ந்தவுடனே அயர்ந்து தூங்கி விடுகிறான். ஏற்கனவே கூடார தொழிலில் பழக்கமுடைய யாகேல் ஒரு கூடார ஆணியைக் கொண்டு வந்து அவன் நெற்றியில் சுத்தியலால் அடித்தாள். அவன் மண்டை உடைந்து செத்துப் போனான். ஏற்கனவே நியா : 4 : 9ல் தெபோராள் சொன்ன தீர்க்கதரிசனம் இப்படியாய் நிறைவேறினது. விவேகமும் தைரியமும் கொண்ட யாகேல் கூடாரத்தில் வாசமாயிருக்கிற ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளாய் மாறினாள். (நியா : 5 : 24)

2. **யூதித்** : (JUDITH)

பெயரின் அர்த்தம் : யூதாவின் பெண்பால், யூத பெண்மணி (அ) துதி

வேத ஆதாரம் : ஆதி : 26:34

ஏத்தியனான பெயேரியினுடைய குமாரத்தி. ஏசாவின் மனைவி. அவன் ஏத்திய பெண்களாகிய யூதித்தையும் பஸ்மாத்தையும் விவாகம் பண்ணினது அவனுடைய பெற்றோராகிய ஈசாக்குக்கும் ரெபேக்காளுக்கும் மனநோவாயிருந்தது. ஆனால் வில்கின்சன் என்னும் வேத ஆராய்ச்சியாளர் இது முழுமையான ஒரு யூதப்பெயர் என்று குறிப்பிடுகிறார். துதி என்று அர்த்தங்கொள்ளும் யூதாவின் பெண்பால் பெயரே யூதித் என்கிறார். எனவே இது இவளுடைய திருமண சமயத்தில் வைக்கப்பட்ட பெயராய் இருக்கலாம். ஏனெனில் அக்காலங்களில் பெண்களுக்கு திருமண சமயத்தில் பெயரை மாற்றும் வழக்கம் இருந்து வந்தது. (அகோலிபாமாள் பார்க்கவும்)

இவளுடைய இயற்பெயர் அகோலிபாமாள். ஏசா இவளை திருமணம் செய்ததன் மூலம் தன் பெற்றோருக்கு வருத்தத்தையும் மனகசப்பையும் உண்டு பண்ணினான். ஒரு வேளை இவள் தன் மாமியாருக்கும் மாமனாருக்கும் செய்ய வேண்டிய கடமைகளை செய்யாதிருந்திருப்பாள் என்று நினைக்கிறேன். தன் பெற்றோருடைய மனகசப்போ என்னவோ, தான் ஏசா தன் சேஷ்ட புத்திரபாகத்தை இழக்கும் சூழ்நிலை உண்டானது.

வேதாகம நாட்களில் வாழ்ந்த இன்னொரு யூதித்தும உண்டு. யூதித் என்பது அப்போகிரஃபல் என்றழைக்கப்படும் தள்ளப்பட்ட ஆகமங்களில் ஒன்றான யூதித் புத்தகத்தின் கதாநாயகியாவாள். அவள் பயபக்தியும், தைரியமும் பாலினஒழுக்கமும் நிறைந்த ஒரு பெண்ணாவாள். ஆனால் இவளைப் பற்றி வேதத்தில் குறிப்பிடப்படாததால், தனி எண் இட்டு இவளை குறிப்பிடாமல் இப்படி எழுதுகிறேன்.

3. **யூலியாள்** : (JULIA)

பெயரின் அர்த்தம் : சுருள் சுருளாக தலைமுடியை உடையவள்

வேத ஆதாரம் : ரோமர் 16:15

ஜுலியஸ் என்ற லத்தினிய பெயரின் பெண்பால் வடிவம். ரோமாபுரியை சேர்ந்த கிறிஸ்தவப்பெண். அவளுடன் இணைத்து வாழ்த்தப்பட்ட பிலொலோகு அவளுடைய கணவராயிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவள் ரோம நாட்டின் அரசபேரவையை சேர்ந்தவள். பவுல் தான் எழுதிய நிருபத்தில் இவளை வாழ்த்துகிறார்.

யூனியா : (JUNIA)

பெயரின் அர்த்தம் : ஜூன் மாதத்தில் பிறந்தவள்

வேத ஆதாரம் : ரோமர் 16:7

யூனியாவைக் குறித்து பார்ப்பதற்கு முன்பாக, யூனியா என்ற பெயரின் அர்த்தத்தை குறித்து பார்ப்போம். யூனியா (ஜூனியா) என்ற பெயர் ஜூனோ என்ற பண்டைய ரோம புராண கடவுளின் பெயரிலிருந்து உண்டானது. ஜூனோ ஒரு பெண் பால் கடவுள். அவள் எல்லா தெய்வங்களுக்கும் மேற்பட்டவள். தலைமை கடவுளாகிய யூப்பித்தரின் மனைவி.

யூனியா எனபவள் ரோம் தேசத்தை சேர்ந்த கிறிஸ்தவள். அவள் அன்றோனீக் என்னும் ஒருவனோடு சேர்ந்து வாழ்த்தபடுகிறாள். இந்த அன்றோனீக் அவளுடைய கணவனாய் இருக்கலாம் என சிலர் கருதுகிறார்கள். மேற்கண்ட இந்த வசனத்தல் பவுல் இவளைக் குறத்து சில காரியங்களை சொல்கிறார். இவள் பவுலுக்கு முன்பாகவே இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவள். அடுத்ததாக 'இனத்தார்' என்ற வார்த்தை, அவள் பவுலோடு சேர்ந்து ஊழியம் செய்தவள் என்பதைக் குறிக்கிறது. கடைசியாக அவளும் அவள் கணவனாகிய அன்றோனீக்கும் பவுலோடு சேர்ந்து சிறையில் இருந்தவர்கள் ஆவர். இவர்களைக்குறித்து பவுல் சொல்லும் போது "அப்போஸ்தலர்களுக்குள்ளே பெயர் பெற்றவர்கள்" என்கிறார். இந்த வார்த்தையைக் குறித்து இரு வேறு விதமான விளக்கங்கள் எழும்பின. 'அப்போஸ்தலர்களில் இவர்கள் முக்கியமானவர்கள்' என்று ஒரு சிலரும், 'அப்போஸ்தலர்களுக்கு நன்கு அறிந்தவர்கள்' என்று வேறு சிலரும் வியாக்கியானம் செய்கிறார்கள். எது எப்படியோ இவர்கள் பவுலோடு சேர்ந்து கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ததும் பிரயசப்பட்டதும் உண்மையே.

யூனியா என்ற பெயரில் இன்னொரு சர்ச்சையும் உண்டு. சிலர் ஜூனியா என்ற பெயரை ஜூனியஸ் என்று மொழிப்பெயர்த்து அவரை ஒரு ஆணாக சித்தரிக்கின்றனர். ஆனால் அநேக வேத ஆராய்ச்சியாளர்கள் இவளை ஒரு பெண் என்றே கருதி அந்த கருத்துக்கு குரல் கொடுக்கிறார்கள்.

யேசபேல் : (JEZEBEL) (1)

பெயரின் அர்த்தம் : கற்புள்ளவள்

வேத ஆதாரம் : I இராஜா : 16 : 31, 18 : 4-9, 19 : 1,2, 21 : 5-25
II இராஜா : 9

அஸ்தரோத்தின் பூசாரியும் சீதோனியரின் ராஜாவுமாகிய ஏத்பாகாலின் மக ஏத்பாகால் என்றால் பாகாலின் மனுஷன் என்று அர்த்தமாகும். இப்படிப்ப ஒருத்தியை இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் திருமணம் செய்து அவ சந்தோஷப்படுத்தும் படியாக அவன் சமாரியாவிலே பாகாலுக்கு ஒ பலிபீடத்தைக் கட்டி, அஸ்தரோத்திற்கு விக்கிரக தோப்பையும் உண்டாக் கர்த்தரை கோபமூட்டினான். யேசபேல் அங்கே 450 பாகால் தீர்க்கதரிசிகள பணியில் அமர்த்தினான். அதுமட்டுமல்லாமல் வேறு 400 அஸ்தரோத்தி தீர்க்கதரிசிகளுக்கு ராஜபோஜனம் கொடுத்து, தங்க இடம் கொடுத் பராமரித்தாள். பின்னர் கர்த்தருடைய தீர்க்கதரிசியான எலியாவை கொல் திட்டமிட்டாள். யெஸ்ரயேலின் மகனாகிய நாபோத்தின் திராட்ச தோட்டத் அபகரிக்க அவனை கொலை செய்தாள். இதனால் கர்த்தருடைய வார்த் எலியா மூலம் அவளுக்கு உண்டாகி, அவள் பிரேதத்தை யெஸ்ரயேலி நிலத்தில் நாய்கள் தின்னும் என்றான். அப்படியே ஆகாப்பின் மரணத்திற்கு பி 11 ஆண்டுகள் கழித்து கர்த்தர் யெகூவின் மூலம் அதை செய்தார். யெக அரண்மனைக்கு போனான். யேசபேல் ஜன்னல் அருகே நின்றிருந்தாள் அப்போது யெகூ 'என் பட்சத்தில் இருக்கிறது யார்?' என்றான். இரண்டு மூன் பிரதானிகள் எட்டிப்பார்த்தார்கள். அவளை கீழே தள்ளுங்கள் என்றான் உடனடியாக அவர்கள் அவளை கீழே தள்ளினார்கள். அவள் கீழே விழுந் மரித்தாள். அவளுடைய இரத்தம் சுவர்களிலும் குதிரை மீதும் தெறித்தது. அவ உள்ளே போய், புசித்து குடித்து திரும்பி வந்து அவளை அடக்கம் பண்ணப்பார்த் போது அங்கே அவளது மண்டை ஓடு, உள்ளங்கை மற்றும் கால்கள் மாத்திரமே இருந்தது. மற்ற எல்லா பாகங்களையும் நாய்களும் ஓநாய்களும் தின்று போட்டது. கர்த்தருடைய தீர்க்கதரிசனம் இவ்வண்ணமாய் நிறைவேறியது.

6. **யேசபேல்** : 2 (JEZEBEL)

வேத ஆதாரம் : வெளி : 2 : 18-29

தன்னை தீர்க்கதரிசி என்று சொல்லிக்கொள்ளும் தீயத்தீரா ஊரை சேர்ந்த பெண் அவள் சில கிறிஸ்தவர்களை ஏமாற்றி விபசாரத்தில் தள்ளி, விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை சாப்பிட செய்தாள். இந்த யேசபேல் என்பது அடையாள பெயராக இருக்கலாம். அதாவது ஆகாப்பின் மனைவியாகிய யேசபேலை இது குறிக்கிறதாய் இருக்கலாம்.

இவள் புதிய ஏற்பாட்டின் யேசபேல் ஆவாள். தீயத்தீரா சபைக்கு தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட போது கர்த்தருடைய ஊழியக்காரரை வேசித்தனத்திற்குள்ளும் விக்கிரகாராதனைக்குள்ளும் வழி விலக செய்தவள் இந்த யேசபேல் என்று சொல்லப்படுகிறது. இந்த யேசபேல் உண்மையான ஒரு பெண் கிடையாது. மாறாக வேசித்தனத்திற்கும் விக்கிரகாராதனைக்கும் அடையாளப் பெயராக கருதப்படுகிறது. இவளுக்கு மனந்திரும்ப அநேக தவனைகள் கொடுக்கப்பட்டும் மனந்திரும்ப விருப்பமில்லை. அவள் மனந்திருப்பாததால் அவள் பிள்ளைகளை கொல்லுவேன் என்றும், அவள் கிரியைகளுக்கு ஏற்றபலன் அளிப்பேன் என்றும் அக்கினி ஜீவாலை போன்ற கண்களும் பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன் நியாயத்தீர்ப்பின் தீர்க்கதரிசனம் உரைத்தார். இதில் தியத்தீரா சபையார் செய்த பாவம் என்னவெனில் யேசபேல் என்னும் வேசித்தனத்திற்கும், விக்கிரகாராதனைக்கும் இடம் கொடுத்ததே. இது எங்கோ உள்ள தியத்தீரா சபைக்கான செய்தி மாத்திரம் அல்ல. இந்த எச்சரிப்பின் சத்தம் நமக்கும் தான்!. இன்றைக்கு அநேக கர்த்தருடைய ஊழியர்கள் மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ இத்தகைய பாவத்திற்கு இடம் கொடுக்கின்றனர். மனந்திரும்பும் தருணம் இப்போது நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் இப்போதே மனந்திரும்ப ஒப்புக்கொடுப்போம். இல்லையேல் நமது கிரியைகளுக்கான பலன் நமக்கு ஆயத்தப்படுத்தபட்டிருக்கிறது. இதுவே யேசபேலின் மூலம் நமக்கு உண்டான எச்சரிப்பின் சத்தம் ஆகும்.

யொவதானாள் : **(JEHOADDAN)**

பெயரின் அர்த்தம் : யெகோவா என் அலங்காரம்

வேத ஆதாரம் : II இராஜா : 14 : 2, II நாளா : 25 : 1

ராஜாவாகிய யோவாஸின் மனைவி. யூதாவின் ராஜாவாகிய அமத்சியாவின் தாய். இவள் எருசலேமை சேர்ந்தவள். அத்தாலியாள் இவளது மாற்றாந்தாய் ஆவாள்.

யோகெபேத் : **(JOCHEBED)**

பெயரின் அர்த்தம் : யெகோவா என் மகிமை

வேத ஆதாரம் : யாத் : 2 : 1-11, 6 : 20, எண் : 26 : 59, எபி : 11 : 23

லேவியின் மகளான யோகெபேத் அம்ராமின் மனைவியாவாள். அவள் அவனுக்கு அத்தை முறையாள். மிரியாம், ஆரோன், மோசே என்பவர்களின் தாய். அம்ராமின் தகப்பனுடைய சகோதரிதான் யோகெபேத். இவள் தன் சகோதரனுடைய மகனையே திருமணம் செய்திருந்தாள். நியாயபிரமாணத்திற்கு முன்பு இத்தகைய திருமணங்கள் தவறல்ல என்றே கருதப்பட்டது. யோகெபேத்தின் மூன்று பிள்ளைகளாகிய மிரியாம், ஆரோன், மோசே ஆகியோர் தேவனுக்கென்று தங்கள் தங்கள் வழியில் ஊழியம் செய்தார்கள். மிரியாம் பாடல்கள் இயற்றி, பாடி தேவனை துதிக்கும் துதிவீராங்கனையாய் மாறினாள். ஆரோன் இஸ்ரவேலின் முதல் பிரதான ஆசாரியனாய் மாறினான். மோசேயோ தேவனுடைய ஜனங்களை வழிநடத்தும் மகா பெரிய தலைவனும் தீர்க்கதரிசியுமானான். இப்படியாய் தன் பிள்ளைகளை நல்வழியில் நடத்தின பெருமை யோகெபேத்தையே சாரும்.

9. **யோசேபாள்** : (JEHOSHEBA)

பெயரின் அர்த்தம் : யெகோவா என் ஆணை

வேத ஆதாரம் : II இராஜா 11 : 2, II நாளா : 22 : 11

இஸ்ரவேலின் ராஜாவாகிய யோராமின் மகள், அகசியாவின் சகோதரி. ஆசாரியனாகிய யோய்தாவின் மனைவி. அத்தாலியா ராஜ்யத்தை தனதாக்கிக்கொள்ள விரும்பி தன் சொந்த பேரன்களையே கொல்ல நினைத்த போது அகசியாவின் மகனாகிய யோவாசை ஆறு வருடம் ஒளித்து வைத்தாள். நாளாகம புத்தகத்தில் இவளுடைய பெயர் யோசேபியாத் என்று கொடுக்கப்பட்டுள்ளது. இவள் அத்தாலியாளின் சக்களத்தி மகளாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ராஜ வம்சத்தை சேர்ந்தவளாகிய இவள் ஆசாரிய வம்சத்தை சேர்ந்த ஒருவனை திருமணம் செய்திருப்பது சரித்திர நிகழ்வாகும். (அத்தாலியாள் பார்க்கவும்)

10. **யோவன்னாள்** : (JOANNAH)

பெயரின் அர்த்தம் : யெகோவாவின் கருணை

வேத ஆதாரம் : லூக் : 8 : 1-3, 23:55, 24:10

ஏரோதின் காரியக்காரனாகிய கூசாவின் மனைவி. தன்னுடைய ஆஸ்திகளை கொடுத்து இயேசுவுக்கு ஊழியம் செய்த பெண்களில் இவளும் ஒருத்தி. மகதலேனா மரியாளோடு சேர்ந்து இயேசுவின் கல்லறைக்கு சென்ற ஸ்திரீகளில் ஒருத்தி இவள்.

ர

ராகாப் : **(RAHAB)**

பெயரின் அர்த்தம் : அகலமான, பரந்து விரிந்து, வலிமையான, புயல் காற்றின் இரைச்சலை போன்றவள்.

வேத ஆதாரம் : யோசு : 2 : 1,3, 6:17-25
மத் : 1 : 5, எபி : 11 : 31, யாக் : 2 : 25

ராகாப் எமோரிய ஜாதியாரான விக்கிரகாராதனைக்காரரைச் சார்ந்தவள். ராகாப் என்னும் ஒரு எகிப்திய கடவுளின் பெயரைகொண்டவளாயிருந்தாள். இவள் முதலில் ராகாப் என்னும் வேசி என்று வேதத்தில் அடையாளப்படுத்தபடுகிறாள். எரிகோவை சேர்ந்த இவளுடைய வீடு அதின் கோட்டை சுவர்களுக்கருகில் இருந்தது. யோசுவா பட்டணத்தை வேவுப்பார்க்க இரண்டு மனுஷரை அனுப்பின போது அவர்கள் இந்த ராகாப்பினுடைய வீட்டில் தங்கினார்கள். ராஜாவுக்கு இந்த விஷயம் தெரிந்த போது அவள் அவர்களை ஒளித்து வைத்து, அவர்களை தேடி வந்த சேவகரை திசைத்திருப்பி பின் அவர்களை சுவர் வழியாய் இறக்கி விட்டாள். அதனால் எரிகோ பட்டணம் அழிக்கப்பட்டபோது அவளும் அவளுடைய குடும்பத்தாரும் அவளுக்குண்டான எல்லாமும் காப்பாற்றப்பட்டது. பின்னர் அவள் இஸ்ரவேலர்களுக்குள்ளே தங்கியிருந்தாள். அவள் இஸ்ரவேலனான சல்மோனை திருமணம் செய்து போவாசைப் பெற்றாள். இவள் மூலம் தாவீதின் சந்ததி உருவாகி, இயேசு கிறிஸ்துவுக்கு தாயாகும் பாக்கியம் பெற்றாள். இவள் இஸ்ரவேலிய வேவுக்காரரை காப்பாற்றினதை 'விசுவாசத்னாலே அதை செய்தாள்' என்று எபிரெயர் ஆக்கியோன் குறிப்பிடுகிறார். மேலும் யாக்கோபு தன் நிருபத்தில் அவள் தன் 'விசுவாசத்தை' கிரியைகளினாலே வெளிப்படுத்தினாள் என்று குறிப்பிடுகிறார். அதனால்தான் அந்நியராய் பிறந்திருந்தாலும் மேசியாவுக்கு வம்சத்தாயாய் மாறும் பாக்கியம் கிடைத்தது.

ராகேல் : **RACHEL**

பெயரின் அர்த்தம் : பெண் செம்மறியாடு

வேத ஆதாரம் : ஆதி : 29, 30, 31, 46 : 19,22,25, 48:7
ரூத் : 4 : 11, I சாமு : 10 : 2, எரே : 31 : 15, மத் : 2 : 18

ராகேல் லாபானின் இளைய குமாரத்தி. யாக்கோபு தன் மாமன் மகளாகிய ராகேலை பார்த்த முதல் பார்வையிலேயே அவளை காதலிக்க தொடங்கிவிட்டான். அவள் அவ்வளவு பேரழகு நிறைந்தவள். பொதுவாக ஒரு பெண்ணை திருமணம் செய்ய மாப்பிள்ளை பெண்ணுக்கு பரிசத்தொகைக் கொடுக்க வேண்டும். ஆனால் யாக்கோபோ கோலும் கையுமாய் ஏசாவுக்கு பயந்து ஓடி வந்தவன். இப்போது அவனுக்கு பரிசத்தொகை கொடுக்க எந்த சொத்தும் இல்லை. எனவே தன் மாமன் லாபானுடைய நிபந்தனையின்படி ஏழு ஆண்டுகள் அவனுடைய ஆடுகளை மேய்க்க ஒப்புக்கொண்டான். ஆனால் ஏழு ஆண்டுகள் கழித்து அவனை ஏமாற்றி லேயாளை திருமணம் செய்து வைத்தான். பின்னர் இன்னும் 7 ஆண்டுகள் யாக்கோபு ராகேலுக்காக வேலை செய்தான். ஏனெனில் யாக்கோபு ராகேலை மிகவும் நேசித்தான். பின்பு அவளையும் திருமணம் செய்துக்கொண்டான்.

தன் கணவன் தன் சகோதரியாகிய லேயாளை விட தன்னை அதிகமாய் நேசித்ததால் அவளுக்குள் ஒரு வித பெருமை காணப்பட்டது. ஆனால் அவளுக்கு பிள்ளையில்லாமல் இருந்ததால் அவள் மிகவும் வேதனைப்பட்டாள். காரணம் தன் சகோதரி அநேக பிள்ளைகளுடன் சந்தோஷமாயிருந்தாள். பின்னர் தேவன் அவளுக்கு 'யோசேப்பை' கொடுத்தார். ராகேல் ஜீவனுள்ள தேவனுடைய வாக்குத்தத்தத்தின் சுதந்திரவாளியாகிய யாக்கோபின் மனைவியாயிருந்தாலும், அவள் ரகசியமாய் விக்கிரகங்களை வழிபட்டாள்.லாபானும் யாக்கோபும் பிரிய வேண்டிய நேரம் வந்த போது, அவன் தன் மனைவிகள், பிள்ளைகள் மற்றும் தனக்குண்டான எல்லாவற்றையும் கொண்டு செல்லும் போது, ராகேல் தன் தகப்பனுடைய விக்கிரகங்களை திருடி தன்னுடன் எடுத்து சென்றாள். தன்னுடைய பிரயாணத்தில் அந்த சொரூபங்கள் அவளுடன் இருந்தால் அது அவளுக்கு அதிர்ஷடமாக இருக்கும் என்று நம்பினாள். தன் தகப்பன் அதை யாக்கோபு தான் திருடிச் சென்றான் என்று குற்றப்படுத்தின போது கூட தன் தவறை உணராமல் அதை சாமர்த்தியமாய் மறைத்தாள். விக்கிரகாராதனை என்னும் தேவன் விரும்பாத கொடூரமான பாவத்தை செய்ததாலோ என்னவோ தேவன் அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தார். பின்னர் ராகேல் எப்பிராத்தாவுக்கு செல்லும் வழியில் பென்யமீனை பெற்றெடுத்து அங்கேயே மரித்து போனாள். யாக்கோபு அவளை அங்கேயே அடக்கம் பண்ணி அங்கே ஒரு கல்லை நாட்டி வைத்தான். அந்த கல் அநேக காலம் அப்படியே இருந்தது. அது செல்சாகில் இருக்கிறது (I சாமு : 10 : 2) ஜெரோம் என்பவரால் நான்காம் நூற்றாண்டில் இந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டது

அதை சரியென்று யூதர்களும், கிறிஸ்தவர்களும், முகமதியர்களும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். அந்த இடத்திற்கு 'குபேத்' ராஹீல் என்று பெயர். அதற்கு ராகேலின் கல்லறை என்று அர்த்தமாகும். அது ஒரு மசூதி போன்ற ஒரு இடம். அதன் கிழக்குப்புறம் ஒரு திறந்தவெளி கூடமும், மேற்குப்புறம் சிறிய ஜன்னல்கள் போன்ற அமைப்பை கொண்டதாகும். இப்போதுள்ள இந்த கட்டிடம் மிகவும் பழமை வாய்ந்தது அல்ல.

ரிஸ்பாள் : **(RIZBAH)**

பெயரின் அர்த்தம் : சூடான கல் (அ) அப்பம் செய்யும் சூடான கல்

வேத ஆதாரம் : II சாமு : 3 : 7, 21 : 8-14

ரிஸ்பாள் ஆயாவின் குமாரத்தியும் சவுலின் மறுமனையாட்டியுமாவாள். இவள் நிமித்தம் சவுலின் மற்றொரு குமாரனாகிய இஸ்போசேத்திற்கும், சவுலின் படைத்தலைவனாகிய அப்னேருக்கும் பிரச்சனை உண்டானது. இதனால் அப்னேர் சவுலினிடமிருந்து விலகி தாவீதுடன் சேர்ந்துக்கொண்டான். ரிஸ்பாள் சவுலுக்கு அர்மோனி, மேவிபோசேத் என்னும் இரண்டு குமாரரைப் பெற்றாள். கிபியோனியர் சவுலின் மேலுள்ள இரத்தப்பழிக்காக சவுலின் வம்சத்தை சேர்ந்த 7 பேரை தூக்கிலிட வேண்டும் என்று கேட்ட போது தாவீது சவுலின் மூத்த மகளாகிய மேரப்பின் 5 பிள்ளைகளையும் சவுல் ரிஸ்பாளிடம் பெற்ற 2 பிள்ளைகளையும் கிபியோனியரிடம் ஒப்புக்கொடுத்தான். பின்பு அந்த 7 பேரும் தூக்கிலிடப்பட்டார்கள். இந்த செய்தியை அறிந்த போது, ரிஸ்பாள் இரட்டு புடவையை எடுத்துக்கொண்டு போய் அவர்களை மூடி பறவைகளோ மிருகங்களோ அந்த சடலங்களை பீறிப்போடாதபடிக்கு அறுப்புகால துவக்கம் முதல் மழைக்காலம் வரும் வரை காவல் காத்துக் கொண்டிருந்தாள். இவள் தன் பிள்ளைகள் மேல் வைத்த அன்பும், பாசமும், வைராக்கியமும், தியாகமும், தைரியமும் நம்மை உண்மையாகவே வியக்க வைக்கிறது. பல நூற்றாண்டுகளாக அநேக பெண்கள் போராடுவதைப் போல் தனது கணவரையும் பிள்ளைகளையும் இழந்து நிராதரவாக போராடினாள் ரிஸ்பாள். இதனால் வறுமையும் தனிமையும் அவளை சூழ்ந்து கொண்டது. சவுல் தனது பெருமையினாலும் சுயமுடிவினாலும், முன்பு ஏற்கனவே யோசுவா கிபியோனியரிடம் செய்த உடன்படிக்கையை முறித்துப்போட்டான். கிபியோனியர் விக்கிரகாராதனைக்காரராயிருந்து வஞ்சகமாய் இந்த உடன்படிக்கையை செய்தாலும், யோசுவாவினால் கொடுக்கப்பட்ட ஆணை ஜீவனுள்ள தேவன் பேரிலேயே முத்திரையிடப்பட்டது. அதனால் சவுல் ராஜ்யபாரம் பண்ண துவங்கின

போது அவர்களை அந்நியர் என்று சொல்லி அழிக்கத் தொடங்கினான். அதனால் சவுலின் மரணத்திற்கு பின் தாவீதின் ராஜ்யபாரக்காலத்தில் சவுலின் மாறுதலுக்காக பழிவாங்க கிபியோனியர் சவுலின் குமாரரில் ஏழுபேரை தாவீதிடம் கேட்டார்கள். அப்போது தான் ரிஸ்பாள் சவுலுக்கு பெற்ற இரண்டு பிள்ளைகளையும் தாவீது கிபியோனியரிடம் ஒப்புக்கொடுத்தான். சவுல் கிபியோனியருக்கு கொடுக்கப்பட்ட ஆணையை மீறினதினாலே இஸ்ரவேல் தேசத்திலே மூன்று ஆண்டுகளாய் கடும் பஞ்சம் நிலவி வந்தது. தன் பிள்ளைகள் கொடூரமாய் கொல்லப்பட்டார்கள் என்று அறிந்த போது ரிஸ்பாள் மிகவும் துடிதுடித்து போனாள். செய்தியை அறிந்த உடனே தனது இரட்டு புடவையை எடுத்துக் கொண்டு போய் அந்த ஏழு பேர் மீதும் சுற்றினாள். தன் பிள்ளைகள் கொல்லப்படாமல் காப்பாற்ற அவளுக்கு எந்த அதிகாரமும் பலமும் இல்லை. ஆனால் தனது பிள்ளைகளின் சடலத்தையாவது காப்பாற்ற வேண்டும் என்பதில் மிகுந்த தீவிரமாய் இருந்தாள். இரட்டுப்புடவை என்பது துக்கத்தின் வெளிப்பாடாய் மட்டுமல்லாமல் தாழ்மையையும் கெஞ்சுதலையும், பாவமன்னிப்பையும் குறிக்கிறதாயிருக்கிறது. தன் பிள்ளைகள் கொல்லப்பட்டதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இந்த இடத்தில் சற்று கவனிக்க வேண்டிய காரியம் ஒன்று உண்டு. சவுல் செய்த மீறுதலினால் தேவன் கோபமாயிருந்தது உண்மைதான். அதற்கு தண்டனையாக தேவன் பஞ்சத்தை வருவித்திருந்தார். ஆனால் கிபியோனியரால் கொல்லப்பட்ட இந்த ஏழு பேரின் மரணம் தேவ தண்டனை அல்ல. மனுஷ தாகத்திற்காக பழிதீர்க்கப்பட்ட ஒரு செயலாகும். இவர்களை கொன்றால் என் கோபம் தணியும் என்று தேவன் சொல்லவே இல்லை.

இங்கே ரிஸ்பாளோ தன் கணவரின் மீறுதலுக்கு தன் பிள்ளைகளின் சடலத்தின் மேல் இரட்டுடுத்தி அவர்களை தேவனுக்கு முன்பாக தாழ்த்தினாள். தேவனுடைய கோபம் ஆறும்படி கெஞ்சினவளாய் அங்கேயே தங்கினாள். அங்கே அந்த ஏழு பேரின் சடலங்கள் தூக்கு மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தன. ஒரு தாயாக தன் தாய்மையையும் தாயன்பையும் வெளிப்படுத்தும் விதத்தில் தன் பிள்ளைகளின் சடலங்களை பிணந்தின்னி கழுகுகளுக்கும், காட்டு மிருகங்களுக்கும் விலக்கி பாதுகாக்கிறாள். ஒன்று அல்லது இரண்டு நாள் அல்ல, தேவனுடைய கோபம் நீங்கி மழை பெய்யும் நாள் வரை காத்திருந்தாள். மழை பெய்தால் தேவ கோபம் நீங்கி பஞ்சம் விலகினது என்று தானே அர்த்தம்! எனவே மழை பெய்யும் வரை அங்கே இரவும் பகலும் காத்திருந்து, தன் பிள்ளைகளின் சடலத்தையும் பத்திரமாய் பாதுகாத்தாள். ரிஸ்பாளின் அர்ப்பணிப்பும், தியாகமும் வைராக்கியமும், தாயன்பும் நம் கண்களில் கண்ணீரை வரவழைக்கிறது. ஒ

வேளை அந்த பிணங்கள் அழுகி நாற்றம் எடுத்திருக்கும். துஷ்ட மிருகங்களோடு அவள் போராடியிருந்திருக்கக்கூடும். தனிமையும் பயமும் கலக்கமும் அவளை சூழ்ந்திருக்கும். ஆனால் அவளது காத்திருப்பும் வைராக்கியமும் முடிவடையவில்லை. இதைப்பற்றி நான் வாசிக்கும்போது அது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. நிச்சயமாகவே ரிஸ்பாள் தாயன்புக்கு அடையாளமாக போற்றப்பட வேண்டியவளே! ரிஸ்பாளின் கண்ணீருக்கும் காத்திருப்புக்கும் ஒரு முடிவு வந்தது. தேவன் அவள் காத்திருப்புக்கும் இரட்டுக்கும், கெஞ்சுதலுக்கும் மனம் இரங்கினார். ரிஸ்பாளின் காரியம் ராஜாவாகிய தாவீதுக்கு தெரியவந்தது. ஏற்கனவே சவுல் மற்றும் யோனத்தானின் எலும்புகள் அடக்கம் செய்யப்படாமல் இருந்தது. அதனால் சவுல் மற்றும் யோனத்தானின் எலும்புகளோடு சேர்த்து இந்த ஏழு பேரின் எலும்புகளையும் சவுலின் தகப்பனாகிய கீசின் கல்லறையிலே தாவீது அடக்கம் பண்ணினான். I சாமு : 21 : 14ம் வசனத்தில் "அதற்கு பின்பு தேவன் தேசத்திற்காக செய்யப்பட்ட வேண்டுதலை கேட்டருளினார்" என்பதன் மூலம் பஞ்சம் விலகினது என்பதை அறிய முடிகிறது. ரிஸ்பாளின் விருப்பமும் காத்திருப்பும் நிறைவேறினது. எது எப்படியாயினும் ரிஸ்பாளின் வீரதீரமான செயல்பாட்டுக்கு இணையாக இலக்கியங்களில் கூட ஒரு சம்பவமும் சொல்லப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். எனவே தான் மேற்கத்திய எழுத்தாளரான டென்னிசன் 'ரிஸ்பா' என்ற பெயரில் ஒரு இலக்கியத்தை படைத்திருக்கிறார்.

ரூத் : (RUTH)

பெயரின் அர்த்தம் : பார்த்தல், பார்ப்பதற்கு தகுதியானவள்
(அ) பெண்பால் நண்பன், தோழி

வேத ஆதாரம் : ரூத் புத்தகம் முழுவதும், மத். 1:5

மோவாப் தேசத்தை சேர்ந்தவள். எலிமெலேக்கின் குமாரனாகிய மக்லோனின் மனைவி. தன் குடும்பத்தை சேர்ந்த மூன்று ஆண்களும் மரித்த போது ரூத் தன் மாமியாகிய நகோமியோடே இணைந்துக் கொண்டாள். நகோமியின் ஜனத்தை தன் ஜனமாகவும், நகோமியின் தேவனை தன் தேவனாகவும் ரூத் ஏற்றுக்கொண்டாள். தன் கணவன் மரித்தபோன துக்கம் ஒரு புறம் இருந்தாலும் தன் வாழக்கையை மோவாப் தேசத்தை விட்டு யூதா தேசத்தில் தொடர விரும்பினாள். அதற்கு காரணம், அவள் மோவாப் தேசத்து பெண்ணாயிருந்தாலும், ஜீவனுள்ள தேவனை அறிந்திருந்தாள். நகோமியும் ரூத்தும் இஸ்ரவேல் தேசம் வந்தபோது அது வாற்கோதுமை அறுப்புக்காலமாய் இருந்தது. கீழே சிந்தும் தானியங்களை

பொறுக்கும்படியாய் ரூத் வந்தபோது அது தற்செயலாய் தன் மாமனாருடைய நெருங்கிய உறவின் முறையானும் செல்வந்தனுமாகிய போவாசின் நிலமாயிருந்தது. போவாஸ் ரூத்தை மரியாதையுடனும் அன்புடனும் நடத்தினான். பின்னர் தன் மாமியின் ஆலோசனையின் படி அவள் நடந்த போது, போவாசுக்கும் ரூத்துக்கும் திருமணம் நடந்தது. போவாஸ் ரூத்தின் முதல் கணவனாகிய மக்லோனின் சகோதரனல்லவென்றாலும் அவன் அவளை திருமணம் செய்யும் அளவிற்கு நெருங்கிய உறவின் முறையானாய் இருந்தான். தேவன் அவர்களுக்கு ஒரு ஆண் பிள்ளையை கட்டளையிட்டார். அதற்கு ஓபேத் என்று பேரிட்டார்கள். ஓபேத் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பனாவான். இவ்வண்ணமாய் ரூத் தாவீதின் மூதாதையராய் மாறினாள். இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாற்றிலும் இடம்பிடித்தாள். (நகோமி, ஓர்பாள் பார்க்கவும்)

5. **ரெபேக்காள்** : **(REBECCA)**

பெயரின் அர்த்தம் : 'முடிச்சி போடப்பட்ட கயிறு' ஆடுமாடுகளை கட்ட பயன்படுத்தும் (சுருக்கு கயிறு) கயிறு அதாவது பெண்கள் தங்கள் அழகினால் ஆண்களை கட்டி இழுப்பதைக் குறிக்கிறது.

வேத ஆதாரம் : ஆதி : 22 : 23, 24,25:20-28, 26:6-35,27
28:5, 29:12, 25:8, 49:31, ரோமர் 9:6-16

பெத்துவேலின் மகள், லாபானின் சகோதரி. ஆபிரகாமின் வேலைக்காரனான எலியெசருக்கும் அவள் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்த்து, தானே ஈசாக்குக்கு தேவன் நியமித்த பெண் என்பதை தான் அறியாமலேயே எலியேசருக்கு வெளிப்படுத்தினாள். பின்னர் ஈசாக்குக்கும் ரெபேக்காளுக்கும் திருமணம் நடந்தது. ரெபேக்காள் தன் பெயரின் அர்த்தத்திற்கேற்ப ஈசாக்கின் கழுத்தில் முடிச்சி போடப்பட்ட கயிறாய் விழுந்து தனது அழகினாலும் அன்பினாலும் கட்டி வைத்தாள். இதனால் ஈசாக்கு தன் தாயின் மரணத்தினால் உண்டான துக்கம் நீங்கி அவளோடு சந்தோஷமாயிருந்தான். பின்னர் தேவன் ரெபேக்காளுக்கு ஏசா, யாக்கோபு என்னும் இரட்டை பிள்ளைகளை கொடுத்தார். ரெபேக்காள் ஏசாவைக் காட்டிலும் யாக்கோபை அதிகமாய் நேசித்தாள். எனவே தன் தகப்பனுடைய ஆசீர்வாதத்தை யாக்கோபு தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தந்திரமாய் கிரியை செய்து எல்லா ஆசீர்வாதங்களையும் யாக்கோபே பெறும்படி செய்தாள். அதனால் தானோ என்னவோ அவள் தன் செல்ல மகனை பிரிய வேண்டியிருந்தது. நடந்த காரியங்கள் ஏசாவுக்கு தெரிந்தால் அவன் தன் சகோதரனை கொன்று விடுவான் என்று பயந்து அவனை தன் சகோதரனாகிய லாபான் வீட்டிற்கு அனுப்பி வைத்தாள். பின்பு ரெபேக்காள் மரித்து, கானான் தேசத்திலே மம்ரேக்கு எதிராக உள்ள மக்பேலா

என்னும் ஏத்தியனான எப்பிரோனின் நிலத்தில் உள்ள குகையிலே அடக்கம் பண்ணப்பட்டாள். அந்த இடத்தை ஆபிரகாம் தன் குடும்பத்தினருக்கான சொந்த கல்லறை பூமியாக எப்பிரோனிடத்தில் வாங்கியிருந்தான்.

6. **ரேயுமாள் : (REUMAH)**

பெயரின் அர்த்தம் : 'உயர்த்தப்பட்ட'

வேத ஆதாரம் : ஆதி : 22 : 24

வேதத்தில் மறுமனையாட்டி என்று அடையாளப்படுத்தப்பட்ட முதல் பெண்மணி இந்த ரேயுமாள் தான். இவள் ஆபிரகாபின் சகோதரனாகிய நாகோரின் மறுமனையாட்டியாவாள். இவள் தேபா, காகாம், தாகாஸ், மாகா என்னும் நான்கு பிள்ளைகளை பெற்றாள்.

7. **ரோதை : (RHODA)**

பெயரின் அர்த்தம் : ரோஜா (அ) ரோஜா செடி

வேத ஆதாரம் : அப் 12 : 13-16

ரோதை மாற்குவின் தாயாகிய மரியாளின் வீட்டு வேலைக்காரப் பெண். மரியாளின் சகோதரனாகிய பர்னபாவின் சொந்த ஊராகிய சீப்புரு தீவிலிருந்து அழைத்து வரப்பட்டவள். இவள் வெளிநாட்டை சேர்ந்தவளாயினும் கிரேக்க பெயரைக் கொண்டிருப்பது அக்காலங்களில் இயல்பான ஒரு காரியமாகும். பேதுரு சிறைசாலையிலிருந்து தூதனால் அற்புதமாய் வெளியே கொண்டவரப்பட்டபோது அவன் தாங்கள் வழக்கமாய் கூடும் மரியாளின் வீட்டிற்கு வந்து கதவை தட்டினான். உள்ளேயோ விசுவாசிகள் அவனுடைய விடுதலைக்காய் ஊக்கமாய் ஜெபித்தார்கள். உடனே வேலைக்கார பெண்ணான இவள், எழுந்து போய் பார்க்கிறாள். அங்கே பேதுருவின் சத்தத்தை கேட்ட போது, ஆச்சரியப்பட்டு அதை அங்கிருந்தவர்களுக்கு அறிவித்தாள். ஆனால் அவர்கள் அதை நம்பவில்லை. ரோஜா என்ற அழகிய பெயரை கொண்டவளாயிருந்தும் அவளை அங்கே மனியாஸ் என்றழைத்தார்கள். அதற்கு பைத்தியக்காரி என்று அர்த்தமாகும். ஆனால் ரோதையோ அது பேதுருதான் என்பதில் உறுதியாயிருந்தாள். கதவை திறந்த போதோ அவர்களெல்லாரும் பேதுருவை கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்.

ல

1. **லீதியாள்** : (LYDIA)

பெயரின் அர்த்தம் : லீதியா ஊரை சேர்ந்தவள்
வளையக்கூடிய (அ) கனம் பொருந்திய"

வேத ஆதாரம் : அப் : 16 : 12-15,40

தீயாத்திரா ஊரை சேர்ந்தவள். அதில் உள்ள ஒரு பட்டணம் தான் லீதியா. இப்பெயர் 'லூத்' அல்லது 'லூதியர்' என்ற பெயரிலிருந்து உண்டானது (எசே. 30 : 5, ஆதி 10 : 22)

தீயாத்திரா சாயத்தொழிலுக்கு பேர்போன்றது. லீதியாள் பிலிப்பி பட்டணத்தில் வாழ்ந்து அங்கே இரத்தாம்பர சாயமும், அதனோடு சம்பந்தப்பட்ட பொருட்களையும் விற்று பிழைத்து வந்தாள். பவுல் பிலிப்பி பட்டணத்திற்கு வருவதற்கு முன்பே அவள் கர்த்தரை ஆராதித்து வந்தாள். இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை பவுல் அறிவித்த போது அவள் அதை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டாள். அவள் வருந்தி கேட்டுக்கொண்டதினிமித்தம் பவுலும் அவனோடிருந்தவர்களும் லீதியாளின் வீட்டில் தங்கி ஊழியம் செய்தார்கள்.

2. **லேயாள்** : (LEAH)

பெயரின் அர்த்தம் : தளர்ந்துபோன, சோர்ந்து போன

வேத ஆதாரம் : ஆதி : 29,30, 49 : 31, ரூத் : 4:11

யாக்கோபின் மூத்த மனைவி. தன்னுடைய தகப்பன் லாபானால் ஏமாற்றி திருமணம் செய்து வைக்கப்பட்டவள். கூச்ச பார்வை உடையவள். இவள் யாக்கோபுக்கு ஆறு பிள்ளைகளை பெற்றாள். இவள் தன் பிள்ளைகளுக்கு பெயர் வைத்த விதம் மிகவும் வருணிக்கத்தக்கது. இவளுடைய வேலைக்காரியாகிய சில்பாள் இவள் குடும்பத்திற்கு இன்னும் இரண்டு பிள்ளைகளை கூட கொடுத்தாள். தன் கணவன் தன்னை நேசிக்கவில்லையே என்ற ஆதங்கம் எப்போதும் இவள் மனதில் இருந்து வந்தது. தன் சகோதரியாகிய ராகேலை விட அழகு குறைந்தவளாக இருந்ததால் இந்த பாகுபாடு சகோதரிகளுக்குள் எப்போதுமே இருந்து வந்தது. ஆனாலும் இவள் தன் கணவனாகிய யாக்கோபை தான் மரித்து மக்பேலா என்னும் குகையிலே அடக்கம்

பண்ணும் வரை உண்மையாய் நேசித்து தன் தேவன் மேல் அசையாத விசுவாசம் கொண்டிருந்தாள். அவளுடைய விசுவாசம் அவள் தனது பிள்ளைகளுக்கு இட்ட பெயரிலிருந்து விளங்கும்.

3. **லோருகாமா : (LO-RUHAMAH)**

பெயரின் அர்த்தம் : 'இனி இரக்கம் செய்வதில்லை'

வேத ஆதாரம் : ஓசியா 1: 6,8

இவள் ஓசியாவுக்கும் கோமேருக்கும் பிறந்த மகள். இவளுடைய பெயர் ஒரு அடையாளப் பெயராக பயன்படுத்தப்படுகிறது. இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் தம்மை விட்டு அகற்றினபோது 'இனி அவர்களுக்கு இரக்கம் செய்வதில்லை' என்பதற்கு அடையாளமாக இப்பிள்ளைக்கு லோருகாமா என்று பேரிடப்பட்டது. (கோமேர் பார்க்கவும்)

. **லோவிசாள் : (LOIS)**

பெயரின் அர்த்தம் : 'ஒத்துக்கொள்ளப்பட்ட (அ) விரும்பப்பட்ட'

வேத ஆதாரம் : II தீமோ 1: 5

ஐனிக்கேயாளின் தாயும், தீமோத்தேயுவின் பாட்டியுமானவள் தான் இந்த லோவிசாள். வேதாகமத்தில் 'பாட்டி' என்ற அடையாளம் லோவிசாளுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. இவள் ஒரு பக்தியுள்ள யூத பெண்மணி. அதனால் தனது மகளுக்கும் பேரனுக்கும் பழைய ஏற்பாட்டு வசனங்களை போதித்து வளர்த்தாள். இவர்கள் லீஸ்திரா என்னும் ஊரில் வசித்து வந்தனர். பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கித்த போது அதை குடும்பமாய் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டார்கள். எனவே தான் பவுல் 'விசுவாசம் அவர்களுக்குள் நிலைத்திருந்தது' என்று எழுதுகிறார். (ஐனிக்கேயாள் பார்க்கவும்)

வ

1. வஸ்தி : (VASHTI)

பெயரின் அர்த்தம் : 'அழகு நிறைந்தவள்' அல்லது 'இனிமையானவள்'

வேத ஆதாரம் : எஸ்தர் 1, 2:1, 4:17

பேரழகு நிறைந்த வஸ்தி ராஜாவாகிய அகாஸ்வேருவின் ராணி. அகாஸ்வேருவின் 127 நாடுகளின் ராஜ்யத்தில் அவளே பேரழகு நிறைந்தவளாய் இருந்தாள். எனவே தான் ராஜா தனது மனைவியின் அழகை தன் குடிபோதையிலும் வருணித்து, அவளை தனது விருந்தினருக்கு காட்ட நினைத்தான். எஸ்தர் புத்தகத்தில் எஸ்தரை பற்றி அநேக காரியங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும், புத்தகத்தின் தொடக்கத்தில் ஒரு சிறு பகுதியில் மட்டும் வந்து சென்றாலும் நம் மனதில் நிற்கக்கூடிய வகையில் இருப்பது வஸ்தியின் சிறப்பு. வஸ்தி தன் அழகான முகத்தையும் தன் பேரழகையும் குடிபோதையுடன் உள்ள இச்சையான கண்களுக்கு விருந்தாக்க விரும்பவில்லை. இதற்காகத் தன் ராணி பட்டத்தையும் இழக்க தயாராக இருந்தாள். ஒரு மனைவி தன் கணவனுக்கு கீழ்ப்படியவேண்டியது அவசியமானாலும், இங்கே வஸ்தியின் கீழ்ப்படியாமை பாராட்டுதலுக்குரியதே. அவள் தன் பெண்மைக்காக வைராக்கியம் பாராட்டி தன் தைரியத்தை வெளிப்படுத்தி வீரதீர பெண்மணியாக தன்னை நிலைநாட்டிக் கொண்டாள்.

பெர்சியா தேசத்தின் அழகியான வஸ்தியைக் குறித்த வேத வல்லுநரான E.W. புல்லிஞ்சர் கூறும் போது அவள் லீதியா என்னும் ஊரின் ராஜாவாகிய அல்யாட்டஸ் என்பவரின் மகள் என்கிறார். ஆனால் இது உண்மையான தகவல்தானா என்பது அறியப்படவில்லை. ஆனால் வேதாகமம் வஸ்தியை நமக்கு பெர்சிய நாட்டு இளவரசியாக மகாராணியாகவுமே காட்டுகிறது.

பெர்சிய தேசத்தின் தலைநகரான சூசானில் ஒரு பெரிய விருந்து நடந்துக் கொண்டிருந்தது. அங்கே இந்தியா முதல் எத்தியோப்பியா வரையுள்ள 127 நாடுகளின் மகாராஜாவாகிய அகாஸ்வேருவும் சிறியோர் முதல் பெரியோர் வரையான அனைத்து தலைவர்களும் கூடி மது அருந்தி விருந்து நடந்துக் கொண்டிருந்தது. இந்த விருந்துக்கு மேலும் உற்சாகமூட்ட பேரழகியாக தன் மனைவியை தன் விருந்தினர்களுக்கு காட்ட நினைத்தான்.

பொதுவாக கிழக்கத்திய பெண்கள் இத்தகைய மது விருந்துகளில் அழைத்துவரப்பட்டால் அதை அவமானமாக கருதுவார்கள். வஸ்தியும் இதை அவமானமாகவே கருதினாள். அவள் ராஜ வஸ்திரமும் கிரீடமும் சூட்டினவளாய் அவர்கள் முன் வந்தாலும் தன்னையும் தன் பெண்மையையும் மற்றவர்கள் கண்களுக்கு விருந்தாக்க அவள் விரும்பவில்லை.

மேலும் புளுட்டார்க் என்பவர் கூறும் போது, பொதுவாக பெர்சிய ராஜாக்கள் பெரிய விருந்துகளின் சமயத்தில் தனது மகாராணியை தன் அருகில் அரியணையில் அமரசெய்வது வழக்கம். ஆனால் மது விருந்து சமயத்தில் கனம் பொருந்திய மகாராணியை உள்ளே அனுப்பிவிட்டு, அவளுக்கு பதிலாக ராஜாவின் மற்ற மனைவிகளையும், மறுமனையாட்டிகளையும் அழைத்து வருவார்கள் என்று கூறுகிறார். எனவேதான் வஸ்தி ராஜா தன்னை அழைக்கும் போது, அவர் தன்னை பட்டத்து ராணி என்று மதிக்காமல், ஒரு மறுமனையாட்டியைப் போல நடத்தியதாக கருதினாள்.

பொதுவாக இன்றைய போதகர்கள் வஸ்தியை தவறான ஒரு பெண்மணியாக வருணிப்பதைத்தான் அதிகமாய் கேட்டிருக்கிறேன். ராஜாவாகிய அகாஸ்வேருவை தேவனோடு ஒப்பிட்டு, வஸ்தி ராஜாவுக்கு கீழ்ப்படியாததால் தன் ராஜாத்தி பட்டத்தை இழந்து போனாள் என்று சொல்வார்கள். அதாவது தேவனுக்கு நாம் கீழ்ப்படியாவிட்டால் நாமும் நம்முடைய ஆசீர்வாதங்களை இழந்து போவோம் என்று சொல்வார்கள். தேவனுக்கு கீழ்ப்படியவேண்டியது அவசியமானாலும், அகாஸ்வேரு ராஜாவை தேவனோடும் வஸ்தியை கீழ்ப்படியாதவளுமாய் சித்தரிப்பது மிகவும் தவறான ஒரு கருத்தாகும். ஏனெனில் அகாஸ்வேரு ராஜா குடிபோதையில் தன் பெருமையை வெளிப்படுத்த தன் அழகிய மனைவியை மற்ற குடிகாரர்களின் கண்களுக்கு விருந்தாக்க நினைத்தான். இத்தகைய ஒருவனை தேவனோடு ஒப்பிடுவது எப்படி தகும்? எனவே, இனியாவது ஒரு பெண்ணை இழிவுப்படுத்துவதாக எண்ணி வஸ்தியை இழிவுப்படுத்த வேண்டாம். வஸ்தி கீழ்ப்படியாதவள் அல்ல! அவள் தன் தகுதியை அறிந்தவளும், தன் பெண்மையை மதித்தவளும், ராஜாத்தி பட்டத்தையும் துச்சம் என மதித்து தன் தைரியத்தையும் துணிச்சலையும் வெளிப்படுத்தினவள்! அவள் தன் பட்டத்தை இழந்த பின் என்ன ஆனாள் என்பது அறியப்படாவிட்டாலும் அவள் செய்த இந்த ஒரு காரியத்தினாலேயே சரித்திரத்தில் நிலை நின்றாள்.

நூலைப் பற்றி...

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள். இப்புத்தகத்தின் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

தேவன் கடந்த 2011 ஆம் ஆண்டு THE SCRIBE OF JESUS என்னும் எழுத்து ஊழியத்தைக் கொடுத்தார். அதன் மூலம் இதுவரை மொழிப்பெயர்ப்புகள் மாத்திரமே செய்து வந்தேன். இப்போதும் தேவ நடத்துதலின்படி எனது முதல் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறேன்.

ஒரு முறை எனது 10 வயது மகளுடன் விளையாடிக் கொண்டிருந்த போது வேதாகமத்திலிருந்து 10 பெண்கள் பெயர்களை கூறும்படி கேட்டேன். அவளால் 6 அல்லது 7 பெயர்களையே கூற முடிந்தது. என்னாலும் 20 பெயர்களுக்கு மேல் சொல்ல முடியவில்லை. அப்போது வேதாகமத்தில் உள்ள பெண்களைக் குறித்து தியானிக்க தொடங்கினேன். தேவன் பொக்கிஷமாய் பல காரியங்களை வெளிப்படுத்தினார். பின்னர் அதை புத்தகமாய் வெளியிடும்படி ஆவியானவர் ஒத்தாசையோடு தீர்மானித்தேன். அதற்குரிய தலைப்பையும் தேவனே எனக்கு கொடுத்தார்.

இது வேதாகமத்திலுள்ள சுமார் 170 பெண்களின் வாழ்க்கைக் குறிப்புகளைக் கொண்ட முழுமையான படைப்பாகும். இதில் சிறப்பான காரியம் என்னவென்றால் ஒவ்வொரு பெண்களின் பெயருக்கான அர்த்தத்தையும் அவர்கள் வாழ்ந்த காலத்தையும் வேதஆதாரத்துடனும் பின்னணி தகவல்களுடனும் இணைத்து எழுதியிருக்கிறேன்.

இது பெண்கள் கூட்டங்களுக்கும், தனி வேத தியானத்திற்கும், பிரசங்கிப்பதற்கும் ஏற்ற இணைப் புத்தகம் ஆகும். இது உங்களுக்கு நிச்சயமாய் பிரயோஜனமாய் இருக்கும் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

உங்கள் மேலான கருத்துக்களை எங்களுக்கு எழுத மறவாதிருங்கள் !

கர்த்தர் சீயோனிலிருந்து உங்களை ஆசீர்வதிப்பாராக !

கிறிஸ்துவின் உன்னத பணியில்,

சகோதரி **டயனா சாலொமோன்**

விரைவில் எதிர்பாருங்கள்! எமது அடுத்த வெளியீடு!

வேதாகம விலங்குகள் 100

ஜெபத்திற்கும் ஆலோசனைக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

THE SCRIBE OF JESUS

9/129 'B' Type, Sidco Nagar, Villivakkam, Chennai-600 049.

Ph:044-4350 4812, Cell: 9551746677, 7845672767

Email : scribe.salomidiana@gmail.com

Jesus Printers - 8015463686